DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com, Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons), Sales Representative
416-648-9757
CENTURY 21 Innovative Realty Inc.

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524
www.uthayannews.ca
உதயம் 1321
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 30, 2021

# எதிர்வரும் ஆகஸ்ட் ஆறாம் நாள் வெள்ளியன்று வெள்ளி விழா மலராக விரிகின்றான் உங்கள் உதயன்



1996ம் ஆண்டு மே மாதம் 3ம் நாள் ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் எமது 'உதயன்' பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியிடப்பெற்றது. அதன் முகப்புப் பக்கத்தை இங்கே காண்கின்றோம். ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தின் பிரதம குரு, சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் கணேச சுவாமிகளின் கரங்களினால் தற்போதைய ஈஸ்ட் எப். எம் 102.7 வானொலி நிலையத்தின் அதிபர் நண்பர் நடா ராஜ்குமாருக்கு வழங்கப் பெற்ற முதலாவது இதழின் முதற்பிரதி இன்றும் எம்மிடம் உள்ளது. அன்றிலிருந்து தொடங்கி உதயனின் ஊடகப் பயணம், 25 ஆண்டுகளைக் கடந்தமைக்காக, 2021 ம் ஆண்டு வெள்ளி விழா என்னும் மகுடன் சூடப்படவுள்ளது.

அதன் அடையாளமாக நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களுடனும் அதிக பிரதிகளுடனும் எதிர்வரும் ஆகஸ்ட் ஆறாம் நாள் வெள்ளிக்கிழமையன்று வெள்ளி விழா சிறப்பிதழை எமது வாசகர்களுக்காகவும் எழுத்தாள நண்பர்களுக்காகவும் வர்த்தகப் பெருமக்களுக்காகவும் தயாரித்து வழங்கவுள்ளோம்.

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET
CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 272 1222
905 794 4404

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award — 100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

உதயன் கதிரோட்டம்

# இருபத்தைந்து ஆண்டுகளை கடந்து செல்லும் வேளையிலும் இலங்கையில் இடையூறுகள் சூழ்ந்த நிலையில் தமிழர் பிரதேசங்கள்

எமது ஊடகப் பயணத்தின் இருபத்தைந்தாவது ஆண்டை நாம் கடந்துள்ளோம். இத்தனை ஆண்டுகள் எம் இதழியல் பங்களிப்பு இதயங்களோடு இணைந்தாகவே நகர்ந்துள்ளது. இந்த நீண்ட காலப் பகுதியில் எமது தாயகம், தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் தேசங்கள், எமது தாய்த் தமிழகமான தென்னிந்தியா ஆகிய தளங்களிலும் நாம் பயணித்துள்ளோம்.

இன்றைய முகப்புப் பக்கத்தில் நாம் காட்சிப்படுத்தியிருக்கின்ற எமது 'உதயன்' முதலாவது இதழின் முகப்புப் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக 03-05-1996 அன்று வெள்ளிக்கிழமை நாம் பதித்த எழுத்துக்கள் இன்னும் அழியாமல் உள்ளன.

*'வடபகுதி மக்கள் மிருகங்கள் போல நடாத்தப்படுகின்றாரகள்" அமைச்சர் தொடண்டமான் பாராளுமன்றத்தில் கண்டனம்* என்ற செய்திக்கான தலையங்கம் சொல்லுகின்ற செய்தியே இன்னும் இன்றைய நாளுக்குரிய செய்தியாகவே காணப்படுகின்றது. தொண்டமான் என்னும் மலையக மக்களின் தலைவர் மறைந்தாலும் அவர் காலத்தில் அவர் நேரடியாகக் கண்டு பாராளுமன்றத்தில் முழங்கிய அந்த தமிழர் விரோதச் செயற்பாடுகள் இன்று மிகவும் மோசமடைந்துள்ளதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதற்கு மேலாக பேரினவாதத்தின் இறுக்கமான பிடிகள் முன்னைய காலங்களிலும் பார்க்க கோரமானவையாகத் தென்படுவது வேதனையை தந்தவண்ணம் உள்ளன.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் எம் மக்கள் அனுபவித்த துன்பியல் படலங்களின் பரிதாபக் குரல்கள் அந்த தமிழ் மண்ணில் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பது துரதிஸ்டமானதே. இவ்வாறான அவலக் குரல்கள் அந்த பிரதேசங்களில் தொடர்ந்து செல்வதற்குக் காரணம் எவை என்று ஆராய்ந்தாலு, அங்கு ஆட்சியில் உள்ளவர்களின் இனவாத மற்றும் தமிழர் விரோதப் போக்கு, இராணுவத் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சிவில் அதிகாரங்கள் போன்ற விடயங்கள் 'தலையை' நீட்டுகின்றன. தற்போது இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் தமிழர் பிரதேசங்களின் தொடரும் பேரினவாத பின்னணி கொண்ட வன்முறைகளுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் அதிகார வெறி மற்றும் அங்கு தோன்றியுள்ள பொருளாதாரப் பிரச்சனைகளை மறைப்பதற்காய் கிளறிவிடப்படும் இனத்திற்கு எதிரான கோசங்கள் ஆகியன இவைக்கு காரணமாக உள்ளன.

எமது ஊடகப் பயணம் தொடரும் இந்த நீண்ட கால ஓட்டத்தில் தாயகத்திலிருந்து கிடைக்கும் பல செய்திகள் எமது பாரம்பரிய பிரதேசங்களின் வளங்கள் சூறையாடப்படுவதும், மீன்பிடி தொடக்கம், விவசாயம் முதலான தொழிற்துறைகளில் தென்னிலங்கை மக்களை வடக்கு நோக்கி 'இழுத்து' வந்து அவர்கள் கைகளில் ஆயுதங்களையம் அதிகாரங்களையும் மேலதிகமாகக் கொடுத்து எமது மக்களின் பிரதேச நிலப்பரப்புக்கள் சார்ந்த பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக பறித்தெடுக்கும் முயற்சிகள் இடம்பெறுவதைக் காண்கின்றோம். அன்றை அழுகுரல்கள் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. பொருளாதார மற்றும் வேலை வழங்கும் நிகழ்ச்சிட்டங்களில் திடீரென ஒதுக்கப்படுகின்ற சமூகமாகவே உள்ள தமிழர்களின் அவலத்தை மட்டுமே அன்றாடம் கண்டு பின்னர் நொடிந்து போகின்றவர்களாக நாம் இருப்பது கூட எமக்கு ஓரளவு தானே தெரிநிதிருக்கின்றது என்பதை எண்ணும் போது, நாம் இனம் என்ற தளத்தில் உறுதியாக இல்லை என்பதையே காட்டுகின்றது.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)
EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA
ஒன்ராறியோ முது தமிழர் நலன்புரி ஆதாயமற்ற சங்கம் # 1866873

NOTICE OF THE ANNUAL GENERAL MEETING
OF THE SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION (OSTBA) 2021

The annual General Meeting of the Ontario Senior Tamils Benevolent Association (OSTBA) will be held on Saturday, August 28.2021 (From 10.00am to 3.00pm)
Venue: Mississauga Valley Blvd. Community Centre,
1275 Mississauga Valley Blvd. Mississauga, ON L5A 3R8. Room: LC Auditorium, Upper Floor

1. The meeting will commence at 10.00 am with the registration of members of good standing.
2. The Nomination form for filling of various positions in the Board and the Form for submission of Resolutions are available in the OSTBA Web page
3. For all details pertaining to the AGM, please visit the OSTBA Web. Page
4. Snacks and Lunch packets will be provided.
5. All members attending the meeting are kindly requested to follow the conditions laid out by the Government of Ontario on COVID -19.
Eg.: Wearing of Mask, Social distancing etc.

வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல் 2021
ஒன்டாரியோ முதுதமிழர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்.

வருகின்ற ஆவணி 28ந் திகதி 2021. மிஸ்ஸிசாகா சனசமூக நிலையத்தின் LC மன்றத்தில் நடைபெறும்
இடம் : Mississauga Valley Blvd. Community Centre,
1275 Mississauga Valley Blvd. Mississauga, ON L5A 3R8.
Room: LC Auditorium, Upper Floor

1-காலை 10-00மணியளவில் கூட்டம் ஆரம்பமாகும். சங்கத்தின் சட்டத்திற்கமைய தம் பங்களிப்பினைச் செலுத்துகின்ற அங்கத்தினர் எல்லாரும் தவறாது சமூகமளியுங்கள்.

2-இயக்குனர் சபை அங்கத்தவர் தெரிவுக்கான படிவம்(form) சட்டத்திருத்தங்களுக்கான படிவம்(form) சங்கத்தின் (OSTBA) வலைத்தளத்தில் பெறலாம்.

3-இவை சம்பந்தமான எல்லா விபரங்களும் (OSTBA) வலைத்தளத்தில் காணலாம்.

4-சமூகமளிப்பவர்களுக்கு சிற்றுண்டியும் மதியபோசனமும் வழங்கப்படும்.

5-அங்கத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அத்துடன் அரசின் வழிகாட்டலுக்கு அமைய(Government of Ontario on COVID -19) Eg.: சமூக இடைவெளியையும் முகக்கவசம் அணிதலையும் பற்றி கவனமாயிருக்க வேண்டுகிறோம்.

Selvarajah Nadarajah — ந.செல்வராஜா
Secretary (OSTBA — செயலாளர் (OSTBA)
39 Dundas Street, East, Unit 201, Mississauga, ON L5A 1V9,
Phone 647 795 0504. Email: ostba2019@gmail.com. Web: ostba.ca

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகளில் கொரோனா நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு

அமெரிக்கா மற்றும் பிரேசிலில் நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் ஜோ பைடன் நிர்வாகம் கடும் பாதிப்பான விமர்சனங்களை எதிர்கொள்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்கள் எண்ணிக்கை கடந்த வாரத்தில் 21 வீதம் அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு பதிவான 69,000 உயிரிழப்புகளில் அதிகமானது அமெரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இடம்பெற்றுள்ளன. இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த இரண்டு வாரத்தில் உலகளாவிய கொரோனா தொற்று சம்வங்கள் 200 மில்லினை தாண்டக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

கொவிட்-19 தொற்று சம்பவங்களும் 8 வீதம் அதிகரித்திருப்பதோடு தற்போது உலகெங்கும் பதிவான மொத்த நோய்த் தொற்று சம்பவங்கள் சுமார் 194 மில்லியனாக உள்ளது. ஐரோப்பாவை தவிர உயிரிழப்பு எண்ணிக்கை அனைத்து பிராந்தியங்களிலும் அதிகரித்துள்ளது.

'கடந்த வாரத்தில் 100,000 மக்கள் தொகையில் அதிகபட்ச உயிரிழப்பு எண்ணிக்கை அமெரிக்காஸ் மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் காணமுடிகிறது. அங்கு 100,000 மக்கள் தொகையில் 2.8 மற்றும் 1.1 வீதம் புதிய உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன' என்று உலக சுகாராத அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் அதிகபட்ச நோய்த் தொற்று சம்பவங்கள் அமெரிக்கா, பிரேசில், இந்தோனேசியா, பிரிட்டன் மற்றும் இந்தியாவில் பதிவாகியுள்ளன.

அமெரிக்கா மற்றும் பிரேசிலில் நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரித்திருக்கும் அதேநேரம் இந்தோனேசியா மற்றும் பிரிட்டனில் நோய்த் தொற்று சம்பவங்கள் குறைந்து வருகின்றன.






**இலங்கை செய்திகள்**
**Sri Lanka News**

# குடும்பப் பாரத்தை தாமும் சுமக்கவே மலையகச் சிறுமிகள் செல்வந்தர்களின் வீடுகளில் பணிக்குச் செல்கின்றார்கள்




இலங்கையில் குறிப்பாக மலையகத்தில் வாழும் ஏழைத் தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்த பல பிள்ளைகள் தற்போது பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாகவும் உயர்ந்து நிலைக்குச் சென்றுள்ளனர்.

ஆனால் கல்வி வாய்ப்பை இழந்த சில பிள்ளைகள் தங்கள் குடும்பச் சுமையை தாமும் சுமக்கவே நகரங்களில் உள்ள செல்வந்தர்களின் வீடுகளில் பணிக்குச் செல்கின்றார்கள். அவ்வாறாகச் சென்ற ஒரு அப்பாவி இளங்குருத்தி இன்று கழுத்து அறுபட்டுக்கிடக்கின்றது. பச்சைக்கிளி ஒன்று இன்று பரிதாபமாய் இன்று உயிரை இழந்து உலகின் அனுதாபத்தைப் பெற்றுள்ளது.

உலகெங்கும் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவருமே சிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் சின்னஞ்சிறார்கள் என்பதுதான் இதன் அர்த்தமாகும். இவ்வாறான பராயத்தினர் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் ஆதரவிலேயே வாழ வேண்டியவர்களாவர். அவர்கள் சுயமாக வாழ முடியாத சிறுவர் பராயத்தினர் என்பது உலக மருத்துவ அறிவியலாளர்கள் மற்றும் சிறுவர் உளவியலாளர்களின் கருத்தாகும்.

அறிவியலாளர்களின் பரிந்துரைகளை அடிப்படையாக வைத்தே ஐ.நாவின் சிறுவர் தொடர்பான சமவாயம் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் பற்றியெல்லாம் ஐ.நாவின் சிறுவர் தொடர்பான சமவாயத்தில் மிகத் தெளிவாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் அப்பாவித்தனமான பருவத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய மனிதநேயம் படைத்த அனைவராலும் இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

அவ்வாறில்லாமல், சிறுவர் பருவத்தினரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் அவர்களுக்குத் தீங்கிழைக்கின்ற எவரையும் மனித இனத்துக்குள் சேர்த்துக் கொள்ள முடியாது. அத்தகையவர்கள் கருணையற்ற கொடிய விலங்குகளுக்கே ஒப்பானவர்கள். தமது சொந்தப் பிள்ளைகளைப் போலவே மற்றைய சிறார்களையும் அன்பாகப் பராமரிக்க வேண்டுமென்ற உணர்வு இல்லாதவர்களை எவ்வாறு மனித இனத்துக்குள் சேர்க்க முடியும்?

இலங்கையில் சமீப காலமாக சிறார்கள் மீதான கொடுமைகள் ஆங்காங்கே இடம்பெற்றதாக பரபரப்பான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. கொழும்பை அடுத்துள்ள கல்கிசையில் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு, செல்வந்தர்களுக்கு பணத்துக்கு விற்கப்பட்டமை மற்றும் மலையகத்தின் டயகம தோட்டத்தைச் சேர்ந்த சிறுமியான ஹிஷாலினி உடலெங்கும் திடீர்த் தீக்காயங்களுக்கு உள்ளாகி மரணமடைந்தமை ஆகிய இரண்டும் சமீப சில நாட்களாக நாடெங்கும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இரு சம்பவங்களாகும்.

இவ்விரு சம்பவங்களிலும் சிறுமி ஹி'ாலினிக்கு ஏற்பட்ட பரிதாப முடிவே மனிதநேயம் மிக்கவர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்திருக்கின்றது. அச்சிறுமிக்கு நடந்த கொடுமைகளைக் கண்டித்தும், துரிதமாக நீதி விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறும் கோரியும் நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. உண்மையிலேயே ஹிஷாலினிக்கு ஏற்பட்ட கதி வேதனை தருகின்றது.

அச்சிறுமியின் மரணத்துக்கான காரணங்கள் தொடர்பாக தொடர்ந்தும் பரபரப்பான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்த அச்சிறுமி பல தடவை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக பிரேத பரிசோதனை தொடர்பான மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் அச்சிறுமி அவ்வீட்டில் வேலைக்கு இருந்த காலப் பகுதியில் அடித்து துன்புறுத்தப்பட்டதாக அவரது தாயாரின் வாக்குமூலத்தை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன.

அச்சிறுமி தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு எவராலும் தீவைக்கப்பட்டாரா என்பதெல்லாம் இன்னுமே அறியப்படாத மர்மங்களாகும். அச்சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளும் முழுமை பெற்று, ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றம் உறுதிப்படுத்தும் வரை இது தொடர்பாக எந்த விதமான ஊகத்தையும் வெளியிடுவது முறையல்ல. அச்சம்பவத்தை கண்டறிய வேண்டியவர்கள் பொலிஸார் ஆவர். சம்பவத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி குற்றமிழைத்தோருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டியது நீதிமன்றமாகும்.

இவ்வாறிருக்கையில், குற்றமிழைத்ததாக சந்தேகிக்கப்படும் தரப்பினருக்கு ஆதரவாக, அரசியல் ரீதியிலான அக்கறையின் காரணமாக கருத்துகளை எவரும் வெளியிடுவது உசிதமானதல்ல. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படும் வரை இந்த விடயம் குறித்து எவரேனும் மனம் போன போக்கில் கருத்து வெளியிடுவது தவறு. இந்த விடயத்தில் தராதரம் பாராது பக்கச்சார்பின்றி விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிசார் பணிக்கப்பட்டுள்ளனர். எனவே இவ்விடயத்தில் அனைத்து தரப்பினரும் பொறுமையுடன் நடந்து கொள்வது அவசியம்.

இவை ஒருபுறமிருக்க, மலையத்திலுள்ள வறிய சிறார்களை கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள செல்வந்த வீடுகளுக்கு வேலைக்கு அமர்த்தும் அவலம் இனியாவது முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். சிறுமி ஹிஷாலினி வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட சம்பவத்தைப் பொறுத்த வரை அவ்வீட்டு எஜமானர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

மேலும் குடும்ப வறுமையை காரணமாக வைத்து தங்களது சிறுவயது பிள்ளைகளை யாரோ ஒருவரது வீட்டில் வேலைக்கு அனுப்புவது சிறார்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்பதை சம்பந்தப்பட்ட பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். அது பாவச் செயல் ஆகும். இது தொடர்பாக மலையகத்தில் போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இவ்விடயத்தில் மலையக அரசியல்வாதிகள் அலட்சியமாக இருப்பது நல்லதல்ல. மலையக சிறார்களை வீட்டு வேலைக்கு அனுப்பும் கொடுமை நிறுத்தப்பட்டாலன்றி இந்த அவலம் முடிவுக்கு வரப் போவதில்லை. இறுதியாக இந்த அபலைப் பெண்ணின் இறப்புக்கு சரியான நீதி கிட்ட வேண்டும்.


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### சமையல் வல்லுனர்கள் (Cook) தேவை

ஸ்காபுறோவில்
**Danforth & Eglinton East**
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள பிட்சா உணவகத்தில் டெலிவரி ட்ரைவர்கள்
மற்றும் சமையல் வல்லுனர்கள் **(Cook)** ஆகியோர் உடனடியாகத் தேவை.

**Call: : (416) 659-0483**

### அலுவலக வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
**416 732 1608**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

**ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க வல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.**
**சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.**
**தகுந்த சம்ளம் வழங்கப்படும்.**
**அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.**

**Call: (416) 701-0003**

### இரண்டு உணவகங்களில் வேலை வாய்ப்பு

ரொரன்ரோ மாநகரில்
**Yonge & St.Clair, Danforth & Woodbine**
சந்திப்புக்களுக்கு அருகில் அமைந்துள்ள இரண்டு வெவ்வேறு உணவகங்களுக்கு முழு நேர, பகுதி நேர வேலையாட்கள் தேவை.

1. **Cook (Canadian or Thai Food) -** இரண்டு வருட அனுபவம் தேவை
2. **Kitchen Helper** (அனுபவம் தேவையில்லை)

**தொடர்புகளுக்கு: (416) 999-7015**
**அல்லது மின்னஞ்சல்: rasiah@live.ca**

### TUTORING AVAILABLE

**French and English tutoring available.**
**An Ontario Certified teacher is offering online tutoring to help you improve your writing, reading and speaking skills in French and/or English.**
**Prepare for next school year with a teacher who has experience with the Ontario curriculum.**
**Homework help and test preparation provided.**

***Call: (416) 723-7287***

### வேலை வாய்ப்பு

**Looking for Srilankan cooks & Indian tandoori curry cooks.**
**Full time and part time.**
**Kitchen helper Dishwasher part time.**
**Markham and Scarborough location**

**Call: AMAR**
**(416) 988-9518**

### பெண்களுக்கு வேலைவாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு: ஜெயா
647 669 2739
**(647) 669-2739**

# BisRing நிறுவனமானது தனது சந்தாகாரர்கள் அதிக பலன் பெறவேண்டும் என்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## பல்லின ஊடகவியலாளர்கள் சந்திப்பில் BisRing அதிபர் அகிலன் தேவா தெரிவிப்பு

(ரிச்மண்ட் ஹில் நகரிலிருந்து சத்தியன்)










**BisRing** நிறுவனமானது தனது சந்தாகாரர்கள் அதிக பலன் பெறவேண்டும் என்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எமது **BisRing** நிறுவனத்தின் ஸ்தாபக வரலாறு, மற்றும் எங்கள் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள விரும்பியே ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள பல்லின ஊடகவியலாளர்களை நான் இங்கு அழைத்துள்ளேன்.

நான் ஒரு வீடு விற்பனைத்துறை முகவராகவும் முதலீட்டாளராகவும் இருந்தபோது சக முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கண்ட ஒரு பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டே எமது **BisRing** நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. எமது நிறுவனத்தின் முக்கிய நோக்கமே, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையே பிணைப்பையும் தொடர்பையும் ஏற்படுத்தி அவர்கள் தங்கள் முயற்சிகளில் இலாபத்தையும் வெற்றிகளையும் ஈட்ட வேண்டும் என்பதே. இன்னும் விளக்கமாகக் கூறுவதானால் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள வீடு விற்பனைத் துறை முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோருக்கும் வீடு மற்றும் சொத்துக்களிலும் வர்த்தக முதலீடுகளிலும் தேவைப்படும் சேவைகளை வழங்கக் கூடிய நிறுவனங்களை இணைத்து அவர்கள் பலனடையும் வண்ணம் வழிகாட்டுவதே எமது **BisRing** நிறுவனத்தின் பிரதான பணியாக இருக்கும்."

இவ்வாறு தெரிவித்தார் **BisRing** நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமான பொறியியலாளரான அகிலன் தேவா அவர்கள். கடந்த 23ம திகதி வெள்ளிக்கிழமையன்று ரிச்மண்ட்ஹில் நகரில் உள்ள **BisRing** அலுவலகத்தில் நடைபெற்ற பல்லின பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டாவாறு தெரிவித்தார்

மேற்படி பல்லின பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் உட்பட பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.
அத்துடன் ரிச்மண்ட்ஹில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு மஜிட் ஜவாரியும் அங்கு கலந்து கொண்டு **BisRing** நிறுவனத்தின் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில் **BisRing** நிறுவனம் போன்ற கம்பனிகள் வீடு விற்பனைத்துறைக்கும் முதலீட்டுத்துறைக்கும் மிகவும் பயனுள்ள ஒரு நிறுவனமாக எதிர்காலத்தில் அடையாளம் காணப்படும் என்றார்.

தொடர்ந்த அங்கு உரையாற்றி **BisRing** நிறுவன அதிபர் அகிலன் தேவா அவர்கள் பல விடயங்களை ஊடகவியலாளர்களோடு பகிர்ந்து கொண்டார். "நான் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நான் உயர் தொழில்நுட்பத் துறையில் இருந்தேன். நான் என் பொறியியல் வாழ்க்கையை நார்டல் நெட்வொர்க்கில் தொடங்கினேன், ம். 2000 ஆம் ஆண்டில் "டாட்காம்" விபத்து ஏற்பட்டது, அங்கு நான் 80 - 100 ஆயிரம் டாலர்களை இழந்தேன். இது எனது நிதி சுதந்திரத்தை அடைய எனது பணத்தை முதலீடு செய்வதற்கான மாற்று வழியைத் தேட வழிவகுத்தது மற்றும் ஒரு தீர்வாக வீடு விற்பதைத் துறையில் முதலீடு செய்தேன். ஒன்ராறியோ மாகாணத்தின் பல்வேறு நகரங்களில் முதலீடு செய்துள்ளேன். இந்த முயற்சியின் போது, ரியல் எஸ்டேட் முதலீட்டாளர்கள் பொதுவாக எதிர்கொள்ளும் சவால்களை நான் சந்தித்தேன்.

ஒவ்வொருவரும் தாங்கள் முதலிட்ட . சொத்துக்கள் சரியாக நிர்வகிக்கப்படாவிட்டால், பணப்புழக்கம் இருக்காது. மேலும் நிதி சேதங்கள் மிக அதிகமாக இருக்கும். மேலும், ரியல் எஸ்டேட் முதலீட்டாளர்கள் பொருளாதாரச் சிக்கல்களில் அகப்படும்போது அவர்கள் தொழில்முனைவோரைப் போலவே தனிமையில் இருப்பதோடு அனுபவமற்ற நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை ஆலோசனைக்காக அணுகுவர். துரதிர்ஸ்டவசமாக, அவர்களின் உடனடி வலையமைப்பு கடினமான காலங்களில் அவர்களுக்கு உதவ முடியாமல் போகலாம். ரியல் எஸ்டேட் முதலீட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கு சேவை செய்யக் கூடியதும் நீண்டகால வணிக உறவுகளை உருவாக்கக்கூடியதுமான எந்த தளமும் அப்போது இருக்கவில்லை. முதலீட்டாளர்கள் தங்கள் ஒற்றை ரியல் எஸ்டேட் திட்டத்திற்காக பல்வேறு சேவை வழங்குநர்களைக் கண்டுபிடிக்க பல தளங்களைப் பார்வையிட வேண்டும். ஆனால் எமது **BisRing** நிறுவனம் நிறுவப்பட்ட நோக்கம் நல்ல பலனைத் தரவல்லது என்பதை நான் உணர்ந்தேன். எனவே எனது அதிக ஊதியம் பெற்ற கணணிப் பொறியியல் வேலையை விட்டு வெளியேறி ரிச்மண்ட்ஹில் நகரத்திற்கு , 2017 இல் **BisRing** நிறுவனம் உதயமாகியது.
மேலும் தற்போதைய ஏற்பாடுகளின் படி, ஒன்றாறியோ மாகாணத்தில் மட்டுமே **BisRing** நிறுவனம் சேவையாற்ற தன்னைத் தயார்படுத்தியுள்ளது,
தற்போதைய நிலையிலிருந்து அடுத்த கட்டமாக **BisRing** நிறுவனம், இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாம் கனடா முழுவதும் விரிவாக்கம் பெற்று சேவையாற்ற முடியும். பின்னர் அடுத்து ஆண்டுகளில் அமெரிக்காவிற்கும் விரிவுபடுத்தும் எண்ணமுண்டு.
மேலும் . வரவிருக்கும் ஆண்டுகளில், ரியல் எஸ்டேட் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் முதலீட்டு சொத்துக்களை வாங்குவதற்கும், பொருத்தமான முதலீட்டு கூட்டாளர்களைக் கண்டுபிடிப்பதற்கும் டீளைசுபைெ நிறுவனம உதவ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.
ஆதிகளவில் தொடர்ச்சியாக எமது நிறுவனத்தில் அங்கம் வகித்து சந்தாக்காரராக விளங்கும் மதிப்புள்ள வாடிக்கையாளர்களைக் கண்டுபிடிப்பதற்கும், இலவச வழிவகைகள் செய்வதற்கும், பிஸ்போர்டு மூலம் அவர்களின் நற்பெயர் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கும் பிஸ்ரிங் சேவை வழங்குநர்களுக்கு உதவும். ரியல் எஸ்டேட் முதலீட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஒரு சமூகமாக ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவக்கூடிய ஒற்றை நிறுத்த தளமாக பிஸ்ரிங் கருதப்படுகிறது.
**BisRing** நிறுவனம் இவ்வாறு எட்டும்போது, எங்கள் உள்ளூர் சமூகத்திற்குத் திருப்பி வழங்குவதற்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம், அதே நேரத்தில் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் வறிய குடும்பங்களுக்காக 1000 வீடுகளைக் கட்ட திட்டமிட்டுள்ளோம்.
மேலும் வீடு விற்பனைத் துறையில், முதலீட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கான நம்பகத்தன்மை கொண்ட ஒரு இணைப்பு மையமாக எமது **BisRing** நிறுவனம் தொடர்ந்து இயங்கும்" என்றார் அகிலன் தேவா.
இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.
*(படங்கள் சத்தியன்)*


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004





## நல்லூர் கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

12.08.2021 வியாழன் முதல் 08.09.2021 புதன்கிழமை வரை

குகனேய அடியார்களே !
நிகழும் மங்களகரமான பிலவ வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஓழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப் பெற்று வாழ்வீர்களாக.

காலை DAY TIME
காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00 மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

மாலை NIGHT TIME
மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:30 மணி கும்ப பூஜை Kumba pooja 6:30 pm
மாலை 7:30 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:50 Pm
இரவு 8:10 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 8:10 pm

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 12.08.21 | வியாழன் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 13.08.21 | வெள்ளி | 01 | கொடியேற்றம் |
| 14.08.21 | சனி | 02 | |
| 15.08.21 | ஞாயிறு | 03 | |
| 16.08.21 | திங்கள் | 04 | |
| 17.08.21 | செவ்வாய் | 05 | |
| 18.08.21 | புதன் | 06 | |
| 19.08.21 | வியாழன் | 07 | பிரதோசம் |
| 20.08.21 | வெள்ளி | 08 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 21.08.21 | சனி | 09 | |
| 22.08.21 | ஞாயிறு | 10 | மஞ்சம். |
| 23.08.21 | திங்கள் | 11 | |
| 24.08.21 | செவ்வாய் | 12 | |
| 25.08.21 | புதன் | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 26.08.21 | வியாழன் | 14 | |
| 27.08.21 | வெள்ளி | 15 | |
| 28.08.21 | சனி | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 29.08.21 | ஞாயிறு | 17 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 30.08.21 | திங்கள் | 18 | |
| 31.08.21 | செவ்வாய் | 19 | சூரியோற்சவம் |
| 01.09.21 | புதன் | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 02.09.21 | வியாழன் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 03.09.21 | வெள்ளி | 22 | மாம்பழத் திருவிழா, |
| 04.09.21 | சனி | 23 | சப்பறம், சனிப்பிரதோசம் |
| 05.09.21 | ஞாயிறு | 24 | தேர் திருவிழா |
| 06.09.21 | திங்கள் | 25 | தீர்த்த உற்சவம் |
| 07.09.21 | செவ்வாய் | 26 | பூங்காவனம் |
| 08.09.21 | புதன் | 27 | வைரவர் உற்சவம் |

05.09.2021 ஞாயிறுக்கிழமை தேர்த்திருவிழா
காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:50 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்(முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

- பகல்.இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர்
- ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர்
- கற்பூரச்சட்டி,காவடிபோன்றநேர்த்திக்கடன் செய்யவுள்ளோர்
- தேர்த்திருவிழாஅன்றுஆறுமுப்பெருமானுக்கு108பால்குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்






PLEASE WASH YOUR HANDS AND WEAR MASKS IN THE TEMPLE WHILE ALSO PRACTICING SOCIAL DISTANCING

## முக்கிய அறிவித்தல்

ஆலயத்தினுள் அனைவரும் முககவசம் அணிந்தும் சமுக இடைவெளியை பேனவும்

## அஷ்டோத்தர (108) சங்கு திருமஞ்சன சகிதம் ஸ்கந்தமஹா வேள்விபெருவிழாவுடன் ஏகதின லட்ச்சநாம ஜபபூசை

முருகன் அடியார்களே!
கனடா ரொறன்ரோவில் ஸ்காபுரோ நக்கற் வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வரும் எம்பெருமான் கந்தவேல் பெருமானார்க்கு நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீ சார்வாரி வருசம் தெட்சனாய வருசருது ஆவணிபுரட்டாதி மாதம் 01நாள் 17.07.2021 வெள்ளிக்கிழமை முதல் 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்கள் சங்காபிசேகம்.அர்ச்சனை ,ஹோமம்,தர்ப்பணம் என்பன மிகசிறப்பு வைபமாக நடைபெற இருப்பதால் அடியார்கள் விழாவில் கலந்து கொண்டு உபயங்களை முன் வந்து ஏற்று நடாத்தி சன்முகப்பெருமானின் பரிபூரணமான திருவருள் பெறவேண்டுமாய் முருகன் திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.
பலன்கள்:– ஏகதினலட்சார்ச்சனை,ஹோமம்,தர்ப்பணம்என்பனவற்றில் பங்குகொண்டால் தீர்க்கஆயுள் ,யமபயம், திருமணநிறைவு,தொழில்விருத்தி, வியாபாரஅபிவிருத்தி ,பணவரவு,கல்விஅபிவிருத்தி,நோய்தீர்ந்திட, பிதிர்தோஷம், குடும்பவாழ்வுசிறக்க,காரியம்நிறைவடை,கஷ்டம் என்பன நிகளும்

தொலைபேசி இல – 416 – 293 – 9004

# ஜூலை 83 ஐ நினைவு கூரும் நாட்களில் ஒரு தமிழ் ஊடக முதலாளியைக் குறித்து சில நினைவுக் குறிப்புக்கள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



மகாராஜா குழுமத்தின் தலைவர் ராஜ மகேந்திரன் காலமாகிவிட்டார். அவர் ஒரு தமிழ் பெரு முதலாளி. ஒரு ஊடக குழுமத்தில் தலைவர். எல்லாவற்றுக்கும் அப்பால் அவர் தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் ஒரு நம்பிக்கையின் குறியீடு. எப்படியென்றால் 83 ஜுலையில் அவருடைய சொத்துக்கள் அழிக்கப்பட்ட பின்னரும் அவர் தனது சொத்துக்கள் எரிந்த சாம்பலில் இருந்து மறுபடியும் முளைத்தெழுந்தார். அவரோடு சேர்ந்து தொழிலைத் தொடங்கிய அவருடைய சகோதரர் போன்றோர் ஜூலை அழிவுகளின் பின் புலம்பெயர்ந்து போய்விட்டார்கள். ஆனால் ராஜமகேந்திரன் தான் வேர் கொண்ட இடத்திலேயே தொடர்ந்து நிலைத்து நின்றார். தன் சொந்த சாம்பலிலிருந்து ஒரு ஊடக சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பினார். தனது ஊழியர்களிடம் அவர் அடிக்கடி கூறுவாராம் எனது சொத்துக்களை எரித்தார்கள். எனினும் நான் மீண்டு எழுந்தேன் என்ற தொனிப்பட.

அவருடைய அரசியல் தொடர்பில் கேள்விகள் உண்டு. அவர் பிரேமதாசாவுக்கு நெருக்கமானவர். கொழும்பு சிங்கள உயர்குழாத்தில் ஒருவர். அவருடைய இரண்டாவது மனைவி ஒரு சிங்களப் பெண். அவருடைய புதல்வர்கள் திருமணம் செய்ததும் சிங்களக் குடும்பங்களில்தான். அவர் ஒரு தமிழராகப் பிறந்தாலும் வாழ்க்கை முறையால் சிங்கள உயர்குளாத்த்தில் ஒருவராக மாறி விட்டிருந்தார். இக்கட்டுரை அவரை ஒரு தமிழ் தேசியவாதியாக முன்நிறுத்தவில்லை. மாறாக தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்த ஓர்மத்தின் முன்னுதாரணமாகவே அவரை இக்கட்டுரை முன்நிறுத்துகிறது.

பிரேமதாசாவுக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கம்தான் அவருடைய எஸ். சிலோன் பைப் கொம்பனி அதிகம் எழுச்சிபெறக் காரணம் என்று ஒரு விளக்கம் உண்டு. பிரேமதாசவின் கிராம எழுச்சித் திட்டத்தில் கட்டப்படும் புதிய வீடுகளுக்கு எஸ்-லோன் குழாய்களை மகாராஜா குழுமமே விநியோகித்தது என்றும் அதுவும் அந்த நிறுவனம் அதிகம் லாபம் அடைய ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது.

அவரை அவருடைய ஊடக குழுமத்தை யு.என்.பிக்கு சார்பானதாகவே உலகம் பார்க்கிறது. யூ.என்.பிக்கும் அவருக்குமுள்ள நெருக்கமும் சிங்கள உயர்குழாத்தில் அவரும் ஒருவர் போன்ற காரணங்களும் அவரை எதிர்க்கட்சிகளை துணிந்து அம்பலப்படுத்தும் ஓர் ஊடக முதலாளியாக நிலைநிறுத்தின. அண்மையில் கூட சில கிழமைகளுக்கு முன் ஒரு காணொளி சமூக வலைதளங்களில் பரவியது. அதில் சக்தி டிவியின் செய்தி வாசிப்பவர் ஒரு செய்தியை வாசிக்கிறார். அந்த செய்தி இலங்கைத் தீவில் இப்போதுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் பேச்சு ஒன்றைப்பற்றியது. பேச்சில் அவர் மகாராஜா ஊடக குழுமத்தை பெயர் சொல்லி விமர்சித்திருந்தார். அச் செய்தியை வாசித்து முடித்ததும் செய்தி வாசிப்பவர் அடுத்த செய்திக்கு போவதற்கு இடையே திடீரெண்டு கமராவுக்குள் செய்திப்பிரிவுக்கு பொறுப்பான மற்றொரு ஊடகவியலாளர் நுழைகிறார். இடை நுழைந்தமைக்கு வருத்தம் தெரிவித்துவிட்டு பசில் ராஜபக்ச தமது ஊடக குழுமத்தின் மீது வைத்த விமர்சனங்களுக்கு தான் பதிலளிக்க வேண்டிய பொறுப்பில் இருப்பதாகக் கூறி செய்தியை இடைநிறுத்தி தன் பதிலை முன்வைக்கிறார். அது மிகக் கூர்மையான ஒரு பதில். ஆக்ரோ'மான ஒரு பதில். பசில் ராஜபக்சவை மோசமாக அவமானப்படுத்தும் ஒரு பதில்.

பெயர் சொல்லி ராஜபக்சக்களை விமர்சிப்பதால் வரக்கூடிய ஆபத்துகளை மகாராஜா ஊடக குழுமம் நன்கு அறிந்திருக்கும். எனினும் பசில் ராஜபக்ச நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னரும் அவரை நோக்கி அவ்வாறாக துணிச்சலான ஒரு விமர்சனத்தை அந்த ஊடகம் முன்வைத்தது. செய்திகளுக்கு இடையே நுழைந்து செய்திக்கு பதில் கூறும் ஊடகஉத்தி என்பது புதுமையானது, விறுவிறுப்பானது அதோடு ஆபத்தானதும்கூட. ஆனால் மகாராஜா ஊடகக் குழுமம் அவ்வாறான ஆபத்துக்களை சந்தித்து அசையாமல் எழுந்து நிற்கிறது.

அதுதான் ராஜ மகேந்திரனின் மிடுக்கு. இது தொடர்பில் விமர்சனங்கள் உண்டு. அவரை தமிழ் ஊடக தாதா என்று விமர்சிப்பவர்கள் உண்டு. மேலும் தென்னிந்தியாவின் வர்த்தக குப்பைகளான நாடக சீரியல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்தவர் என்ற விமர்சனமும் உண்டு. ஆனாலும் ராஜமகேந்திரன் ஒரு முதலாளியாகவும் சிங்கள அரசியலில் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரூடகக் குழுமத்தின் தலைவராகவும் கொழும்பில் நிமிர்ந்து நின்றார். எரித்த இடத்திலேயே மீளத் துளிர்த்து பெரு விருட்சமாக வளர்ந்து காட்டினார்.அது ஊடகத்துறைக்கு மட்டுமல்ல தமிழ் முதலாளிகளுக்கு மட்டுமல்ல முழுத் தமிழ் மக்களுக்கும் ஒரு குறியீட்டு உண்மையை உணர்த்துகிறது. எந்த தலைநகரத்தில் இருந்து தமிழ் மக்களை குறிப்பாக தமிழ் முதலாளிகளை துரத்த வேண்டும் என்று திட்டமிட்டு 83 ஜுலை அழிவுகள் முன்னெடுக்கப்பட்டனவோ அதே தலைநகரத்தில் பீனிக்ஸ் பறவை போல ஒரு தமிழர் மீண்டும் எழுந்தார்.

இது ஜுலை 83ஐ நினைவு கூரும் காலம். ஜுலை 83ஐ நினைவுகூர்வது என்பது இனப்படுகொலையை நினைவு கூர்வதுதான். தென்னிலங்கையில் தமிழ்மக்கள் பெற்றிருந்த பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவத்தை அழிக்கும் நோக்கத்தோடு மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட ஓர் இன அழிப்பு நடவடிக்கை அது. அதைக் கலவரம் என்று அழைக்க முடியாது. ஏனென்றால் கலவரம் எனப்படுவது சம்பந்தப்பட்ட இரு சாரரும் கைகலப்பில் ஈடுபடுவது. கொழும்பை தங்களுடைய தலைநகரமாகவும் தென் இலங்கையை தமது தாயகமாகக் நம்பிய அப்பாவி தமிழர்களை அவர்கள் கொன்றொழித்தார்கள். அவர்களுடைய சொத்துக்களை எரித்து அழித்தார்கள். உங்களுடைய தாயகம் காங்கேசன்துறைக்கு அப்பால் இருக்கிறது அங்கே போங்கள் என்று கூறி கப்பலில் ஏற்றி அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

83 ஜுலை எனப்படுவது பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியது. முதலாவது தென்னிலங்கை தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான இடம் அல்ல என்ற உண்மையை அது உணர்த்தியது. இரண்டாவதாக இலங்கைத்தீவு பல்லினத்தன்மை மிக்கது அல்ல என்ற ஒரு உண்மையை வெளிக்காட்டியது. மூன்றாவதாக அது இந்திய தலையீட்டுக்கு வழிவகுத்தது. நாலாவதாக அகதிகளாக தமிழர்கள் உலகம் முழுவதும் படர்ந்து போவதற்கு வேண்டிய ஒரு எதிர்மறை உந்துதலை அது வழங்கியது. இந்த நான்கு விளைவுகளின் தொகுப்பே பின்வந்த தசாப்தங்களும் ஈழப்போரும் ஆகும்.

முதலாவதாக அது தென்னிலங்கை தமிழ் மக்களுக்கு பாதுகாப்பானது அல்ல என்பதை உணர்த்தியது.ராஜமகேந்திரன் அப்போதிருந்த அரசாங்கத்தின் பிரதமரான பிரேமதாசாவுக்கு நெருக்கமானவராக காணப்பட்டார். எனினும் இரத்மலானையில் அமைந்திருந்த அவருடைய எஸ். லோன் கொம்பனி எடுக்கப்படுகையில் அதை தடுக்கவோ காப்பாற்றுவோ பிரேமதாசாவால் முடியவில்லை. அதுதான் அன்றைக்கிருந்த கொழும்பு யதார்த்தம். அதன்மூலம் அப்போதிருந்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் ஒரு உண்மையை வெளிப்படுத்தினார்கள். அது என்னவென்றால் பல்லினத் தன்மை மிக்க ஒரு தீவை கட்டியெழுப்ப நாங்கள் தயாரில்லை என்பதுதான். இது இலங்கை தீவை உலக அளவில் அவமானப்படுத்தியது. இது முதலாவது விளைவு.

இரண்டாவது விளைவு இந்தியத் தலையீடு. ஜுலை 83ஐ முன்வைத்து இலங்கை தீவின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டது. அதன் உச்சக் கட்டம்தான் இந்திய இலங்கை உடன்படிக்கை. அதற்குப் பின்னரும் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன. இன்றுவரை அந்த விளைவுகளைத்தான் இலங்கைத் தீவு அனுபவிக்கிறது. முதலில் இந்தியா இறங்கியது. பின்னர் ஸ்கண்டிநேவிய நாடுகளும் ஜப்பானும் அமெரிக்காவின் கருவிகளாக இறங்கின. இப்பொழுது சீனா இறங்கியிருக்கிறது. அதன் மெய்யான பொருளில் இலங்கைத்தீவு அதன் இறைமையை இழந்துவிட்டது. அது இப்பொழுது பேரரசுகளால் பிச்சுப் பிடுங்கப்படும் ஒரு பண்டம். அதாவது 83 ஜுலையில் இருந்து தொடங்கி இலங்கைத்தீவு அதன் இறமையை இழக்கத் தொடங்கியது. தமிழ் மக்களின் உரிமையை ஏற்றுக் கொள்ளாத தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மொத்தத்தில் இலங்கைத்தீவின் ஒட்டுமொத்த இறைமையையும் இழந்துவிட்டார்கள். இது 3வது விளைவு.

நாலாவது விளைவு புலப்பெயர்ச்சி. தமிழ் புலப்பெயர்ச்சியின் இரண்டாவது அலை 83 ஜுலையில் இருந்து தொடங்கியது. இலங்கைத்தீவு தமக்கு பாதுகாப்பான ஒரு நாடு அல்ல என்பதை உணர்ந்த தமிழர்கள் அதிகரித்த அளவில் அலையலையாக புலம்பெயரத் தொடங்கினார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் ராஜ மகேந்திரனின் சகோதரர் இருந்தார். ஆனால் ராஜமகேந்திரன் இருக்கவில்லை. இப்படிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகம் முழுவதிலும் அகதிகளாக பரவிச் சென்றார்கள். ஆனால் சில தசாப்தங்களுக்குள்ளேயே உலகின் கவர்ச்சிமிக்க புலம்பெயர் சமூகமாக மேலெழுந்தார்கள். துடிப்பான, அரசியல் ஆர்வம் மிக்க, முதலீட்டு ஆர்வம் மிக்க, கடும் உழைப்புடைய, சாதிக்க வேண்டும் என்ற தாகம் உடைய ஒரு புலம் பெயர் சமூகமாக தமிழர்கள் மேலெழுந்தார்கள். எந்த தலைநகரத்தில் இருந்து அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்களோ அதே தலைநகரத்தை நோக்கி வெளிநாட்டு பிரஜைகளாக டொலர்களோடு வந்திறங்கினார்கள். எந்தத் தலை நகரத்தில் அவர்களுடைய சொத்துக்கள் எரிக்கப்பட்டனவோ அதே தலைநகரத்தில் டொலர்களை கொடுத்து புதிய சொத்துக்களை வாங்கிக் குவித்தார்கள். குறிப்பாக ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் தென்னிலங்கையின் நிதி ரீதியாக வங்குரோத்தாகிய சிங்கள முதலாளிகளின் சொத்துக்களை புலம்பெயர்ந்த பரப்பில் உள்ள தமிழ் பெருமுதலாளிகள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எனப்படுவது உலகின் கவனிப்புக்குரிய ஒரு மக்கள் கூட்டமாக எழுந்துவிட்டது. அதுமட்டுமல்ல தங்களை இந்த நாட்டில் இருந்து அகற்ற முற்பட்டவர்களுக்கு புலப்பெயர்ச்சியே தங்களை மேலும் பலப்படுத்தி இருக்கிறது என்பதனை நிரூபித்திருக்கிறார்கள். அது தோற்கடிக்கப்பட முடியாத ஒரு மக்களாக தமிழ் மக்களை நிரூபித்திருக்கிறது. தென்னிலங்கையின் நகரங்களில் ரூபாய்களோடு திரிந்த தமிழர்களை ஜுலை 83 டொலர்களோடு திரிபவர்களாக மாற்றி இருக்கிறது. அதாவது ஜுலை 83 இல் தென்னிலங்கையிலிருந்து தமிழ் மக்களைத் துரத்தியவர்கள் தங்கள் இலக்குகளை அடைய முடியவில்லை என்பதைப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நிரூபித்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஓர் அரசியல் சமூகப் பொருளாதார பின்னணியில் ராஜமகேந்திரன் புலம் பெயராது தனது சொத்துக்கள் எரிந்த சொந்த சாம்பலில் இருந்து மீண்டும் எழமுடியும் என்பதனை கொழும்பில் தொடர்ந்தும் வசித்தபடியே நிரூபித்தார். அவருக்கும் யூ.என்.பிக்கும் இடையிலான உறவு அந்தத் துணிச்சலுக்கு ஒரு பக்கபலமாக இருந்தது. சிங்கள உயர் குழாத்தின் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்கு அதற்கு ஒரு காரணம். எனினும் தன் சொந்த சாம்பலிலிருந்து தமிழர்கள் மீண்டும் உயிர்த்தெழ முடியும் என்ற நம்பிக்கையை அவர் தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய அரசியலை குறித்தும் அவருடைய ஊடக குழுமம் குறித்தும் தனியாக ஆராய வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் அவரை நினைவு கூரவேண்டிய இடம் எதுவென்றால் அழிக்கப்பட்ட பின்னரும் இடிக்கப்பட்ட பின்னரும் இனப்படுகொலைக்குப் பின்னரும் நிமிரலாம் என்ற நம்பிக்கையின் தமிழ்க் குறியீடுகளில் அவரும் ஒருவர் என்பதுதான்.

# சிறார்களைப் பாதுகாக்க தவறிய "ஆசியாவின் அதிசயம்"

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**




இலங்கை ஆட்சியாளர்கள் சொல்லுவது ஒன்று செய்வது வேறு என்பது புதிய விஷயம் அல்ல. அதை எதிர்பார்ப்பவர்கள் கனவுலகில் மட்டுமே சஞ்சரிக்க முடியும்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலான காலத்திற்குப் போர் என்ற ஒற்றை சொல்லைப் பயன்படுத்தி அனைத்திலிருந்தும் தப்பித்துக் கொண்டது இலங்கை. ஆசியாவில் அண்டை நாடான இந்தியாவை விட பொருளாதாரத்தில் முன்னேறிய நாடாக இருந்தது "முத்து தீவு". போர் அனைத்தையும் புரட்டிப் போட்டது, பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்றது. போர்க்கால பொருளாதாரம் காரணமாக வேலை வாய்ப்புகள் சுருங்கின. இராணுவத்தின் அகோரப் பசிக்கு தீனி போடவே அரசு சிரமப்பட்டது.

கடந்த சுமார் 40 ஆண்டுகளாக "நீறுபூத்த நெருப்பாக" இருந்த பல பிரச்சனைகள் இப்போது பூதாகாரமாக உருவெடுத்து பல்துறைகளின் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது.

இதில் பல தசாப்தங்களாகவே இலங்கையில் இருந்த பாரிய பிரச்சனைகளில் ஒன்று சிறார் துஷ்பிரயோகம். வெளிநாடுகளிலிருந்து "பாலியல் சுற்றுலாவுக்காகவே" இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது பரவலாக அறியப்பட்ட ஒன்றாகவே இருந்தது. மேலும் பன்னாட்டு பொலிஸ் அமைப்பான இண்டர்போல் மற்றும் மனித உரிமை அமைப்புகள், சர்வதேச தொழிலாளர் நல அமைப்பு ஆகியவை இலங்கை ஒரு சிறார் பாலியல் சொர்கமாகவே திகழ்கிறது என்றெல்லாம் கவலை வெளியிட்டு அரசுக்கும் தெரிவித்தன.

தொடர்ச்சியாக வந்த அரசுகள் சில நடவடிக்கைகளை எடுத்தன ஆனால் அவை போதுமானதாக இருக்கவில்லை. சட்டத்திலிருந்த ஓட்டைகளைப் பயன்படுத்தி சிறார்கள் துஷ்பிரயோகம் தொடர்ந்தது. துஷ்பிரயோகம் என்று சொல்லும் போது சிறார்களை வேலைக்கு அமர்த்துவது, பாலியல் தொழில் பயன்படுத்துவது ஆகியவை முக்கியமானவை. இளம் வயதில் சிறார்களும் துறவறத்தில் தள்ளப்படுவதும் சிறார் துஷ்பிரயோகம் என்கிற வரையறைக்குள் வருகிறது.

இதற்கு சமூகப் பொருளாதார ரீதியாகப் பல காரணிகள் மற்றும் காரணங்கள் இருந்தாலும் எதையுமே நியாயப்படுத்த முடியாது. வயதை மாற்றிக் காட்டுவது, சிறார்கள் உதவி மட்டுமே செய்கிறார்கள் வேலை செய்வதில்லை என்று கூறுவது, அதிகார பலத்தைப் பயன்படுத்து வீட்டு வேலைகளில் ஈடுபடுபவர்களை அடிமையாக நடத்துவது போன்ற கண்டிக்கத்தக்கச் செயல்கள் எல்லாமே போர் என்ற போர்வையினால் மூடப்பட்டது.

பல வகையில் சர்வதேச அழுத்தங்கள் வர ஆரம்பித்ததை அடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழலுக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகத்தான் வீட்டு வேலைக்குச் செல்பவர்களின் குறைந்தபட்ச வயதை 18 ஆக உயர்த்த அரசு முன்வந்துள்ளது.




ஒரு மரணம் இந்த மாற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. ஹிஷாலியின் மரணம் ஏற்படாமலேயே இந்த மாற்றம் வந்திருக்க வேண்டும். ஆனால் இந்த மரணம் துரதிஷ்டவசமாக சம்பவித்தது என்னமோ ஜூலை மாதம் 15 திகதிதான். ஆனால் அதற்கு முன்னதாகவே அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் ஆணைக் குழுவொன்று பல பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி இந்தாண்டு பிப்ரவரி மாதம் அரசுக்கு அறிக்கை ஒன்றை அளித்தது.

அந்த அறிக்கையில் "சிறார் பாதுகாப்பு கொள்ளை நாட்டில் 21 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது" என்று கூறியுள்ளது. அதாவது மறைமுகமாக கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் சிறார் துஷ்பிரயோகம் ஏதோவொரு வகையில் நடைபெற்று வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

இதற்கு சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ச அரசுகளும் பிரதமர் பதவியில் இருந்த ரணில் விக்ரமசிங்க போன்றவர்களும் பொறுப்பேற்க வேண்டும், மக்களுக்கு பதில் கூற வேண்டும்.

ஐ நா அறிக்கை, அமெரிக்கா அறிக்கை, ஐரோப்பிய நாடாளுமன்ற அறிக்கை ஆகியவற்றைப் போன்று இந்த அறிக்கையை அரசு புறந்தள்ள முடியாது அதைச் செய்யவும் கூடாது. கடந்த 2020 ஆம் ஆண்டு மட்டும் சிறார் தொழிலாளர் குறித்து சுமார் 100 புகார் அரசுக்கு கிடைத்துள்ளன என்று கூறும் அந்த அறிக்கை, இதில் சிறார்கள் கடத்தப்படுவதும் அடங்கும் என்று கூறியுள்ளது.

இதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் நாட்டிலுள்ள பெரும்பாலான சிறார் தொழிலாளர்கள் மலையகப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். பல ஆண்டுகளாகவே யாழ்ப்பாணம் தொடங்கி கொழும்பிலுள்ள வசதி படைத்தவர்கள் வீட்டில் மலையகத்தை சேர்ந்த பெண்களே வீட்டுப் பணியாளர்களாக இருந்துள்ளனர். வடக்கு தொடங்கி தெற்கு வரை இந்த சிறார் தொழிலாளர்கள் அனுபவித்த சாதிய பாகுபாடுகள், கொடுமைகள், உடல் மற்றும் உளரீதியான துஷ்பிரயோகங்கள், மரணங்கள் என்பவை காலத்தில் கசந்த பக்கங்கள். இது புதிய வி'யமில்லை என்றாலும், இலங்கையின் மலையகத்தில் சமூகப் பொருளாதார நிலை இன்னும் எவ்வளவு மோசமாக உள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இப்போது "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" என்பது போல் வேலை செய்வதற்கு குறைந்தபட்ச வயதை 18ஆக உயர்த்துவதாக அரசு அறிவித்துள்ளது எந்தளவுக்குப் பலனை அளிக்கும் என்பதில் பல கேள்விகள் உள்ளன. மேலும் சில தொழில்களை வேலை செய்வதற்கு ஆபத்தான தொழிலாகவும் அரசு அறிவித்துள்ளது. ஏதோ நாமும் ஏதாவது சொல்லி வைப்போமே என்பது போலச் சிறார் பாதுகாப்பு அதிகார சபையும், "சிறார்கள் சுரண்டப்படுவதைத் தடுக்க கடுமையான சட்டங்கள் தேவை" என்று ஒப்புக்குத் தெரிவித்துள்ளது.

கடந்த 21 ஆண்டுகளாக சிறார் பாதுகாப்புக் கொள்கை நாட்டில் நடைமுறைபடுத்தமால் இருந்தது இந்த "முதலைக் கண்ணீர்" அதிகார சபைக்கு தெரியாமல் போனது எப்படி? என்ற கேள்வியை தவிர்க்க இயலவில்லை.

சிறார் நலன்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கணக்கெடுப்பு சிறார்கள் நலன்கள் குறித்த கொள்கைகளை வகுத்து அவர்கள் சுரண்டப்படாமல் இருப்பதைத் தடுப்பதற்காகவே நடத்தப்படுகிறது. அவ்வகையில் கடைசியாக 2016ல் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி நாட்டில் 5-17 வயதினரில் குறைந்தது 1% சிறார்கள் - 43,000க்கும் அதிகமானவர்கள்- குழந்தை தொழிலாளர்களாக இருந்துள்ளனர் என்றும், அதிலும் 39,000 பேர் அபாயகரமான தொழிலில் வேலை செய்கின்றனர். ஆனால் அதிகாரபூர்வமற்ற முறையில் நடத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று 2021 இந்த எண்ணிக்கை 15% அளவுக்கு உயர்ந்திருக்கலாம் என்று கூறுகிறது.



சிறார் தொழிலாளர் என்ற வரையறை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அதை இலங்கையிலுள்ள முதலாளிமார் தமக்குச் சாதகமாக தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். மலையகப் பகுதியில் நவகாலனித்துவ அடிமை முறை இன்றளவும் திகழ்கிறது. குடும்பத்தை நிரந்தரமாகக் கடனில் தள்ளி அதிலிருந்து மீளமுடியாத சூழலை ஏற்படுத்தி, மேலும் கடன் வாங்க வைத்து அதற்கு ஈடாகப் பிள்ளைகளைக் கொத்தடிமைகளாக வேலைக்கு வலிந்து சேர்த்து, தொடர்ந்தும் அந்த புதைகுழியிலிருந்து மீள முடியாமல் முதலாளிமார்கள் வைத்துள்ளனர் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சேவ் தி சில்ரன் இலங்கையின் 6 மாவட்டங்களில் பாலியல் தொழிலில் சிறார்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்று கவலை வெளியிட்டுள்ளது. இதற்காக குழந்தைகள் கடத்தப்பட்டு மோசமான சூழல்களுக்குள் தள்ளப்படுகிறார்கள் என்கிறது அவர்களின் அறிக்கை. பாலியல் சுரண்டல் மற்றும் வர்த்தக இலாபத்திற்காகச் சிறார்கள் கடத்தப்படுவது மிகவும் மோசமான நடவடிக்கைகள் என்கிறது அந்த அமைப்பு.

இப்படியான செயல்பாடு இலங்கையில் தண்டிக்கப்படக் கூடிய குற்றங்களாக இருந்தும் சிறார் கடத்தல், வேலையில் ஈடுபடுத்தல், பாலியல் தொழிலில் தள்ளப்படுதல் ஆகியவை எவ்வகையிலும் குறையவில்லை.

பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் வேலைக்குச் செல்வது ஒரு சாபக்கேடு என்று கூறியுள்ள சேவ் தி சில்ரன், இதன் காரணமாக அவர்கள் சமூகத்திற்குள் உள்வாங்கப்படாமல் தனிமைப்படுத்தப்பட்டு பின்னாளில் குடும்ப பற்றற்று, குற்றச் செயல்களைச் செய்வதற்கு வழிவகுக்கிறது என்று வாதிடுகிறது அந்த அமைப்பின் ஆய்வறிக்கை.

இலங்கையில் இப்போது ஹிஷாலினிக்கு நீதி வேண்டும் என்று போராடும் அரசியல்வாதிகள் அனைவரும் ஏதோவொரு காலகட்டத்தில் ஆட்சியின் அங்கமாக இருந்தவர்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த போது என்ன செய்தார்கள்? மௌனமே பதில். அந்த மலையகப் பெண்ணின் அகால மாரணம் ஒரு பெரும் பிரச்சனையின் சிறு துளியே. கடந்த வாரம் இலங்கையின் சட்ட மா அதிபரின் திணைக்களம் அதிர்ச்சியளிக்கும் தகவல் ஒன்றை வெளியிட்டது. "வசதியானவர்களின் வீடுகளில் பணிப் பெண்களாக வேலை செய்வதற்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கடத்தப்படுகிறார்கள், இது திட்டமிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்கடத்தல்" என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

நாட்டிலுள்ள சிறார்களைப் பாதுகாப்பதற்கு பொறுப்பான சிறார் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் விதித விதானபதிரண தமது "அலுவலகத்தில் சிறார் பாதுகாப்பு அதிகாரிகள் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன, அதுவே பிரச்சனைகளுக்கு காரணம்" என்று நகைப்புக்குரிய வகையில் தெரிவித்துள்ளார். தமது அதிகார சபை சிறார் தொழிலாளர்கள் முறையை ஒழிப்பதற்கு ஐந்தாண்டு திட்டம் ஒன்று தீட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் விதானபதிரன கூறுகிறார்.

இலங்கையில் ஒப்பீட்டளவில் சிறார் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்று ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. அலரி மாளிகை தொடங்கி அரசில் அங்கம் வகிக்ப்பவர்களும் அவர்களை பணிக்கு அமர்த்தும் வசதி படைத்தவர்களும் தமது பிள்ளைகளைச் சிறார் தொழிலாளரியாகவோ அல்லது பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்பட்ட ஒரு நபராகவோ சிந்தித்துப் பார்த்தால் அதை ஒழிக்க நடவடிக்கை எடுப்பது கடினமானதாக இருக்காது.



நாட்டில் குழந்தை தொழிலாளர்கள் குறித்து உடனடியாக ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். கொத்தடிமை முறை ஒழிக்கப்பட வேண்டும். வறுமை காரணமாக மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்வது அல்லது அனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் "ஆசியாவின் அதிசயம்" என்று கூறிக் கொள்ளும் இலங்கை பன்னாட்டரங்கில் மேலும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழல் ஏற்படும்.

# தலைநகரில் தமிழரைத் தலைநிமிர வைத்த தமிழர்

**- குரு அரவிந்தன்**

**க**ப்பிட்டல் மகாராஜா குறூப் நிறுவுனர் திரு. ஆர். ராஜமகேந்திரன் அவர்களின் மரணச் செய்தி ஒரு கணம் அதிர்ச்சியாக இருந்தாலும், 1980 களில் என் நினைவுகளை மீட்டுப் பார்க்க வைத்தது. அற்புதமான சிந்தனையாளர், எத்தனையோ போட்டிகள், பொறாமைகளுக்கு மத்தியில் மகாராஜா நிறுவனத்தைத் திறம்படக் கொண்டு நடத்தியவர். தமிழரை மட்டுமல்ல, எல்லா இனத்தவரின் திறமைக்கும் முதலிடம் கொடுத்து, ஒரு குடும்பமாகத் தன்னிடம் பணிபுரிந்த எல்லோரோடும் அன்பாகப் பழகியவர். சுருங்கச் சொன்னால் தமிழரைத் துணிச்சலோடு "எதற்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல" என்று இலங்கையின் தலைநகராம் கொழும்பில் தலைநிமிர்ந்து நிற்கவைத்தவர். அவரது திடீர் இழப்பு எமக்கு, எம்மினத்திற்குப் பெரும் இழப்பாகும்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் தமிழர்களின் சொத்துக்கள் மட்டுமல்ல, பேரினவாதத்தால் உயிர்களும் பறிக்கப்பட்ட மாதம். சொந்த மண்ணிலே நாங்கள் அகதிகளாக்கப்பட்டதும் அப்பொழுதுதான். இந்த இனக்கலவரத்தின் போது, இலங்கையிலே மிகவும் பிரபலமான தமிழர் நிறுவனமான மகாராஜா நிறுவனத்தை அடியோடு வீழ்த்துவதும் பேரினவாதத்தின் முக்கியமான ஒரு நோக்கமாக இருந்தது. ஏற்கனவே திட்டமிட்டபடி சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியோடு பேரினவாதம் அதைச் சாதித்திருந்தது. கொழும்பில் இருந்து தமிழர்களை விரட்டுவதே அதன் நோக்கமாக இருந்தது. இனக்கலவரத்தின் போது தமிழர்களின் வீட்டு முகவரிகள் காடையர்களுக்கு கொடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டது போலவே, தமிழர்களின் நிறுவனங்களும், தேடித்தேடி அழிக்கப்பட்டன. "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற முன்நாள் ஜனாதிபதியின் அறைகூவலுக்குச் செவிசாய்த்த பேரினவாதம் இதை திறம்படச் செய்து முடித்தது. கொழும்பிலும், இரத்மலானையிலும் இருந்த மகாராஜா நிறுவனத்திற்குச் சொந்தமான எஸ்லோன் பைப், ஜோன் பேர்ணிச்சர் போன்ற ஆறு தொழிற்சாலைகளுக்கு மேல் எரியூட்டி அழிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் நான் மகாராஜா நிறுவனத்தின் சில கொம்பனிகளின் கணக்குப் பரிசோதகராக இருந்தேன். ஒரு நாள் திரு. ராஜமகேந்திரன் என்னை அழைத்து "ரெலிபங்கன் தொலைக்காட்சி" விற்பனை நிலையத்தின் கணக்கை உடனடியாகப் பரிசோதிக்கும்படியும், விற்பனை திடீரெனக் குறைந்ததற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படியும் கேட்டிருந்தார். திடீரென அவர் அதைக் கேட்டதால் ஏதோ இருக்கிறது என்ற நினைவோடு நானும் குழுவிரும் பரிசோதனை மேற்கொண்டோம். ஒரு குறையும் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசிநாள் தேனீர் நேரம் அங்கு வேலை செய்யும் உதவியாளர் தேனீர் பரிமாறினார். அவரிடம் கதை கொடுத்துப் பார்த்தேன். அவரிடம் இருந்து ஒரு துப்புக் கிடைத்தது. உதிரிப்பாகங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டதால், புதிய தொலைக்காட்சிப் பெட்டிகளில் இருந்து உதிரிப்பாகங்களை எடுத்து வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதாகச் சொன்னார். அதனால் குறிப்பிட்ட தொடர்பின்றி எடுக்கப்பட்ட சில பெட்டிகளைத் திறந்து பார்த்த போது, சுமார் 12 புதிய தொலைக்காட்சிப் பெட்டிகளில் இருந்து உதிரிப்பாகங்கள் எடுக்கப்பட்டதைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதைப்பற்றி அறிக்கை எழுதி திரு. ராஜமகேந்திரனிடமே நேரடியாகக் கொடுத்திருந்தேன். அறிக்கையை வாசித்து விட்டு "இதுதான் எனக்கு வேண்டும்" பாராட்டினார். எதையோ சாதித்த மகிழ்ச்சி என் மனதில் குடிகொண்டது.

மகாராஜாவின் முக்கியமான தூண்களில் ஒருவர் திரு. நிமால் குக் அவர்கள், மற்றவர் நண்பர் சி. கணநாதன் அவர்கள். அப்போது ஏ. எவ் ஜோன்ஸ் நிறுவனத்தின் கணக்காளராகக் கணநாதன் இருந்தார். இந்தக் கலவரங்களின்பின் ஒருநாள் தொலைபேசியில் என்னை அழைத்து மகாராஜா நிறுவனத்தில் இணைந்து கொள்ள விருப்பமா என்று கேட்டார். கலவரத்தில் மகாராஜா நிறுவனம் மிகப்பெரிய பாதிப்பைச் சந்தித்திருந்தது. ஏற்கனவே எனது அண்ணாவிடமும் திரு. ராஜமகேந்திரன் (கிளி) இதைப்பற்றிக் கேட்டிருந்தார், எனவே மகிழ்ச்சியோடு இணைந்து கொண்டேன். ஜோன் பேர்ணிச்சர் நிறுவனத்துக்குக் கணக்காளராகப் பொறுப்பெடுத்தேன். முதல்நாள் அதற்குப் பொறுப்பான திரு. பார் குமாரகுலசிங்கத்தை அறிமுகம் செய்துவைத்து, "நாங்கள் மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும், என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள்" என்றார் திரு. ராஜமகேந்திரன். அப்போது அவரது முகத்தில் தெரிந்த உறுதியான நம்பிக்கையைப் பார்த்தேன், "வீழ்வோம் என்று நினைத்தாயோ?" என்ற பாரதியின் பாடல்தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

மறுநாள் யூனியன் பிளேஸில் உள்ள காட்சி அறைக்குச் சென்றேன். அதன் முகாமையாளராக திரு. கே. இரட்ணசபாபதி இருந்தார். அவருடன் உரையாடினேன். தளபாடங்கள் இல்லாமல் எமது காட்சியறை தூங்கிக் கொண்டிருந்தது. நான் உடனடியாகவே காரியத்தில் இறங்கினேன். இரத்மலானையில் உள்ள தொழிற்சாலைக்குச் சென்று பார்த்தபோது ஏராளமான தளபாடங்கள் எரிந்த நிலையில் கருகிப்போய், கவனிப்பாரற்றுக் கிடந்தன. மறுநாள் அங்கே முன்பு தொழில் பார்த்த நேர்மையான இருவரை அழைத்து எரியாமல் கிடந்த எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து ஓரிடத்தில் வைக்கச் சொன்னேன். மறுநாள் சென்று பார்த்தபோது, நூற்றுக் கணக்காகக் குவித்திருந்தார்கள். சில மேசைகள், கதிரைகளுக்கு மூன்று காலகள்தான் இருந்தன. எது இல்லையோ அதை உடனடியாகச் செய்யச் சொன்னேன். இரண்டு வாரத்தில் காட்சியறை தளபாடங்களால் நிறையத் தொடங்கியது. இரண்டு மாதத்தில் மீண்டும் விற்பனையைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்ததில் பெருமையாக இருந்தது. மாதமுடிவில் பார் குமாரகுலசிங்கம் என்னிடம் கவர் ஒன்றைத்தந்தார், திறந்து பார்த்தேன், திரு. ராஜமகேந்திரனின் கையொப்பமிட்ட காசோலை ஒன்று "போனஸ் பேமென்ட்" என்ற குறிப்போடு இருந்தது.

அதைத்தொடர்ந்து கொப்பியூட்டர் சிஸ்டம் லிமிட்டெட், அதற்குத் திரு. தில்லைநடேசன் பொறுப்பாக இருந்தார். முதன் முதலாக கணனியில் கணக்குகளை பதியக்கூடியதாக எல்லா கணக்காளர்களுக்கும் கணனி பாவனையை அறிமுகப்படுத்தியது மகாராஜா நிறுவனம்தான். இதற்காக ஐபிஎம் நிறுவனத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டோம். அந்த நிறுவனத்திற்கும், சண்பவர் சிஸ்டம் என்ற நிறுவனத்திற்கும், ஜோன் இன்ஜினியேர்ஸ் நிறுவனத்திற்கும் கணக்காளராக பொறுப்பைத் தந்தார்கள். இன்னபிளவர் வீதியில் இருந்த அதற்கு திரு. கே. துரைசிங்கம் பொறுப்பாக இருந்தார். திரு. நிமால் குக் தனக்கு ஒரு கணக்காளர் வேண்டும் என்று சொல்லி "மகாராஜா புறஜெக்ஸ்" நிறுவனத்திற்கு என்னைக் கணக்காளராக நியமித்துக் கொண்டார். மகாராஜா நிறுவனம் 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது, நான் மொத்தம் ஐந்து நிறுவனங்களின் கணக்காளராகப் பொறுப்பேற்றிருந்தேன். அங்கர்பால்மா நிறுவனத்திற்கு திரு. சுந்தரலிங்கம் கணக்காளராக இருந்தார். திரு. ராஜமகேந்திரனுக்கு அடுத்ததாக நான் பார்த்து வியர்ந்த மனிதர் திரு. நிமால் குக் தான். எந்தவொரு பந்தாவும் இல்லாமல் அன்பாகப் பழகக்கூடியவர். அவருடைய செயலாளராகப் பணிபுரிந்த கந்தானையில் இருந்து வந்த ரஸ்மி பெர்னாண்டோவும், சட்டத்துறைக்குப் பொறுப்பான ருத்ராணி பாலசுப்ரமணியமும் மிகவும் அன்போடு பழகக்கூடியவர்கள். நான் கனடாவுக்குப் புலம் பெயர்ந்ததால் இவர்களை எல்லாம் விட்டுப்பிரிய வேண்டி வந்தது.

இச் சந்தர்ப்பத்தில் 1943 ஆம் ஆண்டு பிறந்த திரு. ராஜமகேந்திரன் கட்டி எழுப்பிய மகாராஜா நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். திரு. ராஜமகேந்திரனின் தந்தை பெயர் சி. இராஜேந்திரம், தாயாரின் பெயர் செல்லம்மா. தந்தையின் நண்பரின் பெயர் திரு. மகாதேவன். இருவரும் சேர்ந்து 1939 ஆம் ஆண்டு உருவாக்கிய நிறுவனம் தான் மகாராஜா நிறுவனம். 1957 ஆம் ஆண்டு திரு. மகாதேவனின் மரணத்தைத் தொடர்ந்து இவர்கள் பொறுப்பேற்றார்கள். 1965 ஆம் ஆண்டு தந்தையின் மரணத்தைத் தொடர்ந்து பிள்ளைகளான திரு. மகாராஜாவும், திரு. ராஜமகேந்திரனும் பொறுப்பேற்றார்கள். இவர்களுக்கு ராஜலக்சுமி, மகாலக்சுமி, ஜெயலக்சுமி, விஜயலக்சுமி என்ற நான்கு சகோதரிகளும் உண்டு. இந்து மதத்தவரான இவரது தந்தையார் "கிண்டு எடியூக்கேசனல் சொசைட்டி" என்ற நிறுவனத்தின் நிறுவுனராகவும் இருந்தார். பாக்கர் இங், பொன்ஸ் பவுடர், எஸ்லோன் பைப் போன்ற கம்பெனிகள் நல்ல வருமாத்தை ஈட்டிக் கொடுத்தன. சக்தி, சிரச போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களும் இவர்களுக்குச் சொந்தமானது. திரு. ராஜமகேந்திரன் கடவுள் பக்தி மிக்கவர். பாங்'ால் வீதியில் உள்ள நிறுவனத்திற்குச் செல்லும் போதெல்லாம் அருகே வழியில் உள்ள கோயிலுக்கு முன்னால் வண்டியை நிறுத்தி வணங்கிவிட்டுத்தான் செல்வார்.

திரு. ராஜமகேந்திரன் முன்நாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நல்ல நட்போடு பழகினார். பிரேமதாசாவின் செயலாளராக இருந்தவர் தமிழர், மகாஜனாவின் பழைய மாணவர். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு அறிமுகம் செய்த வீட்டுத் திட்டங்களுக்கு உதவியாகவும் இருந்தார். சுகததாசா ஸ்ரேடியத்தின் பராமரிப்புக்கு உதவி செய்தார். கொழும்பில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக இருந்தது. நாங்கள் சீக்கோ மணிக்கூடு முகவர்களாக இருந்ததால், பழைய மணிக்கூடு போலவே புதிதாகச் செய்வித்துக் கொடுத்தோம். இப்படியாகத் தனிப்பட்ட முறையில் பல உதவிகளைச் செய்திருந்தார். விளையாட்டுத் துறையையும் அவர் ஊக்குவித்தார். நீல் சண்முகம், துலிப் மெண்டிஸ், றுமே' ரட்நாயக்கா, றோய் டயஸ் போன்ற சுமார் 12 கிரிகெட் வீரர்கள் அப்போது அங்கே எங்களுடன் பணிபுரிந்தார்கள்.

இன்னும் சில வருடங்களில் 100 வது ஆண்டைக் கொண்டாட இருக்கும் மகாராஜா நிறுவனத்தை அவரது மகன் சசிதரன், மகள் அஞ்சலி ஆகியோர் சிறந்தமுறையில் கொண்டு நடத்தி அமரர் ராஜமகேந்திரனின் கனவுகளை நினைவாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு. அவரது குடும்பத்தினரின் துயரில் கலந்து கொண்டு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். ஓம்சாந்தி.

# "தகைசால் தமிழர்" விருது பெறும் முதல் தமிழர் என். சங்கரய்யா





**த**மிழ்நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக, "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருதை உருவாக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று முதலமைச்சர் கைகளால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட இந்த விருதுடன், பாராட்டுச் சான்றிதழும், பரிசுத்தொகையாக பத்து லட்ச ரூபாய் காசோலையும் கையளிக்கப்படும் என தமிழ்நாடு அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் "தகைசால் தமிழர்" விருதைப் பெறும் முதல் தமிழ் ஆளுமையாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா தேர்வு செய்யப்பட்டுள்ளார். அடுத்தமாதம் ஆகஸ்ட் 15-ம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருதை உருவாக்கவும், இந்த விருதுக்கான விருதாளரைத் தேர்வு செய்திட ஒரு குழுவை அமைத்திடவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்.

இவ்விருதுக்கான விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழக முதல்வர் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மாணவத் தலைவராகவும், சுதந்திரப் போராளியாகவும், சட்டப்பேரவை உறுப்பினராகவும் அரும்பணியாற்றியதுடன், தமிழகத்துக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, சமீபத்தில் 100 வயதை அடைந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யாவைப் பெருமைப்படுத்தும் வகையில், இவ்வாண்டுக்கான "தகைசால் தமிழர்" விருதுக்கு அவரது பெயர் பரிசீலிக்கப்பட்டு, அவருக்கு இவ்விருதினை வழங்க முடிவு செய்யப்பட்டது.

விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட என்.சங்கரய்யாவுக்கு, பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும், வருகிற ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படும்.

இவ்வாறு செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கியூபாவுக்கு வந்த சோதனை!

- கனடா நக்கீரன்

சொர்க்க வாசலில் ஒருவர் நுழையும்போது அவரிடம் இரண்டு கேள்விகள் கேட்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கேள்விகளுக்கு உங்கள் பதில் "ஆம்" என்றால் அனுமதி உண்டு, இல்லாவிட்டால் அனுமதி மறுக்கப்படும். முதல் கேள்வி என்னவென்று தெரியுமா?

"உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியை உணர்ந்திருக்கிறீர்களா?" இரண்டாம் கேள்வி, "உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு மகிழ்ச்சியை விளைவித்திருக்கிறீர்களா?"

இதற்கு உங்கள் பதில் "ஆம்" என்றால், நீங்கள் ஏற்கனவே சொர்க்கத்தில்தான் இருக்கிறீர்கள்!




கியூபா ஒரு தீவல்ல. அது பூலோகத்தில் உள்ள ஒரு சொர்க்க பூமி. உலகில் உள்ள அத்தனை வளங்களும், அழகுகளும் அங்கே கொட்டிக் கிடக்கிறது. ஆனால் அங்கு வாழும் மக்கள் சொர்க்கத்தில் வாழவில்லை. பாலும் பழமும் உண்ணவில்லை. வறுமையில் உழல்கிறார்கள்.

1959 இல் பிடல் கஸ்ரோ தலைமையிலான யூலை 26 இயக்கம் கியூபா நாட்டின் சர்வாதிகாரி புல்கேன்சியோ பாடிஸ்தா **(Fulgencio Batista)** அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்துக்கு வந்தது. 1965 ல் கியூபாவின் ஒருங்கிணைந்த பொதுவுடமை கட்சியின் மூலம் ஆட்சியமைக்கப்பட்டது.

கியூபா கரீபியன் தீவுகளில் மிகவும் பெரிய தீவாகும். லா எசுப்பானியோலாவிற்கு அடுத்து இரண்டாவது அதிக மக்கள்தொகை உள்ள தீவாக அது விளங்குகின்றது. இப்பகுதியில் உள்ள மற்ற நாடுகளை விடக் குறைந்த மக்களடர்த்தி கொண்டதாக உள்ளது.




1990 வரை கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத் ஒன்றிய நாடுகளில் கொடிகட்டிப் பறந்த பொதுவுடமை அரசுகள் வலுவிழந்து கரைந்து போய்விட்டன. இன்று உலகளாவிய அளவில் சீனா, லாவோஸ், வியட்நாம், கியூபா நாடுகளில் மட்டுமே பொதுவுடமைக் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. வட கொரியாவில் தொழிலாளர் கட்சியின் பெயரில் ஒரு கட்சி ஆட்சி நடக்கிறது.

இந்தப் பொதுவுடைமை நாடுகளில் ஐக்கிய நாடுகளின் "மிக உயர்ந்த" மனித வளர்ச்சி தரவரிசையிலுள்ள நாடாக இன்று கியூபா விளங்குகின்றது. பொது சுகாதாரம், கல்வித் துறைகளில் மிக உயர்ந்த நிலையில் உள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான கியூபாவின் மனிதவள மேம்பாடு மதிப்பு **(Human Rights Index)** 0.783 ஆகும். இது நாட்டை உயர் மனித வளர்ச்சிப் பிரிவில் வைத்தது - 189 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 70 ஆக உள்ளது. இந்தத் தரவரிசை ஈரானுடன் (இஸ்லாமிய குடியரசு) பகிர்ந்து கொள்ளப்பட்டது. 1990 க்கும் 2019 க்கும் இடையில், கியூபாவின் மனித மேம்பாடு மதிப்பு 0.680 இல் இருந்து 0.783 ஆக அதிகரித்தது, இது 15.1 விழுக்காடு அதிகரிப்பாகும்.

கியூபாவில் பொது சுகாதாரம் மற்றும் கல்வி இலவசமாகக் கிடைக்கிறது. ஹவானா பல்கலைக் கழகம் கியூபாவின் மிகப் பழைய பல்கலைக் கழகம் ஆகும். கியூபாவின் கல்வியறிவு 100மூ ஆகும். கியூபாவில் வயது பால் வித்தியாசம் இன்றி பாடசாலைச் சீருடைகளையே மாணவ - மாணவிகள் அணிகின்றனர். இதனை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

வெளிநாடுகளில் 30,000 கியூபா நாட்டு மருத்துவர்கள் பணியில் இருக்கிறார்கள். இதன் மூலம் கியூபா 7 பில்லியன் அ.டொலர்களை திரட்டுகிறது. மேலும் தொடர முன்னர் கியூபா நாடு பற்றிய புள்ளிவிபரங்களைப் பார்ப்போம்.

பெயர் - கியூபா குடியரசு **(República de Cuba (Spanish)**

தலைநகரம் - ஹவானா **(23°8′N 82)**

அரச மொழி - இசுப்பானியா

பரப்பளவு - 110,860 ச.கிமீ

மக்கள் தொகை - 11,147,407 (யூலை 2017 மதிப்பீடு)

தலைநகரம் - ஹவானா

இனக் குழுக்கள் - வெள்ளையர் 64.1 விழுக்காடு, கருப்பர் 9.3 விழுக்காடு (2012 மதிப்பீடு)

மொத்த உள்நாட்டு உற்பத்தி - அ.டொலர் 137.00 பில்லயன் (2017 மதிப்பீடு)

தனிநபர் வருமானம் - அ.டொலர் 12,300 (2016 மதிப்பீடு)

வேலையற்றோர் - 2.2 விழுக்காடு (2017 மதிப்பீடு). உத்தியோகப்பற்றற்ற மதிப்பீடு பல மடங்கு அதிகம்.

இந்தப் பின்னணியில்தான் கடந்த யூலை மாதம் 11 ஆம் நாள் (ஞாயிற்றுக் கிழமை) 2021 அன்று கியூபா அரசாங்கத்திற்கும் ஆளும் கியூபா பொதுவுடமைக் கட்சிக்கும் எதிரான தொடர்ச்சியான போராட்டங்கள் தொடங்கின, இது உணவு மற்றும் மருந்துபற்றாக்குறை மற்றும் கியூபாவில் மீண்டும் எழுச்சி பெற்ற கோவிட் - 19 தொற்றுநோய்க்கு அரசாங்கத்தின் மெத்தனப் போக்கு ஆகியவற்றால் தூண்டப்பட்டது. இந்த எதிர்ப்புக்கள் 1994 இல் மாலேகொனாஸோ ாவுக்குப் **(Maleconazo)** பின்னர் நடந்த மிகப் பெரிய அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆகும்.

கியூபாவின் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள். இது முற்றிலும் எதிர்பாராத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்று சொல்ல முடியாது.

நான் கடந்த பல ஆண்டுகளாக கியூபாவுக்கு சுற்றுலா போய் வந்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வெவ்வேறு சுற்றுலா தலங்களுக்குப் போயிருக்கிறேன். சாதாரண மக்களோடு உரையாடியிருக்கிறேன். அவர்கள் வீடுகளில் விருந்து உண்டுள்ளேன்.

கியூபா இயற்கை கொஞ்சமும் வஞ்சகம் செய்யாத நாடு. இந்த சுற்றுலா தலங்களில் காணப்படும் ஆடம்பர ஹோட்டல்கள், நீச்சல் தடாகங்கள், கடற்கரைகள், படுக்கை அறைகள், விதம் விதமான உணவு வகைகள், பழங்கள் எவரையும் மலைக்க வைக்கும். ஆனால் சற்று வெளியே சென்று பார்த்தால் பெரும்பான்மை மக்கள் ஏழ்மையில் வாடுவதைப் பார்க்கலாம். சுற்றுலா போகிறவர்கள் பழைய உடுபுடவைகளைக் அன்பளிப்புச் செய்தால் மக்கள் அடித்துப் பிடித்து வாங்கிக் கொள்கிறார்கள்.

அரசு மக்களுக்கு மாதந்தோறும் அடிப்படைத் தேவைகளான அரிசி, பருப்பு வெள்ளைச் சீனி, பழுப்புச் சீனி போன்ற பொருட்களை சந்தை விலையை விட 8 இல் ஒரு பங்கு விலைக்கு வழங்குகிறது.
பிடல் காஸ்ட்ரோவும் அவரது இளவல் இராவுல் காஸ்ட்ரோவும் கியூபாவைக் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் வழிநடத்தினார்கள். 2018 இல், தலைமை ஒரு இளைய தலைமுறைக்கும் காஸ்ட்ரோ குடும்பத்திற்கு வெளியே உள்ள ஒருவருக்கும் ஒப்படைக்கப்பட்டது. இராவுல் காஸ்ட்ரோவின் இரண்டாவது பதவிக்காலத்தில் மைக்கல் டயஸ் கேனரல் ( **Miguel Díaz-Canel**) முதல் துணை சனாதிபதியாக இருந்தார்.தேசிய சட்டமன்றத் தேர்தல்களுக்குப் பிறகு - எந்த எதிர்க்கட்சி வேட்பாளர்களும் அனுமதிக்கப்படாத நிலையில் - கியூபா நாடாளுமன்ற அமைப்பு ஒருமனதாக **Díaz**-கேனலை புதிய அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

இந்தத் தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவை 30 ஆண்டுகளில்

| பொருள் | அளவு | விலை (CUP) |
|---|---|---|
| அரிசி | 2.7 kg | 0.70 / lb |
| பருப்பு | 570 g | 0.32 / lb |
| சீனி (வெள்ளை) | 1.4 kg | 0.15 / lb |
| சீனி (பழுப்பு) | 1.4 kg | 0.10 / lb |
| பால் (7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு | 1 lt / day | 0.25 / each |
| முட்டை | 12 | 0.15 each |
| உருளைக் கிழங்கு/வாழைப்பழம் | 6.8 kg | 0.40 / lb |

இல்லாத அளவுக்கு மிக மோசமான பொருளாதாரச் சரிவு, உணவு, மின்சாரம் மற்றும் மருந்துகள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்தத் தவறியது, சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், அரசியல் எதிரிகள் மீது அடக்குமுறை ஆகியவை காரணமாக அரசின் மீது மக்களது கோபத்தை அதிகப்படுத்தியது ஆகும்.

கியூபாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி மனித உரிமைக் காப்பகம் விரிவான அதே நேரம் காட்டமான அறிக்கையை 2020 இல் வெளியிட்டிருந்தது. (https://www.hrw.org/world-report/2021/country-chapters/cuba)

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஹவானா வீதிகளில் "எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும்" "சர்வாதிகாரம் ஒழிக என்று முழக்கமிட்டனர். மொத்தம் 40 க்கு மேற்பட்ட ஊர்வலங்கள் கியூபாவின் பல ஊர்களில் இடம்பெற்றன. சமூக ஊடகங்கள் மக்கள் வெளிப்படையாக ஆட்சியாளர்களை விமர்ச்சிப்பதில்லை. சிறிது காலப் பழக்கத்தின் பின்னர் கொஞ்சம் மனம் திறக்கிறார்கள். அப்போதும் பிடல் கஸ்ரோ பற்றி உயர்வாகவும் மரியாதையோடும் பேசுகிறார்கள்.

ஹவானாவிற்கு தென்மேற்கே 30 கிலோமீட்டர் (20 மைல்) தொலைவில் உள்ள சான் அன்டோனியோ டி லாஸ் பானோஸ் என்ற நகரத்தில் போராட்டங்கள் முதலில் ஆரம்பித்தன. அங்கு பல ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள், முக்கியமாக இளைஞர்கள் வீதிகளில் இறங்கினார்கள்.

மக்களின் கோபத்தைத் தனிப்பதற்குப் பதிலாக சனாதிபதி டயஸ்-கேனல் ஞாயிற்றுக்கிழமை நடத்திய தொலைக்காட்சி உரையில், "நாட்டின் அனைத்துப் புரட்சியாளர்களும், கம்யூனிஸ்டுகளும் தெருக்களில் இறங்குங்கள். ஆர்ப்பாட்டக்காரர்களைத் தீர்க்கமான, உறுதியான மற்றும் தைரியமான வழியில் எதிர்கொள்ளுங்கள்" என்னும் பொருள்பட பேசியது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியது.
எரிகிற நெருப்பில் அமெரிக்க அதபர் ஜோ பைடன் பின்நிற்கவில்லை. கியூபாவில் நடக்கும் "பல்லாண்டு கால அடக்குமுறையை" முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். "கியூபா மக்களின் கோரிக்கைகளை கவனிக்குமாறு" பிடன் கியூபா அரசாங்கத்தை வலியுறுத்தினார். "நாங்கள் கியூப மக்களுடன் துணை நிற்கிறோம், இந்த முக்கியமான தருணத்தில் தங்கள் மக்களின் சிக்கல்களைக் கவனித்து, அவர்களின் தேவைகளை நிறைவு செய்யுமாறு கியூபாவை அமெரிக்கா கேட்கிறது" என்று அவர் மேலும் கூறினார்.

2014 மற்றும் 2016 க்கு இடையில் பராக் ஒபாமாவின் ஆட்சியில் கியூபா மீதான பொருளாதாரத் தடைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டன. அவர் கியூபாவின் தலைநகர் ஹவானாவுக்கு மார்ச் 21, 2016 வருகை தந்தபோது நான் கியூபாவில் இருந்தேன். 88 ஆண்டுகளுக்குப் பின்னர் கியூபாவில் காலடி எடுத்த முதல் சனாதிபதி பராக் ஒபாமா ஆவர். ஆனால் அவர்



தொடக்கி வைத்த நல்லிணக்க முயற்சிகளை அடுத்து வந்த சனாதிபதி ட்ரம்ப் தலைகீழாக மாற்றினார். இப்போதுள்ள சனாதிபதி பைடனும் ட்ரம்ப் அவர்களின் கியூபா கொள்கையை பின்பற்றுவதாகத் தெரிகிறது.

கியூபாவின் இன்றைய பொருளாதார அவலத்துக்கு அமெரிக்கா அதன்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளே காரணமாகும். கியூபாவின் தொழில்துறைக்கு தேவைப்படும் யந்திரங்கள், உதிரிப் பாகங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஐம்பது, அறுபதுகளில் உற்பத்தி செய்த வண்டிகளையே வீதிகளில் பார்க்க முடியும்.

கியூபா அரசைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா பலமுறை முயற்சித்தது. அவை வெற்றிபெறவில்லை. இப்போது கியூபா மக்களே அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். சோறும் வேண்டும் சுதந்திரமும் வேண்டும் என்கிறார்கள்.

இது கியூபாவுக்கு வந்த சோதனை!

இந்தியா செய்திகள்
India News

# ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் தமிழக வீரர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில் "வென்று வருக வீரர்களே" என்ற பாடலை வெளியிட்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்



ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் தமிழக விளையாட்டு வீரர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் 16.7.2021 அன்று காணொலிக் காட்சி மூலமாக பேசும் போது, "இந்த அரசு விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கும் அரசாக இருக்கும். இந்த அரசுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் நீங்கள் அனைவரும் பதக்கத்துடன் வரவேண்டும். அனைவரும் பதக்கம் பெற எனது வாழ்த்துக்கள்" என்று உற்சாகப்படுத்தி வாழ்த்தினார்.

அதன் தொடர்ச்சியாக, இன்று (26.7.2021) தலைமைச் செயலகத்தில், டோக்கியோ நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் நம் மாநிலத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் தமிழ்நாடு கூடை பந்தாட்ட கழகத்தால் தயாரிக்கப்பட்டு, இசையமைப்பாளர் திரு. யுவன் சங்கர் ராஜா அவர்களால் இயற்றி இசை அமைக்கப்பட்ட "வென்று வா வீரர்களே" என்ற பாடலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு. ஆதவ் அர்ஜுன் ஆகியோர் உடனிருந்தனர்.

# எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி கணேசன் உள்பட பல நடிகர்களுடன் நடித்த ஜெயந்தி காலமானர்



இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள நடிகை ஜெயந்தி காலமானார் என்ற செய்தி தமிழகம் மற்றும் ஏனைய மாநிலங்களில் உள்ள சினிமா ரசிகர்களை கவலையடை வைத்துள்ளது.

கர்நாடக மாநிலத்தின் சிறந்த நடிகை விருதை இரண்டு முறை பெற்றுள் நடிகை ஜெயந்தி என்பதும், எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி கணேசன் உள்பட பல பிரபல நடிகர்களுடன் நடித்தவர் நடிகை ஜெயந்தி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் உள்பட பல மொழிகளில் நடித்த பழம்பெரும் நடிகை ஜெயந்தி காலமானார். அவருக்கு வயது 76.

குறிப்பாக "வெள்ளி விழா" "புன்னகை" "நூற்றுக்கு நூறு" "இருகோடுகள்" "எதிர் நீச்சல்" உள்ளிட்ட சூப்பர் ஹிட் படங்களில் நடித்துள்ளார்.

நடிகை ஜெயந்தி தமிழ் மட்டுமின்றி கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி மொழிகளிலும் அவர் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நடிகை ஜெயந்தி சற்றுமுன் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து அவருக்கு திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# சீரிய பண்புகள் அற்ற கவிஞர் சினேகன் இன்னொரு நடிகையின் வாழ்க்கையை சீரழிக்கப் போகின்றாரா?



கவிஞரும் நடிகருமான சினேகன் நடிகை கன்னிகா ரவி என்னும் பெண்ணை திருமணம் செய்யப்போகின்றார் என்ற செய்தி வெளியாகியுள்ள நிலையில் சென்னை தமிழ்ச் சினிமா வட்டாரங்களில் பலத்த பரபரப்பு அலைகள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இற்றைவரை அவரது சினிமா வாழ்வில் எவ்விதமான சீரிய பண்புகள் அற்றவராக அறியப்பட்டு வந்த கவிஞர் சினேகன் இதற்கு முன்னர் கவர்ச்சியாகப் பேசியும் பொய்களை எவ்வித தடையுமின்றி பகிர்ந்து கொண்டும் பல சில குடும்பப் பெண்களை ஏமாற்றியுள்ளார் என்பது தமிழ்ச் சினிமா வட்டாரங்களில் சில வருடங்களாக தீவிரமாகப் பரவிய செய்திகளாகும்.

இதனால் பல இயக்குனர்கள் கூட இவரை ஒதுக்கத் தொடங்கியதை சினிமா ரசிகர்கள் அவதானித்து வந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், சீரிய பண்புகள் அற்ற கவிஞர் சினேகன் இன்னொரு நடிகையின் வாழ்க்கையை சீரழிக்கப் போகின்றாரா? என்ற கேள்வி சினிமாத்துறை பரப்பில் பரவி வருகின்றது. ஆனால் எவரும் பகிரங்கமாக பேசுவதை தவிர்த்து வருகின்றார்கள். ஆனால் நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மையத்தில் உறுப்பினராக பணியாற்றி வருகின்ற கவிஞர் சினேகன் தனது "அழுக்குகளை" மறைத்து வருகின்றார் என்றும் நடிகர் கமல்ஹாசன் அவர்களும் இவரது தவறான பழக்க வழக்கங்களை பெரிதாக எடுக்காமல் அவரை தனது அருகில் வைத்துள்ளார் என்றும் சினிமா வட்டாரங்களில் "பேச்சு" அடிபடுகின்றது.

கவிஞர் சினேகன் தன் உறவினர் பெண்ணை திருமணம் செய்யபோவதாக சில வருடங்களுக்கு முன் செய்திகள் பரவியது. இந்நிலையில் சீரியல் நடிகை கன்னிகா ரவி என்பவரை 8 வருடமாக காதலித்து வருவதாகவும் அவருடன் திருமணம் நடக்கவிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், நடிகர் கமல்ஹாசன் முன்னிலையில் ஜூலை 29ல் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

தமிழ் சினிமாவில் பாடல் ஆசிரியராக அறிமுகமாகி ஒருசில படங்களில் கதாநாயகனாகவும் நடித்து பிரபலமானவர் சினேகன். சில காலம் வாய்ப்புகள் வராதநிலையில் பிரபல தொலைக்காட்சியின் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரபலமானார்.

எப்போதும் பொய்களையே கூறிவரும் கவிஞர் சினேகனிடமிருந்து இளம் நடிக நடிகைகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் சில தமிழ்ச் சினிமா பிரமுகர்கள் தங்களுக்குள் பதிவுகளை இடுவதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கவிஞர் சினேகனின் கடந்த கால வாழ்க்கை மற்றும் அவரது ஏமாற்றுத் தனம் ஆகியவற்றை நாம் மீண்டும் ஒரு தடவை புரட்டிப் பார்க்க வேண்டும் என்றும் பல முக்கிய சினிமா பிரபலங்கள் தெரிவித்துள்ளன.

**(சென்னையிலிருந்து அருள்எழில் அரசன்)**

# இளம் நடனக் கலைஞர்கள் மததியில் திரட்டிய தொகையில் ரூபாய் பத்து லட்சம் ரூபாவை தமிழக முதல்வரிடம் வழங்கிய "கலைமாமணி மதுரை இரா. முரளிதரன்

பரதக் கலை உலகில் நன்கு அறியப்பெற்ற "கலைமாமணி" மதுரை இரா முரளிதரன் அவர்கள் தனது 7 வயது முதல் பரதக்கலை பயின்று தான் தேர்வு செய்த துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தவர் கடந்த 50 வருடங்களாக கடின உழைப்பையும் தளராத முயற்ச்சியும் தனித்துவ கலைத் திறனையும் மூலதனமாக கொண்டு சஅதனைகளை அருகிவரும் இவரது அடுத்த சாதனை வரிசையில் மீண்டும் ஒருமுறை, தொடர்ந்து மூன்றாவது முறையாக கின்னஸ் புக் ஆ.்.ப் வோர்ல்ட் ரெக்கார்ட்ஸ், ஏசியா புக் ஆ.்.ப் ரெக்கார்ட்ஸ் மற்றும் இந்தியா புக் ஆ.்.ப் ரெக்கார்ட்ஸ் மூன்றிலும் இடம் பெறவுள்ள நிகழ்ச்சி. உலகெங்கிலுமுள்ள சுமார் 900 நடனக் கலைஞர்களுக்கு இணைய தளம் மூலமாக தமிழன்னையின் மீது தான் இயற்றிய பாடலுக்கு நடனம் பயிற்றுவித்ததோடு மட்டுமல்லாமல் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒரே நேரத்தில் அதே பாடலுக்கு ஆடல்கலை மூலம் தமிழன்னைக்கு ஓர் சமர்ப்பண நிகழ்ச்சி அளிக்க உள்ளார். இந்த நிகழ்வில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ன்ஸ் துபாய் சிங்கப்பூர் இலங்கை கனடா மற்றும். பல்வேறு நாடுகளில் வசிக்கும் 900 நடனக் கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

இவரின் முதல் கின்னஸ் சாதனை ஏப்ரல் 2018ல் இந்தியா முழுவதும் உள்ள 320க்கும் மேற்பட்ட பரதநாட்டியக்கலைஞர்கள் பங்கு பெற்ற சங்கீர்ண த்ருவ தாளத்தில் அமைந்த மிக நீளமான நிகழ்ச்சியாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது. இரண்டாவது முறை ஏப்ரல் 1, 2021ல் இணைய வழியாக நடைபெற்ற உலகம் முழுவதும் உள்ள 140க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் தொடர்ந்து ஆடிய -60 ஜதி சவால் நிகழ்ச்சியும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது. இது போல் நடை பெறுவது பரத நாட்டிய உலகில் இதுவே முதல் முறையாகும்.

வரும் ஆகஸ்ட் மாதம். நிகழ உள்ள இந்த நிகழ்ச்சியின் மூலம் திரட்டிய தொகையில் ரூபாய் பத்து லட்சம் தொகையை சென்ற புதன் கிழமை, ஜூலை 28, 2021 அன்று காலை 10 மணியளவில் முதல்வர் கொரோனா நிதிக்காக அளிக்க வேண்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வழங்கியுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ள மாணவ மாணவியர்களில் பலர் நிதிநிலைமையில் பின் தங்கியவர்கள். அவர்களுடன் அனைவருக்கும் இந்த நடனத்தைப் பயிறுவித்து மற்ற கலைஞர்கலுடன் பங்கேற்க வைத்துள்ளார் மதுரை முரளிதரன் அவர்கள்.



சரித்திர சாதனை முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியை இவர் நடத்த முக்கியமான காரணங்கள்.

1. பரதக் கலைஞர் என்ற முறையில் கொரோனா நிதிக்காக பரதக்கலைஞனாக ஒரு உதவிக்கரம் நீட்டும் முயற்சி.
2. இணையம் மூலமாகவே 900 மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே சமயத்தில் நடனம் பயிற்றுவிக்க இயலும் எனக் காட்டும் ஒரு நிகழ்ச்சி.
3. அதேசமயம் இணையம் மூலமாகவே உலகம் முழுவதும் உள்ள 900 மேற்பட்ட கலைஞர்கள் ஒன்றிணைந்து ஆடவும் முடியும் என்பதை உணர்த்தும் முயற்சி.
4. வருங்காலத்தில் நடனக் கலைஞர்கள் இந்த சாத்னையை முறியடிக்க ஒரு பெரிய இலக்கை நிர்ணயிக்கும் ஒரு உலக சாதனை.
5. இவை அனைத்திற்கு எல்லாம் மேலாக கலையின் மூலமாக நம் செம்மொழியான தமிழ் மொழியின் பெருமையை உலக அரங்கில் பரவச் செய்யும் பெருமுயற்சி.
6. இணையத்தில் இதுவரை யாரும் முயன்று வெற்றி பெறாத மிகப் பெரிய சாதனை நடைபெறப் போகும் சரித்திர நிகழ்விற்க்கு.

மக்களின் அன்பினையும் ஆதரவினையும் திரட்டும் முயற்ச்சி.

# மேகதாது அணை; கர்நாடகச் சதியை முறியடிக்க தனிக்குழு அமைக்க வேண்டும் : ராமதாஸ்



மேகதாது அணை தொடர்பான கர்நாடகச் சதியை முறியடிக்க தனிக்குழு அமைக்க வேண்டும் என, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக, ராமதாஸ் இன்று (ஜூலை 29) வெளியிட்ட அறிக்கை:

"கர்நாடகத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டபிறகு ஊடகங்களுக்கு அளித்த முதல் நேர்காணலிலேயே, காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையைக் கர்நாடக அரசு கட்டியே தீரும்; அதற்கு அனுமதி பெறுவதற்காக மத்திய நீர்வளத்துறை அமைச்சரை ஓரிரு நாட்களில் சந்திக்கவிருக்கிறேன் என்று பசவராஜ் பொம்மை கூறியிருக்கிறார். புதிய முதல்வராக பொறுப்பேற்ற ஒருவர், தமிழகத்துடனான உறவை வலுப்படுத்த முயல்வதற்கு மாறாக சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணையைக் கட்டிவிட வேண்டும் என்பதில், இதுவரை முதல்வராக இருந்த எடியூரப்பாவும், இப்போது முதல்வராகப் பதவியேற்றுள்ள பசவராஜ் பொம்மையும் உறுதியாக உள்ளனர். மேகதாது அணையைக் கட்டுவதற்காக அறத்துக்கு மாறாக எதையும் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இதைத் தமிழக அரசு புரிந்துகொண்டு விழிப்புடன் செயல்பட வேண்டும். மேகதாது அணை கட்டப்பட்டால் அதுதான் கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் மிகப்பெரிய அணையாக இருக்கும். தொடக்கத்தில் ரூ.5,912 கோடி செலவில் 67.14 டிஎம்சி கொள்ளளவில் மேகதாது அணையைக் கட்டுவதற்கு திட்டமிட்ட கர்நாடக அரசு, 2019ம் ஆண்டில் அணைக்கான மதிப்பீட்டை ரூ.9,000 கோடியாக உயர்த்தியது.

மேகதாது அணையின் கொள்ளளவும் 70 டிஎம்சிக்கும் கூடுதலாக அதிகரிக்கப்பட்டது. இது ஏற்கெனவே கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ண ராஜசாகர் அணையின் கொள்ளளவான 49.45 டிஎம்சியை விட 42% அதிகம் ஆகும். இந்த அணையும் கட்டப்பட்டால் கர்நாடகத்தில் காவிரி மற்றும் துணை ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளின் அதிகாரபூர்வ கொள்ளளவு 184.57 டிஎம்சியாக அதிகரிக்கும். நீர்நிலைகளை இணைத்து சட்டவிரோதமாக கர்நாடக அரசு சேமித்து வைத்துள்ள 40 டிஎம்சி நீரையும் சேர்த்தால் மொத்தக் கொள்ளளவு 225 டிஎம்சியாக அதிகரித்துவிடும். அதன்பின், தமிழகத்துக்கு ஒரு சொட்டு காவிரி நீர் கூட கிடைக்காது.

தமிழகத்துக்கு வரும் காவிரி நீரைத் தடுப்பது 1892ம் ஆண்டில் சென்னை மாகாணத்துக்கும், மைசூர் மாகாணத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கும், காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்புக்கும் எதிரானது ஆகும். அதனால் மேகதாது அணைக்கு உச்ச நீதிமன்றமும், மத்திய அரசும் அனுமதி அளிக்காது; அனுமதி அளிக்கவும் முடியாது. இதை உணர்ந்துகொண்ட கர்நாடக அரசு இப்போது புதிய தந்திரத்தைக் கையில் எடுத்துள்ளது. மேகதாது அணை பாசனத்துக்கான அணை இல்லை; பெங்களூரு மாநகரத்துக்குத் தண்ணீர் வழங்குவதற்கான அணை என்பதுதான் அந்த உத்தியாகும். கர்நாடகத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள பசவராஜ் பொம்மை இந்தக் கருத்தை மீண்டும் கூறி உறுதி செய்திருக்கிறார். இதனடிப்படையில் தான் மத்திய அரசிடம் கர்நாடகம் அனுமதி கோரவுள்ளது.

தென்பெண்ணையாற்றின் துணை நதியான மார்க்கண்டேய நதியில் அணை கட்டுவதும் இரு மாநில ஒப்பந்தத்தின்படி சாத்தியமற்றதுதான். ஆனால், அந்த அணை குடிநீர் தேவைக்கானது என்று வாதிட்டு, அதற்கு கர்நாடகம் அனுமதி பெற்று அணையையும் கட்டி முடித்துவிட்டது.அதேபோன்று, மேகதாது விவகாரத்தில் நடந்துவிடக் கூடாது. பெங்களூரு மாநகரத்துக்கு காவிரி ஆதாரத்திலிருந்து இப்போதே தண்ணீர் எடுக்கப்படுகிறது. அதை உச்ச நீதிமன்றமும் அனுமதித்துள்ளது. மேலும், பெங்களூரு மாநகரின் ஆண்டு குடிநீர் தேவை 4.75 டிஎம்சி மட்டும்தான். அதற்காக 70 டிஎம்சி கொள்ளளவுள்ள அணையைக் கட்டுவது நியாயமல்ல. இதை மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

மேகதாது அணை விவகாரத்தில் இனி வரும் நாட்களில் எந்த நேரமும் திருப்பங்கள் நிகழ வாய்ப்புண்டு. இதைக் கருத்தில் கொண்டு இந்த விஷயத்தில் தமிழக அரசு விழிப்புடன் செயல்பட வேண்டும். காவிரி விவகாரத்தில் தமிழக அரசுக்கு ஆலோசனைகளை வழங்க காவிரி தொழில்நுட்பக் குழு என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டதைப் போல, மேகதாது விவகாரத்தை விழிப்புடன் கண்காணிக்கவும், ஆலோசனைகளை வழங்கவும் நீர் மேலாண்மையில் வல்லமை பெற்ற அதிகாரி ஒருவர் தலைமையில் குழு ஒன்றைத் தமிழக அரசு அமைக்க வேண்டும். இதை உடனடியாகச் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர் மேலாண்மையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசின் பொதுப்பணித் துறையை இரண்டாகப் பிரித்து நீர்வளத்துறை என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. ஆனால், அத்துறைக்கு இன்னும் தனிச் செயலாளர் நியமிக்கப்படாமல், பொதுப்பணித்துறைச் செயலாளரே இரு துறைகளையும் கவனித்துக் கொள்கிறார். இது புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றாது. மேகதாது விவகாரம், நீர் மேலாண்மைத் திட்டங்கள் ஆகியவற்றின் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு வசதியாக நீர்வளத்துறைக்குத் தனிச் செயலாளர் ஒருவரைத் தமிழக அரசு நியமிக்க வேண்டும்". இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# மின்சார வாகன விலையில் 40% வரை ஊக்கத்தொகை: தமிழகத்தில் இதுவரை 14,366 வாகனங்கள் விற்பனை

மின்சார வாகனங்களை வாங்க மத்திய அரசு அளிக்கும் ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை 14,366 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பெட்ரோல், டீசல் விலை அதிகரிப்பால் தினசரிப் போக்குவரத்துக்கு சொந்த வாகனத்தைப் பயன்படுத்துவோர், மாற்றுத் தீர்வாக மின்சார வாகனங்களை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தியாவில் மின்சார வாகனங்களை விரைவாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவும், உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு 'எஃப்எம்இ2' என்ற திட்டத்தைக் கடந்த 2019ம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது.

இந்நிலையில், அந்த திட்டத்தின்கீழ் மின்சார இருசக்கர வாகனங்களை வாங்குவோருக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகையை கிலோவாட் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரத்தில் இருந்து, ரூ.15 ஆயிரமாக அதிகரித்து கடந்த ஜூன் 11ம் தேதி உத்தரவிடப்பட்டது. அதன்படி, மின்சார வாகனத்தின் விலையில் அதிகபட்சம் 40 சதவீதம் வரை ஊக்கத்தொகையாகப் பெறலாம். மேலும், 'எஃப்எம்இ2' திட்டம் 2024 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்புகள்



காரணமாக மின்சார வாகனங்களை வாங்குவோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

மத்திய அரசின் கனரகத் தொழில்துறை தகவலின்படி, நாடு முழுவதும் இன்று மதியம் வரை 91,990 மின்சார வாகனங்களை வாங்க ரூ.276.47 கோடி ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஊக்கத் தொகையுடன் வாங்கப்பட்ட வாகனங்கள் மூலம் தினமும் சுமார் 59,371 லிட்டர் எரிபொருள் சேமிக்கப்படுவதாகவும், 1.35 லட்சம் கிலோ கார்பன்டை ஆக்சைடு வெளியேறுவது குறைவதாகவும் கனரகத் தொழில்துறை தெரிவித்துள்ளது. ஊக்கத்தொகையைப் பெற்று மின்சார வாகனங்களை வாங்குவதில் கர்நாடகாவுக்கு அடுத்தபடியாகத் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. கர்நாடகாவில் இன்றுவரை 20,115 மின்சார வாகனங்கள் ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மின்சார வாகன விற்பனையாளர்கள் கூறும்போது, "தமிழகத்தில் இன்று (ஜூலை 29) மதியம் வரை 13,668 இருசக்கர வாகனங்கள், 695 மூன்று சக்கர வாகனங்கள், 3 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் 14,366 வாகனங்கள் மத்திய அரசின் ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எந்தெந்த நிறுவனத்தின், எந்த மாடல் வாகனத்துக்கு இந்த ஊக்கத்தொகை கிடைக்கும் என்பதை https://fame2.heavyindustry.gov.in/ModelUnderFame.aspx என்ற இணையதளத்தில் பொதுமக்கள் தெரிந்துகொள்ளலாம்.

இதே இணையதளத்தில், தங்களுக்கு அருகில் உள்ள விற்பனையாளர் விவரத்தையும் அறிந்துகொள்ள முடியும். அரசு குறிப்பிட்டுள்ள மாடல் மின்சார வாகனத்தை வாங்கும்போதே மொத்த விலையில் ஊக்கத் தொகையைக் கழித்து விலைக்குறைப்புடன் வாகனத்தை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம்" என்று தெரிவித்தனர்.

# சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆகஸ்ட் 2ம் தேதி சென்னை வருகை

சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆக.2ம் தேதி சென்னை வருகிறார். தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு 2வது முறையாக கடந்த 18ம் தேதி டெல்லி சென்றமுதல்வர் மு.க.ஸ்டாலின், அங்குகுடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்தித்துப் பேசினார். அப்போது, தமிழக சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் பேரவை அரங்கில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படம் திறப்பு விழாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். முதல்வரின் அழைப்பை ஏற்ற குடியரசுத் தலைவர், விழாவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டார்.

அதன்படி, 5 நாள் பயணமாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், வரும் ஆக.2ம் தேதி தமிழகம் வருகிறார். அவரது தமிழக பயணத் திட்டம் தற்போது வெளியாகியுள்ளது. ஆக.2ம் தேதி காலை 9.50 மணிக்கு டெல்லியில் இருந்து விமானப்படை விமானம் மூலம் புறப்பட்டு 12.45 மணிக்கு சென்னை வந்து சேர்கிறார். சென்னை விமான நிலையத்தில் அவரை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

விமான நிலையத்தில் இருந்து கிண்டி ராஜ்பவனுக்கு செல்லும் குடியரசுத் தலைவர், அங்கு மதிய உணவை முடித்து சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். அங்கிருந்து மாலை 4.35 மணிக்கு புறப்பட்டு, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை வளாகத்துக்கு வருகிறார். மாலை 5 முதல் 6 மணிவரைநடக்கும் சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் பங்கேற்கிறார். அப்போது, பேரவை அரங்கில்முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படத்தை திறந்து வைக்கிறார்.

அன்றிரவு ராஜ்பவனில் தங்கும் குடியரசுத் தலைவர், மறுநாள் (ஆக.3) காலை உணவு முடித்த பின், சென்னை விமான நிலையம் சென்று, அங்கிருந்து விமானத்தில் கோவை செல்கிறார். சூலூர் விமானப்படை தளத்தில் இறங்கி, அங்கிருந்து ஹெலிகாப்டரில் உதகை செல்கிறார். உதகை ராஜ்பவனில் தங்கி 3 நாள் ஓய்வெடுக்கிறார். இதனிடையே, ஆக. 4ம்தேதி காலை 10.20 மணிக்கு வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு சேவைகல்லூரியை பார்வையிடுகிறார். 6ம் தேதி காலை உதகையில்இருந்து ஹெலிகாப்டரில் சூலூர்விமானப்படை தளம் வரும் குடியரசுத் தலைவர், அங்கிருந்து விமானப்படை விமானத்தில் டெல்லி திரும்புகிறார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா–தென்மராட்சி நிறுவனம் நடத்திய ஒன்றுகூடலும் ஊடகவியலாளர்கள் சந்திப்பும்

## பல நாடுகளில் இயங்கும் "தென்மராட்சி நிறுவன கிளைகளோடு இணைந்து பல கல்வி சார் நற்பணிகளை முன்னெடுத்து வரும் முற்போக்கான செயற்பாடுகள்





கனடா- தென்மராட்சி நிறுவனம் நடத்திய ஒன்றுகூடலும் ஊடகவியலாளர்கள் சந்திப்பும் கடந்த சனிக்கிழமையன்று மேற்படி நிறுவனத்தின் தற்போதைய தலைவரும் TIMES IRON WORKS INC. என்னும் பொறியியல் நிறுவனத்தின் தலைவருமான திரு. தேவதாஸ் (தொழிலதிபர் தாஸ்) அவர்களின் இல்ல வளாகத்தில் இடம்பெற்றது. மதிய உணவோடு கூடிய ஒரு சந்திப்பாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்விற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தனது பாரியாருடன் கலந்து கொண்டார். பல்வேறு ஊடக நண்பர்கள் அங்கு கலந்து கொண்டார்கள்.

அன்றைய நிகழ்வை கனடா தென்மராட்சி நிறுவனத்தின் செயலாளர் திரு. சீலன் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் கனடாவில் பல ஆண்டு காலமாக இயங்கிவரும் தென்மராட்சி நிறுவனத்தின் பணிகள் கனடாவிற்குள் மாத்திரம் கட்டுப்படுத்தப்பட்டு இல்லாமல் வேறு நாடுகளிலில் இயங்கிவரும் நிறுவனத்தின் கிளைகளோடு நெருங்கிய தொடர்பையும் இணக்கமான நட்பையையும் கொண்டு இணைந்த பணிகளாய் பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றும். குறிப்பாக ஏனைய நாடுகளிலில இயங்கும் கிளைகளோடு சேர்ந்து கல்வி சார்ந்த பல உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

மேலும் தென்மராட்சிப் பகுதியில் உள்ள சுமார் 60 உயர் நிலை மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவ மாணவிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கொம்பியுட்டர் வகுப்பைகள் மற்றும் இதர விஞ்ஞான பரிசோதனைக் கூடங்கள் ஆகியவற்றையும் நிறுவ நிதி உதவிகள் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய தற்போதைய கனடா தென்மராட்சி நிறுவனத்தின் தலைவரும் தொழிலதிபருமான திரு. தேவதாஸ் (தாஸ்) தனது உரையில், தான் இந்த அமைப்போடு சேர்ந்து இயங்குவதிலும் அதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதிலும் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவிக்கையில் எமது தாய் மண்ணில் பல தேவைகளோடு உள்ள எமது உறவுகளுக்கு உதவிட நாம் பின்னிற்கக் கூடாது என்றும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றிய தென்மராட்சியைச் சேர்ந்தவரும் "கனடா தமிழன் வழிகாட்டி" வர்த்தகக் கையேடு வெளியீட்டாளருமான திரு. செந்திலாதன் தனது உரையில் "கனடாவில் இயங்கிவரும் "தென் மராட்சி நிறுவனம் கடனாவில் நிறுவப்பட்ட ஆரம்பகாலத்திலிருந்தே நான் இணைந்து செயற்பட்டு வருகின்றேன். 1993ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு, காலத்திற்கு காலம் நிர்வாகிகள் மாற்றம் செய்யப்பட்டாலும் ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் தொடர்ச்சியா தமது ஆதரவை வழங்கி வருகின்றார்கள் என்றும் அதைப் போன்றே என்னாலான ஆதரவை நான் தொடர்ச்சியாக வழங்கிவருகின்றேன்" என்றும் தெரிவித்தார்.

மேலும் பலர் உரையாற்றினார்கள். அவர்களில் திரு. திவ்வியராஜன் வைரமுத்து, திரு. விநாசித்தம்பி துரைராஜா, திரு. சௌந்தர், விளையாட்டுத்துறைப் பொறுப்பானர் திரு. திருநாவுக்கரவு (திரு) ஆகியோரும் உரையாற்றினார்கள்.

அங்கு உரையாற்றிய திரு. விநாசித்தம்பி துரைராஜா தனது உரையில் தென்மராட்சி என்னும் வளமிக்க பிரதேசத்தை வெளிநாடுகளில் இயங்கும் தென்மராட்சி நிறுவனத்தின் பல கிளைகளோடு இணைந்து அபிவிருத்தி செய்வதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்று எனவும், அதற்கு பல நாடுகளிலிருந்து நிறையவே ஆதரவுகள் பெருகி வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் கல்வி, விளையாட்டு மற்றும் கவின் கலைகள் ஆகியவை தொடர்பாக எமது பிரதேசத்தில் நலிந்து போயுள்ள நிலையிலிருந்து அங்குள்ள விளையாட்டு வீரர்களையும் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில் பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து, கலை மற்றும் பண்பாட்டு செயற்பாடுகள் ஆகியவை தொடர்பாக உரையாற்றிய திரு. திவ்வியராஜன் "தென்மராட்சி அருகிப்போயுள்ள தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலை வடிவங்களை முன் னேற்றும் பணிகளையும் கனடா தென் மராட்சி நிறுவனம் ஏனைய நாடுகளில் இயங்கும் நிறுவனத்தின் கிளைகளோடு இணைந்து ஆற்றவுள்ளது என்று குறிப்பிட்டார்.

இவ்வாறாக ஏனைய பல நாடுகளில் இயங்கும் "தென்மராட்சி நிறுவன கிளைகளோடு இணைந்து பல கல்வி சார் நற்பணிகளை முன்னெடுத்து வரும் முற்போக்கான செயற்பாடுகள் தொடர்பாக அறிந்து ஊடக நண்பர்கள் தங்கள் பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCARBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# TELO இயக்கத்தின் மூத்த தலைவர்கள் உட்பட சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 43 அரசியல் கைதிகளின் நினைவு தினம்



தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூத்த தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் உட்பட்ட வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 43 அரசியல் கைதிகளின் நினைவுத தினம் 27-07-2021 அன்று கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் சுடரேற்றி மலர் தூவி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உப தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் சுகாதார முறைப்படி கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



# மன்னாரில் வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு

வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு தினமான தமிழ் தேசிய வீரர்கள் தினம் செவ்வாய்க்கிழமை (27) காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அலுவலகத்தில் நினைவு கூறப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வெளிக்கடை சிறையில் படு-கொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்தன், ஈ.பி.ஆர். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய மை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (27-07-2021)**





# மன்னார் வங்காலை பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலா பயணிகள் பறவைகளை பார்வையிட கோபுரம்



சர்வதேச பறவைகள் பாதுகாப்பாக தங்கிச் செல்லும் வங்காலை பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலா பயணிகள் பார்வையிடுவதற்கான கோபுரம் நிர்மாணிக்கும் வகையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (27) காலை வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பிரேமலால் எதிரிசிங்க தலைமையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் மற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள் யு.என்.டி.பி நிறுவன அதிகாரிகள், சர்வமத தலைவர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

குறித்த கோபுரம் சுமார் 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 35 அடி உயரத்தில் இருந்து பறவைகளை அவதானிக்கும் வகையில் குறித்த கோபுரம் அமைக்கப்படவுள்ளது.

வங்காலை பறவைகள் சரணாலயம் சர்வதேச பறவைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

13 வகையான வெளிநாட்டு பறவைகள் சுமார் 5 இலட்சம் வரை ரசிய பகுதியில் இருந்து 14 நாடுகளை கடந்து வங்காலை சரணாலயத்திற்கு வருகை தருகின்றன. பருவ காலப்பகுதியில் குறித்த பறவைகள் இங்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (27-07-2021)**







# திருகோணமலை மாவட்டத்தில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா – 2021.07.16

திருகோணமலை மாவட்டத்தில் 12 பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகளை அமைத்துக் கொள்வதற்கான உபகரணங்களை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு IMHO - USA Ratnam Foundation (UK) இணைந்து வழங்கி வருகின்றது. அதனடிப்படையில் தி.்.ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரிக்கான திறன் வகுப்பறைக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டு திறன் வகுப்பறை திறப்பு விழா 16-07-2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி.லி.ரவிராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிர-தம குருக்கள் சோ.ரவிச்சந்திரன் அவர்கள், மற்றும் பிரதம விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சிவானந்தம் ஸ்ரீதரன் அவர்கள், விசேட விருந்தினராக IMHO நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட நலன்புரி இணைப்பாளர் திரு. தி.பிரபாகரன் அவர்கள், இளைப்பாறிய ஆசிரியர் கார்த்திகேசு மணிமேகலை அவர்களும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பாடசாலை சமூகத்தினரும் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர் தமது உரையில் மகளிர் பாடசாலைகளில் இப்பாடசாலை முன்னணியில் திகழ்கின்றது. அகில இலங்கையிலும், சர்வதேசத்திலும் புகழ் பூத்த ஒர் பாடசாலை. 15.07.2021 இல் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் பரிசளிப்பில் அதிக இடங்களை இக்கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இங்கு திறன் வகுப்பறைகளை அமைத்தல் மிகவும் சிறப்பானதும் மிகவும் பொருத்தமானதுமாகும் எனவும் தெரிவித்தார்.

அதிபர் தனது உரையில், IMHO நிறுவனம், Ratnam Foundation னும் இணைந்து வட-கிழக்கில் திறன் வகுப்பறைகளை அமைத்து கற்பித்தலில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர் எனத்தெரிவித்ததுடன் இதற்காக உதவிய IMHO நிறுவன தலைவர் வைத்திய கலாநிதி திருமதி. ராஜம் தெய்வேந்திரன், வைத்திய கலாநிதி திரு. சு.நித்தியானந்தன், IMHO நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதியாக செயற்படும் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. S.கிருஸ்ணகுமார் மற்றும் IMHO நிறுவனத்தின் திருகோண-மலை மாவட்ட இணைப்பாளர் திரு. T.பிரபாகரன், பழைய மாணவர்களுக்கும் உளங்கனிந்த நன்றிகளை பாடசாலை சமூகம் சார்பாக தெரிவித்தார். மாணவர்களின் மும்மொழிகளிலான நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

*28.07.2021*





# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 20 - 01 - 1934



இறப்பு: 05 - 08 - 2020

# அமரர். சின்னத்தம்பி நவரத்தினம்

யாழ்ப்பாணம் பலாலியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர். சின்னத்தம்பி நவரத்தினம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

*எம் இதயமென்னும் கோவிலில் தெய்வமாய் நிறைந்திட்ட பப்பாவே!*
*நம்ப முடியவில்லை ஓராண்டு கடந்ததை...*

*அன்பின் சிகரமாய் அரவணைப்பில் அர்த்தமாய் வாழ்ந்த எம் பப்பாவே!*

*வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை நீங்கள் இல்லாத வெற்றிடத்தை*

*ஆண்டொன்று கடந்தாலும் பப்பா உங்கள் இன்முகமும்,*
*புன்சிரிப்பும் எம் மனதை விட்டகலவில்லை பப்பா...*

*அன்புடன் கரம்பிடித்த மனைவி*
*ஆசையாய் நேசமாய் வளர்த்த பிள்ளைகளும், பாசமாய் பண்புடன் வளர்த்த பேரப்பிள்ளைகளும்*
*உங்களை இழந்து தவிக்கின்றார்கள் தினந்தோறும்..*

*இறைக்கே இணையாகி வானிற்கு நிகராகி பேரன்பிற்கு இலக்கணமானவரே!*
*மணி மகுடம் அணியா ஒரு அரசன் பப்பா நீங்கள்*

*கண்ணீர் மல்க வேண்டுகின்றோம் மீண்டும் நீங்கள் எம்மிடத்தில் வர வேண்டும்...*

*ஒழுக்கத்தால் தீபமேற்றி சூடமாக எரிந்து எமக்கு ஒளி தந்த பப்பா,*
*நீங்கள் மண்ணுலகை விட்டு மறைந்தாலும் எங்களின் மனங்களில் என்றென்றும் வாழ்ந்திடுவீர்கள் பப்பா!*

*எங்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டி நின்ற பப்பா!*
*ஏற்றிய எம் மனங்களில் நிறைவீர்..*

*ஸ்ரீ வரசித்தி விநாயகரின் தாள்களில் அடைந்திடுவீர்...*

**ஓம் சாந்தி சாந்தி!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

தகவல்: அன்னலட்சுமி (மனைவி): (905) 554-3499
யசோ (மகள்): (647) 404-1267

# மரண அறிவித்தல்

## டாக்டர் சபாரத்தினம் முத்துவேலு



**யாழ். தாவடியை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும்,
கனடா ஸ்காபுறோவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட
Dr. சபாரட்ணம் முத்துவேலு அவர்கள்
25-07-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார், காலம்சென்றவர்களான முத்துவேலு, கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சுப்ரமணியம், பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சொர்ணபாக்கியத்தின் (இன்பமலர்) பாசமிகு கணவரும்,

ஜீவகலா, சிவராஜன், நிரஞ்சலா, ஜெயராஜன் (Germany), கம்சலா, ஷர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரட்ணராஜா, கமலா, ஐங்கரன், வனிதா (Germany), மனோகரன், ஸ்ரீமுருகன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலம்சென்றவர்களான யோகம்மா, பொன்னாபரணம், கனகசபாபதி, பூபதி, இராசு ஆகியோரின் அன்பு சகோதரரும்,

செல்வமலர், அரியமலர், முருகதாஸ், இந்திரஜோதி, மீனா, மற்றும் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம், குமாரசுவாமி, பரமேஸ்வரி, கண்ணுத்துரை ஆகியோரின் மைத்துனரும், ஜெயனொளிபவன், சிவபாதசுந்தரம், மற்றும் காலஞ்சென்றவர்களான சித்திவிநாயகப்பிரகாசம், சுசிலா ஆகியோரின் சகலனும்,

சிந்துஜா, சௌமியா, வைஷ்ணவி, வினுஷன், அர்ச்சனா, சோபிகா, பிரவீன், ஜவின், கிரிஷாந்த், அசோக், ஹரிசன், அஷ்மிதா, ராஜரூபன், கோபி, ஜொகுவா, கிந்துசா, சாயிதனா ஆகியோரின் பாசமிகு பேரனும்,

இஷாரா, இவானா, ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் யூலை 31, 2021 சனிக்கிழமை மாலை 6:00 மணியிலிருந்து இரவு 9:00 மணிவரையும், மறுநாள் ஆகஸ்ட் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 2:30 மணிவரையும் பார்வைக்காக 8911 Woodbine Avenue, Markham, ON, L3R 5G1 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home மண்டபத்தில் வைக்கப்பெற்று, தொடர்ந்து மாலை 4:00 மணிக்கு 12492 Woodbine Avenue, Gormley, ON, L0H 1G0 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Highland Hills Crematorium இல் தகனக்கிரியைகள் நடைபெறும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தோற்றம்:**
**06-12-1926**
**மறைவு:**
**07-25-2021**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
மனைவி: (416) 609-3739, சிவராஜன் (மகன்): (416) 804-6693
ஜெயராஜன் (மகன்): 49 160-8171-620, மனோகரன் (மருமகன்): (416) 722-2914
ரட்ணராஜா (மருமகன்): (647) 619-7388, ஸ்ரீமுருகன் (மருமகன்): (416) 660-9171


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம்
உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor



Toronto District School Board

2021-22 SCHOOL YEAR

# அனைத்து ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலைகள் சார்ந்த குடும்பங்களின் கவனத்திற்கு

2021-22 பாடசாலை ஆண்டில் வகுப்பறை கற்றல் அல்லது இணைய வழி ஊடான கற்றல் ஆகியவற்றுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு அனைத்து மாணவர்களும் ஒரு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த தெரிவிற்கான விண்ணப்பப் பத்திரத்திற்குரிய இணைப்பு அடங்கிய மின்னஞ்சல் ஒன்று மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்கள் ஆகியோருக்கு எதிர்வரும் **ஆகஸ்ட் 5, 2021** அன்று அனுப்பி வைக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு மாணவருக்கும் தனியாகவும் மின்னஞ்சல் அனுப்பப்படும்.

*ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபையில் மின்னஞ்சல் விலாசம் இல்லாதவர்கள் ஆகஸ்ட் 10 - ஆகஸ்ட் 12 திகதிகளுக்கு இடைப்பட்ட நாட்களில், ஒரு தொலைபேசி அழைப்பைப் பெறுவார்கள். மாணவர்களின் விண்ணப்பப் பத்திரம் எமக்கு கிடைக்காவிடில், தானாகவே அவர்களின் பெயர்கள் வகுப்பைக் கற்றல் பட்டியலில் சேர்க்கப்படும்.*

மேலதிக விபரங்களை அறிய **tdsb.on.ca/SelectionForm** என்னும் இணையத்தளத்தைப் பார்க்கவும்

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION — ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




உலக செய்திகள்
World News

# உயிரினம் அல்லது தாவர இனங்களுக்களின் சூழலியலுக்கு மனிதர்களால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க வேண்டும்

உயிரினம் அல்லது தாவர இனங்களையும் சூழலியல் செயல்முறைகளையும் மீட்டுருவாக்கம் செய்வதன் மூலமாக, ஓரிடத்தில் மனிதர்களால் ஏற்பட்ட பாதிப்பைக் குறைத்துப் பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகப்படுத்த வேண்டிய ஒரு தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்காக ஒரு கருத்தாக்கத்தின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. அது அடிப்படை.மனிதர்களின் செயல்பாடுகளால் பாதிக் கப்பட்ட சுற்றுச்சூழலை மீள் உருவாக்கம் செய்வதே சூழலியலாளர்களின் கனவு. ஒருவகையில், மனித இனம்தான் சூழலியல் சீர்குலைவுக்குக் காரணம் என்பதால், மனிதர்களே அதைச் சரிசெய்ய வேண்டும் என்கிற நியாயமாகவும் அது கருதப்படுகிறது.

2021 முதல் 2030 வரையிலான பத்து ஆண்டுகளைச் சூழலியல் தொகுதி மீட்டுருவாக்கத் தசாப்தமாக (Decade for ecosystem restoration) ஐ.நா. அறிவித்துள்ளது. இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யும் செயல்பாடுகளில் Rewilding என்பதும் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. இந்தக் கருத்தாக்கம் 1998இல் அமெரிக்க உயிரியலாளர்கள் மைக்கேல் சூலே, ரீட் நாஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. அடைப்பிடத்துக்குள் வளர்க்கப்பட்ட காட்டுயிர்களை மீண்டும் காட்டுக்கு அனுப்புவதாக இந்தக் கருத்தாக்கம் வரையறுக்கப்பட்டது. பிறகு, ஓரிடத்தில் பரவலாக இருந்து, மனிதச் செயல்பாடுகளாலும் சுற்றுச்சூழல் சீர்கேட்டாலும் அழிந்த உயிரினங்களை மீண்டும் பழைய இடத்தில் அறிமுகப்படுத்தி, அந்த இனத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதாக இந்தக் கருத்தாக்கம் திருத்தியமைக்கப்பட்டது. இப்போது, ஒரு சூழலியல் தொகுதியையே மறுசீரமைப்பு செய்வதாக இந்தக் கருத்தாக்கம் மாறியிருக்கிறது. இந்தக் கருத்தாக்கத்தில் மூன்று முக்கிய அம்சங்கள் உண்டு: மையம் (core), வழித்தடம் (corridor), ஊனுண்ணி (carnivore).

முக்கிய அம்சங்கள்ஒரு விலங்கைக் காட்டுக்குள் மீண்டும் அனுப்பும்போது, அதற்கான அடிப்படை வாழிடம் பாதுகாக்கப்பட்ட மையப்பகுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த இனம் அங்கே நிலைக்கும். அந்த மையப்பகுதியுடன் சுருங்கிவிடாமல், வெவ்வேறு காட்டுப் பகுதிகளையும் அந்த உயிரினங்கள் எளிதில் அணுகுவதற்காக வழித்தடங்கள் அமைக்கப்பட வேண்டும். மூன்றாவதாக அளவில் பெரிய, முக்கியத்துவம் வாய்ந்த ஊனுண்ணிகள், ஓர் உணவுச்சங்கிலியில் ஏற்படுத்தும் தாக்கம் முக்கியமாகிறது. ஓர் ஊனுண்ணி தன் வாழிடத்திலிருந்து மறையும்போது சிறிய ஊனுண்ணிகள், தாவர உண்ணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, சூழலியல் சமநிலை சீர்குலைகிறது.



ஆகவே பெரிய ஊனுண்ணிகளை மீண்டும் அந்தச் சூழலில் அறிமுகப்படுத்துவதன் மூலம், சூழலியல் சமநிலையை மீளமைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுச்சூழலை மீட்டுருவாக்கம் செய்வதில் இரண்டு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஒரு வாழிடத்தில் உயிரினங்களையும் தாவர இனங்களையும் மனிதர்கள் கொண்டுசேர்ப்பது ஒரு வகை. அந்த இடத்தில் மனிதர்களின் தலையீட்டை நீக்கிவிட்டு ஒதுங்கிக்கொள்வது இன்னொரு வகை.

உதாரணமாக, ஆறு சார்ந்த வாழ்விடங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால், அழிந்துபோன மீன் இனங்களை அங்கே சேர்க்கலாம் அல்லது குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணைகளை மட்டும் அகற்றிவிட்டு இயற்கை தன் பணியைத் தொடர்வதற்கு வழிவிடலாம்.

அமெரிக்காவின் யெல்லோ ஸ்டோன் தேசியப் பூங்காவில் ஓநாய் அறிமுகம், பிரிட்டனில் பீவர் பாலூட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டது உள்ளிட்டவை வெற்றியடைந்தன. தோல்வி யடைந்த உதாரணங்களும் உண்டு.



ஆனால், அவை செயல்முறையின் பிழையால் விளைந்தவை என்றும், கருத்தாக்கத்தின் தோல்வியாக அவற்றைப் பார்க்கக் கூடாது என்றும் சில சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியாவில் ராஜஸ்தான் பிஸால்பூர் புல்வெளிகளில் இயல் தாவர இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது, சிறிய வகைப் பன்றிகள் - கங்கை நதி முதலைகளைப் பாதுகாப்பதற்கான செயல்திட்டங்கள் ஆகியவை வெற்றி பெற்றன.

புலி போன்ற உயிரினங்களை ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு இடம்பெயர்த்துச் சூழலியலைச் சீரமைப்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், இந்தியாவில் முன்பு வாழ்ந்து 75 ஆண்டுகளுக்கு முன் அற்றுப்போய்விட்ட சிவிங்கிப்புலியை மீண்டும் இந்தியக் காடுகளுக்குள் அறிமுகப்படுத்தும் திட்டம் சூழலியலாளர்களிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியக் காடுகளின் தற்போதைய நிலை சிவிங்கிப்புலி வாழ ஏதுவாக இருக்குமா, பல ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்ட ஓர் உயிரினம் திடீரென்று அறிமுகப்படுத்தப்படும்போது ஏற்படும் பின்விளைவுகளைக் கணிக்க முடியாது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

Rewilding கருத்தாக்கத்துக்கு எதிரான ஒரு முக்கிய வாதம் இது. ஒரு சூழலியலின் சிக்கலான வலைப்பின்னலுக்குள் தனிப்பட்ட ஓர் இனத்தை மட்டும் அறிமுகப்படுத்துவது சரியாக இருக்காது என்று விமர்சிக்கப்படுகிறது. ஒரு இனத்தை அறிமுகப்படுத்துவதால் சூழலியல் சீரமைக்கப்பட்டு விடும் என்று உறுதியாகச் சொல்லமுடிகிற அளவுக்கு, மனித இனம் சூழலியல் வலைப்பின்னல்களை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது அவர்களது வலியுறுத்தல்.

ஆப்பிரிக்காவில் சிப்பிகளைக் கட்டுப்படுத்து வதற்காகக் கடல் சூழலியலுக்குள் அறிமுகப் படுத்தப்பட்ட சிங்கியிறால்கள், அந்தச் சிப்பிகளாலேயே வேட்டையாடப்பட்ட நிகழ்வு ஒரு பிரபலமான உதாரணம். சிங்கியிறால்கள் அழிந்த சிறிது காலத்துக்குள், அந்தக் கடல் சூழலியலில் வாழ்ந்த உயிரினங்கள் வேறு வகையில் தகவமைத்துக்கொண்டிருந்தன. ஒரு இடைவெளிக்குப் பின் மீண்டும் சிங்கியிறால்கள் உள்ளே வந்தபோது, அவை ஆபத்தை எதிர்கொண்டன.

அற்றுப்போன இனம் மீண்டும் அறிமுகப் படுத்தப்படும்போது, மாறிவிட்ட சூழலியலில் அயல் ஊடுருவல் இனங்களாக அவை வெளிப் படுத்திக்கொள்வதற்கான சாத்தியம் இருக்கிறது. அவற்றால் சூழலியல் சீர்குலைவுகளும் புதிய நோய்த்தொற்றுக்களும் ஏற்படலாம். சில வேளை விநோதக் கலப்பினங்கள் உருவாகலாம். இப்படிப் பல சிக்கல்கள் இருந்தாலும், முழுமையான ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மீட்டுருவாக்கத் திட்டங்கள் வெற்றிபெறும் என்று அறிவியலாளர்கள் உறுதிப்படத் தெரிவிக்கிறார்கள். இந்தக் கருத்தாக்கத்தை நடைமுறைப்படுத்தும்போது எந்த மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்பதை முற்று முழுமையாகக் கணிக்க முடியாது என்பதால், இது பற்றிய ஒற்றை நிலைப்பாட்டை எடுப்பது கடினமாக இருக்கிறது.

- **குணநாதன் (மட்டக்களப்பு)**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
rotect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 22)*


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

'பார்த்திபேந்திரா பெண் குலத்தை வெறுக்கும் நீ காதலின் இனிமை, புதுமை பற்றி அறியாதவன்' என்றான் ஆதித்தகரிகாலன். 'ஓகோ அதுதான் என்னை விட வந்தியத்தேவனை உங்களுக்கு நன்றாகப் பிடிக்கிறதோ? இளம் பெண்களை கண்டவுடன் பல் இளிக்கும் பண்பு கொண்டவன்!' என்றான் பார்த்திவேந்திரன். ஆதித்தகரிகாலன், 'அவனிடம் உனக்கு எப்பொழுதும் குரோதம் தான்'. 'அப்படியல்ல அரசே நீங்கள் எப்பொழுதாவது நந்தினியைச் சந்தித்தீர்களா?' என்றான் பார்த்திபேந்திரன். 'பார்த்தேன் தஞ்சை அந்தப்புரத்தில் சந்தித்தேன். எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அடுத்த பட்டம் யாருக்கு என்பது பற்றி எந்த சந்தேகமும் வரலாகாது என்று என் தந்தையும், பாட்டியும் மற்ற பெரியோர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்தார்கள். (மதுராந்தகன் துஷ்பிரயோகம் செய்வான் என்று முன்பே எண்ணினார்கள் போலும்) இளவரசர் பட்டம் கட்டியதோடு, பரகேசரிப் பட்டமும் அளித்து கல்வெட்டு சான்றுகள் ஏற்படுத்தும் உரிமையும் அளித்தார்கள். என் தந்தை சோழ ராஜ்ஜியம் ஆளும் பொறுப்பு உன்னதே! என்றார். பின்பு பழமையான சோழ குலத்து மணிமகுத்துடன் என்னை சக்கரவர்த்தி அந்தப்புரத்திற்கு அழைத்து சென்றார். என் தாயிடமும், பாட்டியிடமும், மற்றைய மாதரிடமும் ஆசி பெறுவதற்கு ஆவலுடன் சென்றேன். அந்தப்புரத்தில் அனைவரும் அகமகிழ்ந்து, ஆடை ஆபரணங்கள் புனைந்து, மகிழ்ந்து நின்றனர். அத்தனை பெண்களும் என்னை நோக்கினார்கள். ஆனால் நான் நந்தினியை மட்டும் நோக்கினேன். என்னால் நம்ப முடியவில்லை மிகுந்த சந்தோசம் என் பட்ட மகிக்ஷி இவள். அரியணை ஏறப் போகிறாள் என்று கற்பனைக் கோட்டை கட்டினேன். நான் குந்தவையை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று, அவளிடம் நந்தினியை பற்றி வினாவினேன். அப்போது எனக்கு பெரும் அதிர்ச்சி. நந்தினி பெரியபழுவேட்டரையரை மணந்து பழுவர் இன்பராணியாக விளங்குகிறாள் எனறு சொன்னாள். பழுவேட்டரையரை மணம் புரிந்த போது நாங்கள் ஊரில் இல்லை. இப்படி நடக்கும் என்று நான் நினைத்ததேயில்லை. என்னைக் காதல் புரிந்தாள், வீரபாண்டியன் தன் காதலன் என்றாள், இப்பொழுது எப்படி பழுவேட்டரையரை மணந்தாள்? என் மகிழ்ச்சி மறைந்தது' என்றான் கரிகாலன். இதைக் கேட்ட பார்த்திவேந்திரன் கண்கலங்கினான். 'உங்கள் பட்டாபிஷேகம் நடந்த அன்று நீங்கள் உற்சாகம் இழந்து இருந்தது எனக்கு ஞாபகம் வருகிறது' என்றான். மேலும் கேட்டான் 'அவள் நினைவை விட்டுவிடாமல் இன்னும் ஏன் கலங்கி நிற்கிறீர்கள்' என்று.

கேள் பார்த்திபேந்திரா, ஒரு நாள் நந்தினி என்னை பழுவூர் அரண்மனைக்கு அழைத்திருந்தாள். அப்பொழுது அவள் கணவன் பெரிய பழுவேட்டரையர் அங்கில்லை. நானும் பல விடயங்களில் எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள விரும்பி அங்கு சென்றேன். என் பட்டாபிஷேக நாளன்று தந்தை மூர்ச்சை அடைந்து விழுந்தார். அதற்கு நந்தினி காரணம் போல் எனக்கு தோன்றியது. அதன் பின் என் தந்தை ஆரோக்கியமாக இல்லை. ஆதனால் நந்தினியைப் பார்க்கச் சென்றேன். அரண்மனைத் தோட்டத்தில் லதா மண்டபத்தில் அவளைச் சந்தித்தேன். அவள் மோகம் என்னைப் பற்றிக் கொண்டது. அவளோ என்னைப் பார்த்து மகிழ்ச்சி தெரிவித்தாள். நானோ எனக்கு உன்னை இழந்தது பெரும் கவலை என்று தெரிவித்தேன். அதற்கு அவள், 'தாங்கள் என் காதலைக் கொன்றீர்கள், பின்னர் என் காதலனைக் கொன்றீர்கள் இப்பொழுது என்னைக் கொல்வதற்கு எண்ணுகிறீர்கள்' என்றாள். 'நந்தினி நான் ஏன் உன்னைப் கொல்ல வேண்டும் நீ தான் என்னைக் கொன்று கொண்டிருக்கிறாய்!' என்றேன். 'வா நாம் இருவரும் தூர தேசத்திற்கு போவோம்' என்று என் வாய் கூசாமல் கூறினேன். அதற்கு அவள், 'சோழ சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில நீங்கள் சக்கரவர்த்தியாக வீற்றிருப்பதையே நான் விரும்பகிறேன்' என்றாள்.

மேலும் நாம் பழுவேட்டரையரைக் கொன்றுவிட்டு, சக்கரவர்த்தியை சிறையில் போட்டுவிட்டு தாங்கள் நாடு ஆண்டு, சக்ரவர்த்தியிடம் என்னைத் தங்கள் பட்டமகிஷியாக கொள்வதாக இருந்தால் சொல்லுங்கள் என்றாள். அதைக் கேட்டு சினம் கொண்டு அவளை திட்டித் தீர்த்தேன். அவள் என்னிடம் 'எப்பொழுதாவது மனதை மாற்றிக் கொண்டால் என்னிடம் வாருங்கள்' என்றாள். அதன் பின் அவளை எதிர்கொள்ளவில்லை. பார்த்திபேந்திரன் வியப்புடன் 'இந்தப் பாதகியை மீண்டும் சந்தித்ததே தவறு' என்றான். 'நண்பா நான் அவளை விட்டுவிட்டாலும் அவள் என்னை விடுவதாக இல்லை.




பாடாய்ப்படுத்துகிறாள் நான் தஞ்சைக்குப் போகாத காரணம் நந்தினி தான். அவள் மாயையில் நான் விழுந்து அவள் சொன்னபடி நடந்துவிடுவேனோ என்ற பயம். ஒன்றில் அவள் சாக வேண்டும், அல்லது நான் சாக வேண்டும்' என்று கலங்கி நின்றான். அப்பொழுது 'அரசே கட்டளையிடுங்கள் நான் அவளைக் கொன்று விட்டு இலங்கை போகிறேன்' என்றான் பார்த்திபேந்திரன். அதற்கு கரிகாலன். 'உன்னால் என்னையும், காதலையும் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் சொன்னவற்றையும், நந்தினியையும் மறந்துவிடு. நாளை நீ இலங்கை போய் அருள்மொழிவர்மனை அழைத்துவா. அவனை பாட்டனாரிடம் விட்டுவிட்டு நாம் இலங்கை செல்வோம். பின்னர் தமிழ் வீரத்தையும், புலிக்கொடியையும் நிலைநாட்டுவோம்' என்றான். அப்போது திருக்கோவிலூர் மலையமான் அங்கு வந்தார். 'நாளை இலங்கை புறப்பட வேண்டும். சென்று தூங்குங்கள்' என்றார்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன்**





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 958



## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
## முல்லைத்தீவு

வற்றாப்பளை கண்ணகை தனது வரவை சிறுவர்கள் மூலம் வெளிப்படுத்த திருவுளம் கொண்டார். அதன் பிரதிபலிப்பாக கண்ணகி வேடத்திலிருந்த மூதாட்டி, சிறுவர்களை நோக்கி "விளக்குக் கொளுத்துங்கோ" என்று கூறினார். விளக்கு வைப்பதற்குரிய எப்பொருளும் இல்லை என்று சிறுவர்கள் கூற, அருகிலிருந்த நந்திக் கடலைக் காட்டி, அதிலிருந்து தீர்த்தத்தைக் கொண்டுவருமாறு கூறினா-ர். அவ்வாறே சிறுவர்களும் அருகிலிருந்த நந்திக்கடல் நீரேரியிலிருந்து நீரைக் கொண்டு வந்தனர். அப்பொழுது மூதாட்டி, தனது சேலையில் சிறிய துண்டைக் கிழித்துத் திரியாக்கித் தீபத்தை ஏற்றினார். பின்னர் அனைவரும் பொங்கலை உண்டு களித்தனர். அதன் பின்னர் சிறுவர்களை நோக்கி, "தலையிலே கடிக்கிறது பேன் பார்த்துவிடுங்கோ" என்று கேட்டார். சிறுவர்களும் சம்மதித்துப் பேன் பார்க்கத் தலைமுடியை விரித்தபோது, தலை

அதன் பின்னர் சிறுவர்களை நோக்கி, "தலையிலே கடிக்கிறது பேன் பார்த்துவிடுங்கோ" என்று கேட்டார். சிறுவர்களும் சம்மதித்துப் பேன் பார்க்கத் தலைமுடியை விரித்தபோது, தலை முழுவதும் ஓட்டையாக, அதிலே கண்கள் இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மூதாட்டியை நோக்கி "என்ன ஆச்சி தலைமுழுக்க ஓட்டையாகக் கண்கள் இருக்கின்றதே" என்று சிறுவர்கள்கூற, தான் யார் என்பதை அச்சிறுவர்களுக்குத் தெரியப்படுத்தினார். "பிள்ளைகளே நான்தான் கண்ணகி, மதுரையிலிருந்து வருகிறேன். ஒவ்வோரிடமாகச் சென்று, இது நான் வந்த பத்தாவது இடம், ஒவ்வொரு வருடமும் இத்தினத்தில் இங்கு வருவேன்" என்று கூறினார். இவ்வாறு சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த தினம், வைகாசி மாதத்திலே வரும் விசாகமும், பறுவமும் ஒன்றிணைந்த பூர்வபட்ச சப்தமித் திதி-யில் வரும் திங்கட்கிழமையாகும்.

சிறுவர்கள் தமக்கேற்பட்ட அனுபவத்தை வீட்டிலுள்ள பெரியோர்களிடம் கூறியபோது, அவர்கள் இக்கதைகளை நம்ம மறுத்தார்கள். ஆனால் அன்றிரவு கண்ணகித் தெய்வம், அவர்கள் கனவில் தோன்றித், தான் யாரென்பதை உணர்த்தினார். இதன் பின்னர் ஊரிலுள்ளோர்க்கு இக்கதை பரவ, அனைவரும் சிறுவர்கள் பொங்கிப் படைத்த இடத்திற்குச் சென்றனர். பொங்கிப்படைத்த அடையாளங்களைக் கண்டு உண்மையுணர்ந்தனர். அத்தோடு மூதாட்டியார் அமர்ந்திருந்த வெட்டப்பட்ட வேப்பமரக் குற்றியில் தளிர்விட்டுக் காணப்பட்டதைக் கண்டு வியப்படைந்தனர். இச்சம்பவத்தின் பின்னர் அவ்விடத்திலிருந்த வேப்பமரத்தடியில், சிறிய கோவிலொன்றை அமைத்து, அதில் கண்ணகிக்குச் சிலை வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறான நிலையிலேயே வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் தோற்றம் பெற்றதென வாய்மொழிக்கதைகள் மூலம் அறிய முடிகின்றது.

தற்காலத்திலே வற்றாப்பளை என அழைக்கப்படும் கிராமம், ஆரம்பகாலத்தில் கண்ணகி ஆலயம் தோன்றிய காலந் தொட்டு, பத்தாம்பளை என்ற காரணப் பெயராலேயே அழைக்கப்பட்டது. கண்ணகி சிறுவர்களை நோக்கி, அவ்விடத்திற்குப் பத்தாவது இடமாக வந்துள்ளேன் என்று கூறிய பின், அக்கால மக்களால் பத்தாம்பளை என்றே அழைக்கப் பட்டது. பின்னர் இப் பெயர் வற்றாப்பளை என மாறியதற்கும் காரணம் கூறப்பட்டுள்ளது. பொங்கல் காலங்களில் பெருந்திரளான மக்கள் இங்கு வருகை தந்து பொங்கலிடுவதால், அன்றையதினம் மாலையில் இப்பகுதியில் காணப்பட்ட கேணியில் நீர் குறைந்து மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இதனால் 1949 ஆம் ஆண்டளவில் இப்பகுதியை ஆய்வு செய்த நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், அண்மையிலுள்ள குளம் தூர்ந்து கிடப்பதைக் கண்டறிந்தனர். அதன் பின்னர் அதனைத் திருத்தி, அருகிலுள்ள கேணிக்குள் நீர்பெருக ஏற்பாடு செய்யும் வடிகால் முறையை அமைத்தனர். அதன் பின்னர் பொங்கல் காலங்களில் மட்டுமன்றி, வரட்சிக்காலங்களிலும் இக்கேணியில் நீர் வற்றுவதில்லை யென்றும், இக்காரணத்தினால் "நீர் வற்றாதஊர்" என்ற கருத்தில், வற்றாப்பளை என அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர் பத்தாம்பளை என்பது மறைந்து வற்றாப்பளை என அழைக்கப்படுகின்றது.

கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையது வேம்பு. அவ்வாறே வற்றாப்பளை கண்ணகிஅம்மன், சிறுவர்களோடு உரையாடும்போது, கலப்பை செய்ய வெட்டிப் போடப் பட்டிருந்த வேப்பங்குற்றியிலேயே தங்கியிருந்தார். பின்னர் மக்கள் சென்று பார்க்கும்பொழுது பட்டமரக்குற்றியில் தளிர் விட்டுக் காணப்பட்டது. இச்சம்பவத்தின் பின் கண்ணகி வழிபாட்டோடு வேப்பமரமும் இப்பகுதி மக்கள் வாழ்கையோடு இரண்டறக் கலந்து விட்டது. வேப்பமரத்தின் சகல பகுதிகளும், இப்பகுதி மக்களால் பல்வேறு தேவைகட்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குளிர்ச்சியும், மருத்துவத் தன்மையும் கொண்டது வேம்பு. இப்பகுதியிலுள்ளவர்கள் அம்மை, சின்னமுத்து, கொப்பளிப்பபான் போன்ற நோய்கள் ஏற்படும் பொழுது, அம்மனுடைய வழிபாட்டில் ஏற்பட்ட குறையாலேயே இந்நோய்கள் ஏறபடுவதாகக் கருதும் ஒரு வழக்கம் இப்பகுதியிலே காணப்படுகின்றது.

இவ்வாறான நோய்கள் ஏற்படும்போது, நோயுற்றோரைத் தனிமைப்படுத்தி, அவர்களைப் பரிசுத்தமாகப் பேணுவர். அத்தோடு நோயுற்றவர் தங்குமிடமெங்கும், வேப்பிலைகளைப் பரவி, வேப்பிலைப் படுக்கையிலேயே படுக்க வைப்பர். நோயுற்ற காலப்பகுதியில் புலால் உண்ணுதலையும் தவிர்ப்பர். இக்காலத்தில் அம்மன் வழிபாடும் செய்யப்படும். குறிப்பிட்ட காலத்தின் பின் சுகமடைந்ததும், முதலில் கண்ணகை அம்மனைத் தரிசித்து வணங்கிய பின்பே, வெளியிடங்களுக்குச் செல்வர். இவ்வாறே பாம்புக் கடிக்கும் வேம்பின் பாகங்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படடு வி'த்திலிருந்து மீட்சி பெறுவர். கண்ணகி அம்மன் இருக்கையாகப் பாவித்து, கிளைவிட்ட மரம் வளர்ந்து செழித்துக் காணப்பட்டது. இப்பகுதி மக்கள் தமக்கேற்படும் நோய் பிணியிலிருந்து தப்ப, இம்மரத்தின் பட்டைகளையும், கி-ளைகளையும் பயன்படுத்தியமையாலும், கால முதிர்ச்சி யாலும், இந்த வேப்பமரம் அழிந்து விட்டதாக இப்பகுதி மக்கள் கூறுவர்.

வளரும்...

ஓம் சக்தி

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

கனடாவின் தாய் மன்றம் — வழிபாட்டு மன்றம் (எண் 3181)

80(E) Nashdene Rd. Unit #99, Scarborough, Tel: 647.436.9647

ஆடிப்பூர பெருவிழா



1. ஆடி அமாவாசை 07-08-2021 சனிக்கிழமை காலை 9:30 தொடக்கம் விசேட பூசை நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

2. ஆடிப்பூரம் 10-08-2021 செவ்வாய்கிழமை காலை 7:30 அளவில் அன்னையின் ருதுசாந்தியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள், பஜனைகள் நடைபெற்று கஞ்சிக்கலசம் நடைபெறும்.

3. வரலட்சுமி பூஜை 20-08-2021 வெள்ளிக்கிழமை மாலை 5:30 மணியளவில் ஆரம்பமாகும்.

கஞ்சி கலசம் எடுக்கும் சக்திகள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். அத்துடன் அன்னைக்கு வேப்பிலை, தேசிக்காய், பழங்கள், பூப் போன்றவையும் அன்பளிக்கலாம்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெற்றுய்யமாறு வேண்டுகின்றோம்.

# கனடாவின் பருவ–இணைய இதழ் உதயன் படைப்பில் தமிழும் சைவமும் கமழ்ந்த மலேசிய மாணவர் குரல் 2021 (2)



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூலை 30:

பாடசாலையை மறக்கவும் வீட்டையே கல்விச்சாலையாக மாற்றவுமான சூழலை உலக மாணவர்களைப் போலவே மலேசிய மாணவர்களும் எதிர்-கொண்டிருக்கின்றனர். இதற்கான அடிப்படைக் காரணம் கொரோனாவின் பெருந்தாக்கம்.





இந்த நிலையில் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் மன இறுக்கத்தைப் போக்கவும் அவர்களின் பேச்சுக் கலையை வெளிக்கொணரவும் அதன்வழி தமிழ் மாணவர்களின் எண்ணவோட்டத்தையும் அளவிடவும் விழைந்த உதயன் இதழ் கடந்த இரு மாதங்களாக நாவண்மை நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

கனடாவாழ் தமிழ் நெஞ்சங்களையும் கடந்து ஏனைய மேலை நாடுகள், ஈழ தேசம், தமிழினத்து தலைநிலமாம் தமிழகம், வளைகுடா நாடுகள், ஆஸ்திரேலியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகள், இன்னும் குறிப்பாக அந்தமான் தலைநகர் போர்ட் பிளேயரில் வாழ்கின்ற தமிழர்கள் உட்பட இலட்சக் கணக்கான தமிழர்களை இணைய ஏட்டின் மூலமாகவும் வாராந்திர அச்சு இதழ் மூலமாகவும் இணைத்து தமிழ் உறவை வளர்க்கும் உதயனின் செம்மாந்த பாங்கை என்னவென்று சொல்வது?

இந்த நிலையில், மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணாக்கர்களையும் தன் பயணத்தில் இணைத்துக் கொண்டுள்ளது கனடா உதயன்.


கடந்த 25-07-2021 ஞாயிறு மாலை 7:00 மணி அளவில் இயங்கலை ஊடாக தொடங்கிய இந்த இரண்டாவது நிகழ்ச்சியில், நல்ல தமிழர்கள் மகிழும் வண்ணமாக சைவ நெறி சிந்தனையும் மலர்ந்து மணம் பரப்பியது இன்பத்தைத் தந்தது.

சமண சமயம் வீழ்ந்தபின் சைவ சமயம்தான் தமிழர்களின் பிரதான சமயமாக விளங்கியது. இந்தியாவை ஒருங்கிணைக்கவும் இஸ்லாமியர்கள், கிறிஸ்துவ சமயத்தினர் போக மீதி உள்ளவர்கள் எந்தெந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்ற புள்ளிவிவரம் ஏதும் இல்லாத நிலையில் பிரிட்டிஷ் நாடாளுமன்றமும் அடிமை இந்தியாவைச் சேர்ந்த பாலகங்காதர திலகர் என்னும் சித்பவன பார்ப்பனர் போன்றவர்களும் கூட்டு சேர்ந்து இந்தியாவில் யாரெல்லாம் இஸ்லாமியர் அல்லரோ, எவரெல்லாம் கிறிஸ்துவர் இல்லையோ அவர்கள் எல்லாம் இந்துக்கள் என்று பிரகடனம் செய்தனர்.

இந்தக் கட்டத்தில்தான் சமணத்துடன் சேர்ந்து சைவம், ஜைனம்,, பௌத்தம், சீக்கியம் போன்ற சமயங்கள் தத்தம் தனி அடையாளத்தை இழக்க ஆரம்பித்தன.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கி, 12,13-ஆம் நூற்றாண்டுகள்வரை தமிழையும் வளர்த்து தானும் செழித்துவந்த சைவ சமயம், தமிழர்தம் இரு விழிகளில் ஒன்றெனத் திகழ்ந்தது.











காலப் போக்கில் இந்து சமயம் என்னும் கட்டமைப்பில் கரைந்துவிட்ட சைவத்தை மீண்டும் பேச வைத்தை இந்த மாணவர் நிகழ்ச்சி, இதில் கலந்து கொண்ட அனைத்து பங்கேற்பாளர்களையும் உள்ளம் குளிர வைத்தது என்றால் அதில் மிகையில்லை.

கடந்த நிகழ்ச்சியைப் போல இந்த நிகழ்ச்சியையும் உதயனின் நிருவாக தலைமை ஆசிரியர் திருமிகு நாகமணி லோகேந்திரலிங்கம் தொடக்கி வைத்தார். மலேசியாவில் மாலை 7:00 மணி என்றால், கனடாவில் அதே தினம் காலை 7:00 மணியாகும்.

அன்றாட பத்திரிகை பணிகளை நிறைவு செய்துவிட்டு தாமதமாக உறங்கச் செல்வதை வழக்காகக் கொண்டிருக்கும் அண்ணன் லோகேந்திர லிங்கம், மலேசிய இளம் மாணவர்களை சந்திக்கும் ஆவலில் காலை ஏழு மணிக்கெல்லாம் சரியாக இணைந்து தலைமை உரையை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசுவதற்கு தயாராக இருந்த மாணவர்களை உற்சாகப் பெருக்குடன் கண்டு, மேலும் ஆக்கமும் ஊக்கமும் பெற்ற உதயன் ஆசிரியர், எதிர்பார்த்ததற்கும் மாறாக சற்று அதிக நேரம் உரையாடியதைக் காண முடிந்தது.

நம் தமிழ் மொழி, தமிழகத்திற்கு அப்பாலும் பரவி விரவி இருக்கிறது என்று சொல்லப்படுவதற்கு தமிழ் ஈழத்தை அடுத்து மலேசியாவிற்கு முக்கிய பங்குண்டு. அந்த வளமார்ந்த மண்ணைச் சேர்ந்தவர்களிடையே உரையாடுவது இன்பம் அளிக்கிறது என்றவர், மலைகள் நிறைந்திருப்பதால் இலங்கையை மலையகம் என்போம் அதைப்போல மலேசியாவையும் மலையகம் என்று அழைக்கலாம் என்றார்.

நிகழ்ச்சியில் பங்கேற்கும் மாணவர்களை தோட்டப்புற மாணவர்கள் என்று ஏன் சொல்ல வேண்டும்?. மலையக மாணவர்கள் என்று அவர்களை அழைத்தால் இன்னும் சிறப்பாயிற்றே என்றெல்லாம் பேசியவர், இந்த நிகழ்ச்சிக்கு அடியும் ஆதாரமுமாக இருக்கும் பாடகர் ரவாங் ராஜாவையும் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் கல்வியாளர் இடைநிலைப்பள்ளி மேநாள் முதல்வர் என்னும் சிறப்புக்கெல்லாம் உரிய பெ.இராஜேந்திரம், நிகழ்ச்சியின் இரு நெறியாளர்களான தாட்சாயணி முத்து மாணிக்கம், அறிவிற்கரசி செல்வராசன் ஆகியோரையும் பாராட்டி தன் நன்றியையும் உதயன் இதழின் சார்பில் தெரிவித்து ஆசிரியர் லோகேந்திரலிங்கம் விடைபெற்று அமைந்தார்.

மு. தாட்சாயிணி தமிழ் வணக்கப்பாடலுடன் தொடக்கி வைத்த இந்த நிகழ்ச்சியை செ. அறிவரசி தொடர மாணவர்கள் ஒவ்வொருவராக பேசத் தொடங்கினார்.

ஐந்து மாணாக்கர்களில் ஒருவர் மட்டுமே மாணவர். அவர்தான் முதலில் பேச அழைக்கப்பட்டார். பெர்லிஸ் கங்கார் தமிழ்ப் பள்ளியைச் சேர்ந்த ஜெஸ்வின் ராஜ் த்.பெ அசோக் செல்வன் என்ற அம்மாணவர் உணர்ச்சிப் பெருக்கோடும் உற்சாகக் குரலோடும் பேசினார்.

"தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற தலைப்பில் பேசியதால் பாவேந்தர் புனைந்த அப்பாடலின் வரிகளை உச்சரிக்க ஐவருமே தவறவில்லை. இளையவர்களான இந்த ஐவரும் மூத்தவளா அல்லது இளையவளா என்று அடையாளம் காண முடியாத தமிழன்னையின் பெருமைதனை எடுத்துரைத்தனர்.

அடுத்தடுத்து பேச வந்த தனுசியா பார்த்தீபன் (ஜோகூர், செடினாக் தோட்ட தமிழ்ப் பள்ளி), மகேசா ஸ்ரீ த்.பெ ஜெகன்ஜீவன்ராம் (நிபோங் தெபால், பைராம் தோட்ட தமிழ்ப் பள்ளி), நிரோஷா மணியரசு (எடின்பரோ தோட்ட தமிழ்ப் பள்ளி) ஆகியோரைத் தொடர்ந்து நிறைவுப் பேச்சாளராக வந்தவர் நர்மதா ஸ்ரீ ரகுராம் (ஜாசின், லாலாங் தோட்ட தமிழ்ப் பள்ளி).

இணைய இணைப்பு சிக்கலால், ஒரு சில நிமிட தாமதத்திற்குப் பின்னரே இந்த நிகழ்ச்சியில் சங்கமித்தார் நர்மதா.

அதற்கிடையில், இந்த குறுகிய இடைவெளியையும் வகையாகக் கையாண்டார் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள். தமிழுக்கும் அமுதென்று பேர் என்று தொடங்கும் பாடலை பாடும்படி கேட்க, உடனே இசைவு தெரிவித்து பாட முயன்ற பாடகர் ராஜா, அதற்கான இசைவட்டு பொருத்தமாக கிட்டாத சூழலில் "அமுதே தமிழே வாழி" என்ற இன்னொரு பாடலைப் பாடி பங்கேற்பாளர்களை மகிழ்வித்தார்.

பேரறிஞர் அண்ணாவால் "கொடுமுடி கோகிலம்" என்று பாராட்டப்பட்ட கே.பி. சுந்தராம்பாளின் பெயர்த்தியைப் போல நெற்றி முழுக்க திருமண் பூசிக் கொண்டு சைவ செல்வியைப் போல காட்சி தந்ததுடன் தமிழன்னையை வணங்குமுன் சைவ நெறி வணக்கத்தை முன்வைத்தார் நர்மதா.

மாணவர்களின் எழுச்சியான உரைக்குப் பின் நன்றியுரை ஆற்ற அழைக்கப்பட்டார் இராஜேந்திரம். இந்த வேளையில், பங்கேற்பாளர்களில் ஒரு சிலர் அடுத்தடுத்து விலகத் தொடங்கினர். ஆனாலும் மலேசியர்களும் கனடியர்களுமாக 70 பேர் நிறைவுக் கட்டம்வரை இணைந்திருந்தனர். இவர்களில் மற்ற நாட்டவர்களும் குறிப்பாக ஈழ நாட்டவரும் தமிழ் நாட்டவரும் இணைந்திருக்கலாம் எனக் கருதுகிறேன்.

நன்றியுரைக்குப் பின் பாராட்டுரை வழங்க கனடாவின் வர்த்தகத் திருமகனார் திரு. பாஸ்கரன் சின்னதுரை அழைக்கப்பட்டார். பரந்த மனதுக்காரரான பாஸ்கரன் அவர்கள் எல்லோரையும் பாராட்டினார். குறிப்பாக, மாணவர்களின் சைவ நெறி வெளிப்பாட்டை வெகுவாகக் குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

ஏடாசிரியர் அண்ணன் லோகேந்திரலிங்கம் அவர்கள் ஏனோ அரசியலில் ஈடுபடவில்லை. அவ்வாறு ஈடுபட்டிருந்தால், அவர் ஓர் அமைச்சராக விளங்கிக் கொண்டிருப்பார். இப்பொழுதுகூட அவர் அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருப்பதை காண முடிகிறது என்று குறிப்பிட்டது பெருமைக்குரியதாக இருந்தது.

கற்றோரை கற்றோரேக் காமுறுவர் என்னும் முதுமொழியைப் போல நல்லோரை நல்லோரே உள்ளத்தால் ஏற்றுவர் என்பது நிரூபணமான அந்த உரையைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட அனைவரும் குழுப்படம் எடுத்துக் கொண்டபின் இந்த நிகழ்ச்சி முற்றுப் பெற்றது.

வாழ்க தமிழ்! வளர்க கனட உதயன்!!

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# கொரோனாவால் இருமுறை பாதிக்கப்பட்ட இங்கிலாந்து வீரர் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார்



ஐந்து மாத இடைவெளியில் இருமுறை கொரோனாவால் பாதிக்கப்பட்ட இங்கிலாந்து வீரர் டாம் டீன், டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

ஆடவர் 200 மீ பிரீஸ்டைல் நீச்சல் போட்டியில் சக நாட்டவரான டங்கன் ஸ்காட்டைப் பின்னுக்குத் தள்ளி 1:44.22 நிமிடத்தில் தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார் 21 வயது டாம் டீன்.



அவரது வெற்றியை அனைவரும் ஆச்சர்யமாகப் பார்க்கிறார்கள். காரணம், கடந்த ஜனவரி மாதம் 2-வது முறையாக கொரோனாவால் அவர் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்தார்.

அதற்கு முன்பு செப்டம்பர் மாதம் முதல்முறையாக கொரோனாவால் பாதிக்கப்பட்டார்.

தனது வெற்றியை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்ட டாம் டீன் கூறும்போது, "ஜனவரியில் கொரோனாவால் மீண்டும் பாதிக்கப்பட்டு எனது பிளாட்டில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த போது தங்கம் என்னை விட்டு வெகுதூரத்தில் இருப்பது போல தோன்றியது. தற்போது கனவு நிறைவேறியுள்ளது. கடந்த சில மாதங்களில் இருமுறை கொரோனாவால் பாதிக்கப்பட்டேன். இது யாரும் கேள்விப்படாதது" என்று குறிப்பிட்டார்.

1908-ம் ஆண்டுக்குப்பிறகு இங்கிலாந்து வீரர்கள் இருவர் தங்கம், வெள்ளி வென்றது இம்முறையே என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிச்சை எடுப்பதற்கு தடை விதிக்க முடியாது: உச்சநீதிமன்றம் உத்தரவு



பிச்சை எடுப்பதற்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

கொரோனா காலத்தில் டிராபிக் சிக்னல், சந்தைப் பகுதி, பொது இடங்களில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்யக் கோரி டெல்லியைச் சேர்ந்தவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தார்.

அவரது மனுவில், "நாடு முழுவதும் உள்ள பிச்சை எடுப்பவர்கள், வீடில்லாதவர்கள், நிலையான இருப்பிடம் இல்லாதவர்கள் பொது இடங்களில் பிச்சை எடுப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். அதேவேளையில் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் சந்திரசூட், எம்.ஆர்.ஷா அமர்வு வழக்கை விசாரித்து பிச்சை எடுக்க தடை விதிக்க முடியாது என்று அறிவித்தனர்.

இதுபற்றி அவர்கள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

வறுமையே காரணம்

"பிச்சை எடுக்கத் தடை விதிக்க வேண்டும் என மனுதாரர் அழுத்தமாகக் கோரிக்கை வைக்கிறார். ஆனால், அவர்கள் ஏன் பிச்சை எடுக்கிறார்கள் எனத் தெரியுமா? மக்கள் தெருக்களில் பிச்சை எடுக்க வறுமையே காரணம். வாழ்வாதாரமின்றி பிச்சைஎடுக்கிறார்கள். உச்ச நீதிமன்றமாக நாங்கள் மேல்தட்டு பார்வையைக் கொள்ளமாட்டோம். பிச்சை எடுப்பதைத் தடை செய்ய முடியாது.

எவரும் விருப்பப்பட்டு பிச்சை எடுக்கவில்லை. இது சமூக, பொருளாதாரப் பிரச்சினை. பிச்சை எடுப்பதற்காக மக்கள் வீதிகளில் இறங்குவது அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத்தைக் காட்டுகிறது. இது ஒரு சமூக, பொருளாதாரப் பிரச்சனை. ஒரு ஆணையால் இதை சரி செய்ய முடியாது. மனிதாபிமான முறையில்தான் இதை அணுகவேண்டும்.

பிச்சை எடுப்பவர்கள், வீடற்றவர்கள், நிலையான இருப்பிடம் அற்றவர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கவும், கொரோனா தடுப்பூசி செலுத்தவும் வைத்த கோரிக்கையை ஏற்கிறோம். இதுதொடர்பாக, மத்திய அரசும், டெல்லி அரசும் பதிலளிக்கவேண்டும்".

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



*20 மாநிலங்களில் தடைச்சட்டம்*

இந்தியாவில் 2011 ஆம் ஆண்டின் மொத்த கணக்குப்படி 4,13,670 பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இதில் 2.2 லட்சம் பேர் ஆண்கள் என்றும், 1.90 லட்சம் பேர் பெண்கள் என்றும், கடந்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை உயர்ந்து இருக்கும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அதிலும் மேற்கு வங்கத்தில் தான் அதிக பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். 20 மாநிலங்களிலும், 2 யூனியன் பிரதேசங்களிலும் பிச்சை எடுப்பதற்கு எதிரான சட்டம் அமலில் இருக்கிறது. இந்த மாநிலங்களில் பிச்சை எடுப்பது ஒரு குற்றமாகும்.

பிச்சைக்காரர்கள் என்று போலீசார் ஒருவரை கருதினால் அவரை பிடித்து நடவடிக்கை எடுக்க சட்டம் வழிவகை செய்கிறது. பிடிபடும் பிச்சைக்காரர்களுக்கு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், தொடர்ந்து பிச்சையெடுத்து பிடிபட்டால் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் விதிக்க முடியும் என்று இந்த சட்டம் கூறுகிறது.

இந்நிலையில் தான் இது தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை அளித்திருக்கிறது.

## வீணாவின் கவிக்கணை

கண்ணிருந்தும்
பார்வையில்லை,
காதிருந்தும்
கேட்கவில்லை,
இதயம் இருந்தும்
ஏனோ மனம்
ஏற்கவில்லை?
யதார்த்ததை,
பசிகொண்ட சிசுவும்,
பாலின்றி தவிக்குது,
முதியோரின் வயிறும்
காய்ந்து கிடக்கிறது,
பட்டினில் உறங்காமல்
மயக்கத்தால்
கிடப்போர் இருக்க,
நீயோ பசியின்றி உணவை
வீணாக்குவதும் ஏனோ?
கண் திறந்து பார்
கருணை கொள்,
செவிமடுத்துக்கேள்
அவர் துயர் துடைக்க,
இரங்க மறுக்காது உன்
இதயம் உதவி செய்ய,
அவர் மனம்குளிர
உன் வயிறும்
குளிர்ந்திடும் என்பேன்.

- மொன்ரியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#56

*(இறுதி அத்தியாயம்...)*

**சி**னிமாவில் கிளைமாக்ஸ் (CLIMAX) காட்சி வருவது போல் கடந்த 56 வாரங்கள் தொடர்ச்சியாக உங்களால் வாசிக்கப்பட்டுப் புகழ்பெற்ற இத்தொடர் கட்டுரைக்கு கிளைமாக்ஸ் என்று புதிதாகக் கற்பனை காட்சி எதுவும் பொருந்தாது.

ஏனெனில் நடிகர் திலகம் அவர்களுடைய திரையுலக வாழ்விலும் சரி, சொந்த வாழ்விலும் சரி எல்லாப் பக்கமும் ரசித்து மகிழ்வதற்கும், சமூகம் - ஒழுக்க நெறியில் வாழ்வதற்குமான பாடநெறிகளாகவே அமைந்துவிட்டன!



திருக்குறள் எனும் நீதி நூலையாத்த மூத்த தமிழ்ப் பெரியோன் ஐயன் வள்ளுவனார் எழுதி வைத்த "புகழ்" அதிகாரக் குறட்பாக்களில் இரண்டு சிவாஜி ஐயாவிற்காகவே எழுதப்பட்டுள்ளது போல் உணர்கிறேன்.

"உரைப்பார் உரைப்பவை எல்லாம்
இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்"

அதாவது, இயலாகவும், இசையாகவும், நாடகமாகவும் சொன்னவர்கள் சொன்னதெல்லாம், இரந்து கேட்ட ஏழைகளுக்கு இல்லையென்னாமல் கொடுத்தவரது புகழைப் பற்றியது தான். தன்னையொரு தான தர்மம் செய்யும் வள்ளலாக விளம்பர வெளிச்சம் காட்டாமல் மக்களுக்கும், நாட்டுக்கும் நடிகர்திலகம் அள்ளிக் கொடுத்து உதவியதை, அந்த நற்பண்பை பலர் இன்றும் அறியாமல் இருப்பது வேடிக்கை தான்.

அடுத்து, "தோன்றின் புகழொடு தோன்றுக் அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

கருவிலே திருவுடைத்தவர் போல் அவதரித்தவர் சிவாஜி ஐயா! (எந்த காரியத்துக்கானாலும்) நடிப்புக் கலையில் பல பேருக்கிடையில் தானேயென்று முன்னாள் வந்தவர். அந்தக் கலையில் யாரும் தொடாத புகழைப் பெற்றவர்.

புகழோடு தோன்றிய சிவாஜி ஐயாவைப் பற்றி எழுதுவதும் பேசுவதுமே புகழ் தருவதாகும்!

நாடக - திரையுலகில் தான் பணியாற்றிய காலங்களைத் தனது "காலமாக" மாற்றிக் "காலமானவர்" நமது சிவாஜி ஐயா ஒருவரேயாகும்.

சிவாஜி ஐயாவை எனது தந்தையும் தாயும் பார்த்து மகிழ்ந்தார்கள். அடுத்த வாரிசான நான் பார்த்துப் பரவசமானேன். எனது வாரிசான எனது பிள்ளைகள் ரசித்தார்கள். நான்காவது தலைமுறை செல்வங்களான எனது பேரக்குழந்தைகள் "இவரா சிவாஜியென்று "கர்ணனை"யும், "கட்டபொம்மனை"யும் கண்டு ஆச்சரியம் மேலிட புருவத்தை உயர்த்துகிறார்கள்.

தலைமுறை இடைவெளியென்று பேசப்பட்டாலும் ஒரு சம்பவத்தை அறியத் தர விரும்புகிறேன். பிரபல மேடைப் பேச்சாளரும், பட்டிமன்ற நாவுக்கரசியுமான திருமதி. பாரதி பாஸ்கர் கூறிய நிகழ்வை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சிவாஜி ஐயா அவர்களுக்குப் புகழ் சேர்த்த பாத்திரப் படைப்புகளில் ஒன்றான "கர்ணன்" படம் 1964 இல் வெளிவந்து மீண்டும் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் நவீன தொழில்நுட்ப (DIGITAL) தயாரிப்பாகத் திரையிடப்பட்டு 150 நாட்களுக்கு மேல் திரையரங்குகளில் காட்சியளித்த வெற்றி விழாவைக் கொண்டாடிய அரங்கு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார் திருமதி. பாரதி. அவர் ஆற்றிய உரையிலிருந்து... "எனது மகள் படிக்கும் பள்ளியில் இருந்து மாணவ மாணவிகளை "கர்ணன்" படத்திற்கு நிர்வாகம் அழைத்துச் சென்றது. புதிய தலைமுறைப் பிள்ளைகள் பாரதக் கதையில் வரும் "கர்ணன்" யார் என்று அறிய வைப்பதற்காகப் பள்ளி நிர்வாகம் பிள்ளைகளை அழைத்துச் சென்றது. எனது மகள் பத்து வயதானவள். அவளுக்கு இப்போதைய நவீன கைபேசி விளையாட்டுகள் - கணனியுடன் கதைப்பது - ஆங்கில மொழிப் பாட்டுக்கள் - இத்யாதி.. இத்யாதிகளுக்கே அறிமுகமானவள். 50 ஆண்டுகளுக்கு முன் வந்த தமிழ் படம் பார்ப்பதில் ஆர்வம் இல்லை. வேண்டா வெறுப்பாகப் பள்ளி நிர்வாகம் சொன்னதை மீறக்கூடாது என அவளும் "கர்ணன்" படம் பார்க்கச் சென்றாள்.

காட்சி முடிந்து வீடு திரும்பும் போது முகம் வாட்டத்துடன் சோகமாக வந்ததை கண்டதும், "என்னமா என்னாச்சு? ஏன் வாட்டமாயிருக்கே?", என கேட்டேன்.

பதில் என்னை வியப்பில் ஆழ்த்தியது!
"அம்மா!, கர்ணன் பாவம் அம்மா!", என்றாள் பாரதக் கர்ணன் யார் என்று எனது பத்து வயது மகள் அறிந்ததையிட்டு மிகவும் நெகிழ்ச்சியானேன்!.

இவ்வாறு, இந்த தலைமுறைப் பிள்ளைகளையும் ஒரு நடிகர் தன்பால் ஈர்க்கிறார் என்றால் அது சிவாஜி ஒருவரால் மட்டுமே சாத்தியமாகும்! என்று திருமதி. பாரதி பாஸ்கர் பெருமையுடன் கூறியதை எண்ணி மகிழ்கிறேன்.

ஸ்தூல உடம்பு மறைந்து இருபது ஆண்டுகளான பின்பும் (அவர்) நடிகர் திலகம் நம்மிடையேதான் உலா வருகிறார். எந்தவொரு நாடக - திரைப்படக் கலைஞரையும் விட சிவாஜி ஐயா அவர்களின் பாத்திரங்கள் நாளும் நினைவில் கொள்ளத்தக்கவையாகும். மலிந்துவிட்ட தொழில்நுட்ப பல்வேறு ஊடகங்களினூடாக தினமும் பேசப்படும், பார்க்கப்படும் - எழுதப்படும் - போற்றிப் புகழப்படும் ஒரே தமிழ் கலைஞன் நடிகர் திலகம் மட்டுமே என்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

பாரதியின் பாடல் வரிகளில் சிவாஜி ஐயாவையும் இணைத்துப் பாடுமளவிற்குத் தனித்தன்மை வாய்ந்த ஒப்பாகும் மிக்காருமில்லாத தமிழ்க்கலைஞன் நமது சிவாஜி ஐயா ஆவார்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு...
வள்ளுவன் தன்னை, உலகினுக்கே... தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் - மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு... கூடவே
சிவாஜிகணேசன் என்றொரு தமிழ்க் கலைஞனை - பெற்றெடுத்த
திருநாடு..., என்று அனைவரும் புகழாரம் சூட்டி பாடப்பட வேண்டிய நமது தமிழ்க் கலைஞனை ஏன் நாம் கொண்டாடுகிறோம் என்றால்... 1950க்குப் பின் பிறந்த தமிழ்ச் சாதி பிள்ளைகளுக்கு அவரே தமிழ் ஆசான்!
"ழ" கரத்தின் உச்சரிப்பு நாயகன்.
அவரது நாவில் கலைமகள் நரத்தனமாடுகிறாள்!
தமிழ்க்குடும்பத்தின் "அண்ணன்" என்றும்,



"தந்தை" என்றும் "தம்பி" என்றும் குடும்பத் "தலைவன்" என்றும், கண்ணிறைந்த "கணவன்" என்றும் படிக்காத மேதை "ரங்கன்" என்றும் குடும்ப ஒற்றுமையை சீரழிக்க கூடாது எனப் பாசத்துடன் போராடிய "பாகப்பிரிவினை" "கண்ணையன்" ஆகவும் மத நல்லிணக்கம் பேணும் "பாவமன்னிப்பு" ரஹீம் ஆக, இவ்வாறு பலப் பல தமிழ் குடும்ப நாயகனாக, தமிழ் பண்பாட்டின் கலாச்சாரக் குறியீடாக, விழுமியங்களின் தோற்றமாக - வடிவங்களாக வலம் வருவதாலும், ஆன்மீக, புராண, இதிகாச, வரலாற்றின் புருஷர்களாக அவர் ஒருவரே அவதாரங்கள் பல எடுத்துக் காட்சிப்படுத்தியதால் அவர் தொடர்ந்தும் கொண்டாடப்படுகிறார்.

இந்தத் தொடரில் அவர் நடித்த பாத்திரங்களில், அவர் காட்டிய வித்தியாசமான நுணுக்கங்கள், உடல் மொழிகள், பாவனைகள் எனப் பல்வேறு விடயங்களை நான் விளக்கமாக குறிப்பிடவில்லை.

அத்தோடு சிவாஜி ஐயாவை இயக்கிய இயக்குனர்கள் - கதை வசனம் எழுதிய வசனகர்த்தாக்கள் - பாத்திரங்களுக்கேற்றவாறு பாடல்கள் புனைந்தவர்கள் - கூடவே நடித்தவர்கள், பின்னணி பாடல் பாடியவர்கள், இசையமைத்தவர்கள் எனப் பல்வேறு சமாச்சாரங்களை, சங்கதிகளை "சிவாஜிகணேசனும் தமிழ் சினிமாவும்" இரண்டாம் பாகம் தொடரில் விரிவாக எழுத உள்ளேன்.

சிவாஜி ஐயாவிடத்து கொண்ட பேரன்பினால் வாரம் தோறும் அவ்வப்போது வெளியிடப்பட்ட கருத்துக்களை, நிகழ்வுகளை, நினைவுகளை ஆதாரத்துடன் வெளிப்படுத்தி உள்ளேன். சில விடயங்கள் நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கலாம். பலவற்றை அறியாமலும் இருந்திருக்கலாம்.

சிவாஜி ஐயாவுடைய நாடக - திரைப்பட வெற்றிகளுக்கு எவை காரணமாயிற்று என்பதை அவர் வாயிலாகப் பதிவு செய்கிறேன்.

"..நான் நடிப்பது 100வது நாடகமாயிருந்தாலும் சரி, 100வது படமாகவிருந்தாலும் சரி, "இன்று தான் என் முதல் நாடகம் நடக்கிறது இன்று தான் என் முதல் படம் வெளிவருகிறது" என்ற எண்ணத்தோடு என் வேலையைச் சிரத்தையாகச் செய்கிறேன். இதுதான் சாதனையின் ரகசியம்.

நாடகத்தில் சென்று, நின்று, இரண்டு, மூன்று காட்சிகளில் வசனத்தைப் பேசி நடித்து மக்களை என் பக்கம் இழுக்கும் வரையில் வேறு எதைப் பற்றியும் என் கவனம் போகாது.

ஒரு நாடகமென்றால் லைட், மைக், சீன், செட் போன்றவைகளைக் கவனிக்க வேண்டும். திடீரென்று ஒரு நடிகன் வரவில்லையென்றால் புது ஆளைப் போட வேண்டி வரும். அவனுக்கு சொல்லிக்கொடுத்து, தட்டிக்கொடுத்து, சப்போர்ட் செய்து, அழைத்துச் செல்ல வேண்டும். இவையாவும் மக்களுக்கு தெரியக் கூடாது. அதனால், ஒவ்வொரு நாடகம் நடிக்கும் போதும், அது புது நாடகம் போல் எண்ணித்தான் நடித்தேன். "இது பழைய நாடகம் தான், எனக்கு பழகிவிட்டது", என்றெல்லாம் அசிரத்தையாக இருக்க மாட்டேன். இன்று வரை அதே போல் தான் நடித்துக் கொண்டு இருக்கிறேன். இதுதான் என் நாடக, திரையுலக வெற்றிக்கு காரணம்.

படங்களை பொறுத்தவரை வித்தியாசமான டைரக்டர், மற்றும் நடிகர்களுடன் ஒவ்வொரு படம் வரும்போதும், அது ஒரு புது படம் மாதிரி தானே, ஒவ்வொரு படமும் புது புது அனுபவம். "நமக்கு எல்லாம் தெரியும். இது என்ன பிரமாதம்", என்று எண்ணினால் கீழே விழுந்துவிடுவோம். ஒவ்வொரு அனுபவமும், அது ஒரு புது அனுபவம் என்று எண்ணி தன்னம்பிக்கையோடு உழைத்தால் வெற்றிப் படிகளில் ஏறிக் கொண்டிருப்போம்.

மேற்கூறிய சிவாஜி ஐயாவின் அனுபவங்கள் மூலம் நீங்கள் எத்துறையினைச் சார்ந்த வராயினும் வாழ்க்கையில் சிகரங்களைத் தொடலாம்.

சிவாஜி ஐயாவின் வாழ்வும், அனுபவங்களும் ஒரு சமுத்திரம். தோண்டியெடுத்த முத்துக்கள் ஏராளம் உண்டு. இன்னொரு சந்தர்ப்பத்தில் அந்த மீதி முத்துக்களால் ஒரு "முத்து மண்டபமே" எழுப்பி விடுவேன்.

நிறைவாக, சிவாஜி ஐயாவின் முதல் படமான "பராசக்தி" படத்திற்கு வசனம் எழுதி அவரை ஒரே இரவில் புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்ற நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு கருணாநிதி ஐயா, தனது உயிர் நண்பனுக்கு எழுப்பிய நினைவுச் சிலை திறப்பு விழாவின் போது விழா மேடையிலேயே எழுதிய புகழ்மாலை வரிகளை, எனது அருமை நண்பர் திரு டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் தனது கம்பீரமான குரலில் இசைத்த பாடல் வரிகளோடு இத்தொடரை கண்ணீர் மல்கி காதலுடன் நிறைவு செய்கிறேன்.



"சிங்கத் தமிழனடா!
சிவாஜிகணேசனடா
எங்கும் புகழ் மணக்கும்
எங்கள் தங்கமடா!
வங்கக் கடலோரம்
சிலையாக வந்தாரடா!
வாழும் நாளெல்லாம்
கலையாக வாழ்ந்தாரடா
பொங்கு தமிழர் கண்டெடுத்த புதையலடா,
புத்தர் வழிவந்த காந்திமகான் பக்தராடா,
பெருந்தலைவர் காமராஜர் விரும்பி நின்ற
வீரமிகு தளபதியடா!
பெரியாருக்குப் பிரியமுள்ள பேரனடா,
வறியோர்க்கு வாரி இறைத்த வள்ளலடா,
பேரறிஞர் அண்ணாவின் தம்பியடா,
பெருங்குடும்பம் கலைக் குடும்ப அருங்கலைஞர்
ஆருயிர் நண்பனடா!
அவர் உயிருக்கு மேலான தோழனடா!
அலைகடல் பெருகி எதிர்த்த போதும்
மலை பல உருண்டு தடுத்த போதும்
கலையுலக வேந்தனுக்குக் கட்டாயம் சிலை
வைத்துத் தீருவோம் என்ற நிலை குலையா
நெஞ்சத்தை பெற்றோமடா..!
தலை வணங்காத் தமிழனுக்கு தமிழ் குலம் போற்றுகின்ற
தன்மானக் கடமைதனைச் செய்தோமடா!
முதல் பாகம் முற்றிற்று!


'கடந்த 56 வாரங்களாக, (ஒரு வருடமும் நான்கு வாரங்களும்) எமது உதயன் வார இதழை அலங்கரித்து, எமது வாசகர்களை வசீகரித்து, எம்மையும் ஈடுபாட்டோடு பங்கெடுக்க வைத்த 'சிவாஜிகணேசனும் தமிழ் சினிமாவும்' கட்டுரைத் தொடர் இன்று தனது பயணத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொள்கின்றது.

இதன் கட்டுரையாளர் வீணைமைந்தன் ஓய்வில்லாமல் எழுதித் தள்ளும் படைப்பாளி. அவருடைய எழுத்துக்களில் சந்தமும் சங்கீதமும் சல்லாபம் செய்வதைப் பார்த்து ரசித்திருப்பீர்கள்.

'பவள விழா' காணப்போகும் எங்கள் ஆகஸ்ட் மைந்தன் எதிர்வரும் 1ம் திகதி அகவை 74ல் அடியெடுத்து வைக்கிறார். 'உதயன்' கட்டுரையாளின் எழுத்துக்களையும் - கவிதைகளையும் வாசித்து நேசிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து அவரைவாழ்த்துவோம்.

தமிழோடு பயணிக்கும் அவரது எழுத்துப் பணி தடையின்றி தொடரட்டும்! இத்தனை வாரங்கள் எம்மோடும் எங்கள் தமிழோடும், என்றும் எம்மவர்கள் கொண்டாடி மகிழும் அமரர் சிவாஜி கணேசன் அவர்களோடும் இணைந்து பயணித்த அவருக்கு உதயன் ஆசிரிய பீடத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துக்களுடன் ஆர். என். லோகேந்திரலிங்கம்**
**"உதயன்" பிரதம ஆசிரியர்**



### ஜீவன் முக்தி (பகுதி ) 119

# வாழ்க்கை எனும் போர்க்களமே நீங்கள் ஞானடைவதற்குத்தான்

ஞானத்தை நம் முன்னோர்கள் மிக அழகாக மகா பாரதக் கதையாகச் சொல்லி வைத்திருக்கிறார்கன். அது அருமையான ஒரு சத்தியம். இந்த வளப்புறு கட்டுறு மனப்பாங்கு கட்டுறுத்தப்படும் மனப்பாங்கு. அது எபபடி நம்மை துக்கத்திற்குளளாக்குகிறது. அதைத் தாண்டி எப்படிப் போய் நாம் ஞானத்திற்குள்ளே மலர்வது? லஷ்யே லச்ஷயமுத்தமம்' லட்சியத்தின் உன்னதமான, அடையப்பட வேண்ள இலக்கை எப்படி அடைவது என்கின்ற சத்தியத்தை, மிக அழகாக மஹாபாரதத்திலே, மஹாபாரதப் போராக நம்முடைய முன்னோர்கள் விளக்கியிருக்கிறார்கள். அதனுடைய சத்தியம் புரிந்தால்தான், மஹா பாரதப் போருடைய தாத்பரியம் புரியும்.
அர்ஜூ னன்தான் ஜீவன். ஜீவன் என்றால் தனி இருப்பு உணர்வு, 'நான்' என்று நீங்கள் இருக்கின்ற இருப்ப உணர்வுதான் அரஜூ னன்.

கிருஷ்ணன்தான் ஞான சத்குரு. ஞானகுருநாதன் கிருஷ்ணன்.
அவர்கள் ஏறி அமர்ந்திருக்கின்ற தேர்தான் இந்த உடல்.
இதற்கு உள்ளே ஜீவாத்மா மட்டுமன்றி பரமாத்மாவும் உட்கார்ந்திருக்கிறார்.
ஜீவாத்மா அனாகதத்திலேயும், பரமாத்மா ஆனந்தகந்தத்திலேயும் உட்கார்ந்து இருக்கிறது.
ஐந்து குதிரைகள்தான் உங்களுடைய ஐம்புலன்கள்.
இரண்டு சக்கரமும்தான் புத்தியும், அகங்காரமும்.
மேல் இருக்கின்ற அந்த அனுமன் கொடிதான் அலைந்து கொண்டே இருக்கிற மனம். அர்ஜூ னனுடைய தேர்க்கொடிதான் அனுமான் கொடி, அலைந்து கொண்டிருக்கிற மனம். அதுதான் அந்தக் கொடி.

இந்தக் கடிவாளம்தான் எண்ணம். எண்ணம் என்பது கடிவாளம். ஐந்து இந்திரியங்கள், குதிரைகள்.
சித்தமும், புத்தியும் தேர்ச் சக்கரம்.
பரமாத்மா, தேரிலே அமர்ந்திருக்கின்ற கிருஷ்ணன், சத்குருநாதன். ஞான சத்குருநாதன்.
வாழ்க்கை என்கிற அந்தப் போர்க்களம் துவங்குகிறது. ஞானமடைதல் என்கிற குறிககோளை நோக்கி அந்தப் போர்க்களம் துவங்குகிறது.

உங்களின் வாழ்க்கை முடிவை நோக்கி செல்லவில்லை.
ஒரு முடிவிலிருந்துதான் துவங்குகிறது.
ஆரம்பிக்கும்பொழுதே மொத்த சத்தியத்தையும், புத்திசாலித்தனமான ஞானகுரு, சீடனுக்குச் சொல்லிவிட்டார். அதுதான் கீதை, வரைபடத்தை காண்பித்துவிடுகின்றார். வரைபடத்தை காட்டாமல் பயணம் செய்யச் சொல்லி, ஞானசத்குரு சொல்வதேயில்லை. ஏனென்றால் உங்களுடைய தர்க்க அறிவிற்கு புரிகின்ற அளவிற்காவது, அந்த வரைபடம் உங்களுக்குக் காட்டப்பட்டால் மட்டும்தான், நீங்கள் நிம்மதியாகத் தேரில் உட்கார்ந்து இருப்பீர்கள்.
தேரை ஓட்டப்போவது தேரோட்டியாக இருந்தாலும், அவரை திரும்பத் திரும்ப தொந்தரவு செய்து கொண்டே இல்லாமல் இருக்க வேண்டும் அல்லசா?
ஒரு சின்ன உதாரணம். ரெயில் வண்டியில் ஏறி உட்கார்ந்து விட்டீர்கள். ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை ஓட்டுனரைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு சரியாகத்தான் சென்று கொண்டிருக்கிறாயா? செல்லும் ஊருக்குத்தான் சென்று கொண்டிருக்கிறோமா? டில்லிக் அந்தப் பக்கமாயிற்றே, வண்டி இந்தப் பக்கம் போகின்ற மாதிரி இருக்கிறதே என்று கேட்டுக் கொண்டே இருந்தால் என்ன ஆவார் ஓட்டுநர்?

ஒன்று அவர் கீழே குதித்து விடுவார். இல்லை. உங்களைக் கீழே தள்ளிவிடுவார்.
பரமாத்மா, அந்த மாதிரி மர்மங்களை எல்லாம் வைப்பதில்லை. தர்க்கரீதியாக உங்களுக்குப் புரிகின்ற மாதிரி, இந்த பட்டறிவிற்குத் தெளிவைக் கொடுத்து விடுகிறார். அதைத்தான் கிருஷ்ணன் முதலில் செய்தார். ஆரம்பிக்கும்பொழுதே முதலில் செய்தார். அதற்குத்தான் தீசைஷ என்று பெயர்.

அர்ஜூ னனுக்கு, ஞானசத்கரு நாதனாகிய கிருஷ்ணன் அளித்த தீஷைதான் பகவத் கீதை.

ஞானத்தை அடைவதற்கான பாதையை, பட்டறிவோடு, கொடுத்தது மட்டும் இல்லை. தன்னால் அர்ஜூ னனுக்கு ஞானத்தை அளிக்க முடியும் என்பதற்கு நிருபணமாக முதல் அனுபவத்தையும் காட்டிவிட்டார்.
விஸ்வருப தரிசனம்! வேறு ஒன்றும் இல்லை. ஞான சத்குருவினுடைய சக்தியை, சத்தியத்தை சீடனுக்கு விளக்கினார். அதுதான் விஸ்வருப தரிசனம்.
எப்போதாவது, இங்கு குருமுன்னால் உட்கார்ந்து மலைத்துப்போய் என்னடா என்னுடைய உணர்வை எல்லாம் தாண்டிய ஏதோ ஒன்று இங்கு நடந்துகொண்டிருக்கிறதே, என்று கண்களில் தாரை தாரையாக கண்களில் நீவார்த்து, மலைத்துப் போய் அசந்து போய் தோழ்வலிமை இழந்து விழந்தது உண்டுஎன்றால் உங்களுக்கு விஸ்வருபதர்சனம. வாழ்க்கையில் ஒருதரமாவது நடந்திருக்கிறது. அதுதானள் விஸபரூபதரிசனம்.

மலைத்துப் போய் சாதாரண மனிதன் மாதிரித்தானே கிருஷ்ணன் முன்னால் உட்கார்ந்து இருக்கிறார்.

நம்மைமாதிரி அசைகின்ற எலும்பும், தசையும், உடலுமாகத்தானே இருக்கிறது. என்னடா நடந்தது, என்னடா நடக்கிறது என்று மலைத்துப் போய் தேள்சரிந்து விழுந்த நேரம்தான், விஸ்பருபதரரிசனம். எப்போதாவது சத்குருவின் முன்னால் அது நடந்திருந்தால் அந்த விஸ்பருபத்தின் அனுபவம் உங்களுக்குள் நடந்திருக்கிறது என்று அர்த்தம்.
அர்ஜூ னனுடைய தர்க்க அறிவை உருத்தெரியாமல் குலைத்து விட்டது விஸ்பருப தரிசனம். அதாவது கிருஷ்ணனாலே, அர்ஜூ ணனுக்கு உணர்வாக மாற்றப்படுகிறது.

அதற்குப் பின்னால்தான் அர்ஜூ ணனுக்கு, லட்சியத்தை நோக்கிய பாதையிலே வாழ முடியுமம், செல்ல முடியும் என்ற தைரியமே அப்போதுதான் வருகிறது. அதுவரையிலும் ஞானப் பாதையிலே போவதற்கான தைரியமே இல்லை. இங்கே வருகிற பிரம்மச்சாரிகள் சிலர் ஆஸ்ரமத்திலிருந்து பரிவராஜகம் ஒடிப்போய்விடுவார்கள்.
அதாவது சோம்பேறித்தனத்தினாலே செயல்பட முடியாத தன்மையை நியாயப்படுத்துவதற்காக தானே எடுத்துக் கொள்கின்ற முடிவுகளுக்கெல்லாம் ஆன்மீக ரசம் பூசுவது.
போல தியன நுட்பங்களிலே வாழ்க்கையைக் கழிப்பது, கடவுளாக மாறுவதற்கான சரியான நுட்பத்தைக் கடைப்பிடிக்காமல், போலியான நுட்பங்களை கடைப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள்தான் போலிச் சாமியார்கள். அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை.

நுட்பம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் சரியான தியான நுட்பம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் ஒருவேளை அர்ஜூ னன் அப்போது சாமியாராகப் போயிருந்தார் என்றால் போலிச்சாமியாராக ஆகியிருப்பார்.
கிருஷ்ணன் மாதிரி ஒரு ஞானகுரு கிடைத்ததினால் தப்பித்தார். பிறகுதான் அர்ஜூ னனுக்கு அந்தத் தைரியமே வந்தது. செல்லுகின்ற
பாதையும் தெளிந்து, தெளிந்து செலுத்துபவனுக்குச் சக்தி இருக்கிறது என்ற தெளிவும் வந்ததினால், சித்தம் தெளிந்து அர்ஜூ னன் வில்லை சீர்தூக்க நிறுத்தி போரைத் துவங்கினார்.
உலகத்தின் மிக நீண்ட காவியம்... உங்கள் வாழ்க்கைதான்
அருமையான கதை பாரதக் கதை மகாபாரதம். முழுக்கவுமே பாரத்தீர்கனென்றால், ஞானத்தை வெளிப்படுத்துகின்ற சத்தியம்.
இதுவரையிலும், உலகத்தில் எழுதப்பட்டிருக்கின்ற காப்பியங்களிலேயே மிகநீண்ட காவியம் மஹாபாரதம்தான். அதை இன்னமும் யாரும் தாண்ட முடியவில்லை.
ஒரு லட்சம் சுலோகங்கள்.
அந்த சமஸ்கிருத அமைப்பைப் பார்த்தால் தெளிவாகத் தெரிகிறது. ஒரே ஒரு மகான் எழுதியதுதான் என்று.
அதைவிட நீளமான புத்தகம் இன்னம் எழுதப்படவில்லை. அவ்வளவு பெரிய மகத்தான நூல்.
தீக்சைஷ கொடுத்த தைரியத்தினாலே, அரஜூ னன் ஞானத்தை நோக்கிய ஞானப்பாதையை, லட்சியத்தை நோக்கிக் கிளம்புகின்றார். தைரியமாகக் கிளம்புகின்றார். முதல் பத்து நாள் போரும் பீஷ்மரை எதிர்த்து நடைபெறுகிறது. அதுதான் மஹாபாரதம். அதுதான் உங்கள் வாழ்க்கை.

நம்முடைய வளப்புறு கட்டுறு மனப்பாங்கு
நன்றாக ஆழ்ந்து பாருங்கள். மஹாபாரதக் கதை புரிந்திருந்தால் தெரியும். பீஷ்மர்தான் அந்த மொத்த வம்சத்திற்கும் பிதாமகன். முதலில் பீஷ்மர்தான் தலையெடுப்பார். தாத்தா சொன்னார். பாட்டி சொன்னார். அப்பா சொன்னார் என்ற வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கு அதுதான் முதலில் வரும். அதுதான் மிகப் பெரிய பாகம். அதனால்தான் 18 நாள் மஹாபாரத யுத்தத்தில் 10 நாட்கள் பீஷ்மரோடேயே சண்டை போட வேண்டியதாகப் போயிற்று.
அதற்கு அர்த்தம் என்னவென்றால், உங்கள் வாழ்க்கையில் ஞானத்தை நோக்கிய பாதையை நீங்கள் கடப்பதற்கு 18 நாள் ஆகுமென்றால் நீங்கள் 10 நாள் கட்டுறு மனப்பாங்குடன் சண்டை போட வேண்டியிருக்கும்.
வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கோடு, வலிமையான ஒரு கட்டுறுத்தப்பட்ட மனப்பாங்கு இந்த வளர்ப்புறு கட்டுறு மன்பாங்கு.

பெற்றோராலே ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள், கட்டுறுத்தல்கள் மொழி, இனம், ஜாதி, இந்த எல்லா கட்டுறு மனப்பாங்குதான். பீஷ்மர் செய்ததுதான். அதனால்தான் பீஷ்மரை எதிர்த்து 10 நாட்கள் சண்டை நடக்கிறது. வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கை அழிக்க வேண்டும்.
ஆனந்த கந்தத்தில் இருந்த பரமாத்மா எப்போது உங்களை வழி நடத்த ஆரம்பித்தாரோ, முதலில் அழிவது வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்காக இருக்கும். அதுதான் அழிகிற ஆரம்பமாகும்.

கிருஷ்ணன், உடலாகிய ரதத்தில் ஐந்து இந்திரியங்களான குதரைகளைப் பூட்டி, சித்தமும், புத்தியுமாகிய தேர்ச்சக்கரங்களைப் பூட்டி சஞ்சரித்துக் கொண்டே இருக்கின்ற மனமாகிய அனுமன் கொடியை ஏற்றி, எண்ணங்கள் என்கிற அருமையான கயிற்றினைப் பூட்டி, யுக்தி எனும் சாட்டையால், ஜீவாத்மா எனும் அர்ஜூ னனை வழி நடத்தினார்.

தேர் உருண்டு ஓடியது. முதலில் வருகின்ற எதிரி பீஷ்மர் (வளர்புறு கட்டுறு மனப்பாங்கு) 10 நாள் சண்டை நடந்தது. பத்து நாள் சண்டைக்குப் பிறகு எப்படி பி ஷ்மர் அழிந்தார் என்று பாருங்கள். பீஷ்மரை கடைசிவரை நேரடியாக சாகடிக்க முடியவில்லை. சாகடிக்க முடியாது.

வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கை நேரடியாக எதிர்த்துப் போராடி, அழித்துச் சண்டையிடவே முடியாது.
ஏனென்றால் உங்களையே உருவாக்கிய சக்தியாயிற்றே அது! எப்படி அழிக்க முடியும்.

எந்தச் சக்தி முன்னால் அந்த வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கு வேலை செய்யாதென்று நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதைத்தான் கிருஸ்ணன் கண்டுபித்தான். யார் முன்னால் பீஷ்மர் சண்டையிட மாட்டார என்று கண்டுபிடித்தார் கிருண்ணன்.
யார் முன்னால்?
சிகண்டி முன்னால்.
சிகண்டி ஒரு அலி. அவர் முன்னால் பீஷ்மர் வில்லெடுக்க மாட்டர் பலவீனமாகி விடுவார் என்று தெரிந்து, சரியாக கிருஷ்ணபரமாத்மா என்ன செய்தார்ட சிகண்டியை அழைத்து வந்து முன்னே நிறுத்தினார்

நாம் என்ன செய்யவேண்டும்? வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்குமீது எந்த மன அமைப்பு மேல் வேலை செய்யாதென்று நாமே கண்டுபிடிக்க வேண்டும்? வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கு மீது எந்த மன அமைப்பு மேல் வேலை செய்யாதென்று நாமே கண்டுபிடிக்க வேண்டும். அந்த மாதிரி கண்டுபிடித்தால் அந்த மன அமைப்பை, அந்த கட்டுறு மனப்பாங்கின் முன்னால் நிறுத்த வேண்டும்.

*(தொடரும்...)*

---

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# இவ்வார ராசிபலன்

## 30-07-2021 வெள்ளி தொடக்கம் 05-08-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கக் கூடிய அற்புதமான வாரம். மதி நுட்பம் தேவை. டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் பலன் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். அற்புதமான நாளாக அமையும். நன்மைகள் நாடிவரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**ரிஷபம்:** பாக்கியமான சூழ்நிலைகள் படியேறி வரக்கூடிய நல்ல வாரம். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்று உபாதை வந்துசேரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**மிதுனம்:** பற்றாக்குறைகள் நீங்கி எட்டாக்கனி கிடைக்கக் கூடிய ஏற்றமான வாரம். பொறாமைகள் விலகும்நாள். பிரார்த்தனைகள் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். தாய் நலனில் கவனம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனைத் தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். அன்னதானம் ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவியார், அதிர்ஷ்ட எண்: 6,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**கடகம்:** மனிதநேயம் மிகுதியாகக்கூடிய மகத்தான வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ராஜயோக ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**சிம்மம்:** குறிப்பான முன்னேற்றம் கிடைக்கக்கூடிய சிறப்பான வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அழகுநாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**கன்னி:** உண்மையான நன்மைகளை சந்திக்கக்கூடிய உறுதியான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**விருச்சிகம்:** முத்துக்கு முத்தான பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய அற்புத வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபடவேண்டிய தெய்வம்: மேட்டுப்பாளையம் பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**தனுசு:** பிதா வழி உறவுகளால் பெருமை சேரக்கூடிய அருமையான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமி'ன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: மும்மாரி முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: OJ





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** நன்மையான விஷயங்களை உண்மையாக சந்திக்கக்கூடிய நல்ல வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாகம் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**கும்பம்:** மறுப்பே இல்லாத மாற்றங்கள் கிடைக்கக்கூடிய மகத்தான வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தர்மதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: வழிவிடும் வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U

------------------------------------------

## Let us support Daily Bread Food Bank

## உணவு தேவைப்படுவோருக்கு உதவிடுவோம் வாருங்கள்

When:
**Saturday, July 31, 2021**
**from 10 AM to 2 PM**


Where:
**Global Kingdom Ministries Parking Lot**
**1250 Markham Road**
**(Markham and Ellesmere, follow the signs)**

**You're Invited:**
**Food Bank Drive-Thru**



Hon. John McKay, P.C.
M.P. for Scarborough-Guildwood

FOOD BANK DRIVE-THRU
In support of
Daily Bread Food Bank



# "மார்க்கம் பீச் கடற்கரையில் 27வது வருடமாக"

## கீரிமலை மாவிட்டபுரம் கந்தசாமி தீர்த்தம்

# ஆடி அமாவாசை விரதம்

**07.08.2021 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.00மணி வரை**

**தீர்த்தம், தர்ப்பணம், சிவலிங்க பூஜை, வழிபாடு,**
**மோட்ச அர்ச்சனை பிரார்த்தனை, பஜனை, மகேஸ்வர பூஜை**
**(ஆடி அமாவசை விரதச் சாப்பாடு)**

மிசிசாகா பிறம்ரன் ஸ்ரீ கணேசதுர்க்கா தேவஸ்த்தான பிரதம குரு சிவ ஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜ குருக்கள் அவர்களின் தலைமையில், பல அந்தண சிவாச்சாரியர்களும் கலந்து சிறப்பிக்கிறார்கள். 27வது வருடத்தில் மார்க்கம் பீச் (Markham Beach, Sibbald Point Provincial Park) கடற்கரையில் காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சென்ற வருடங்களைப் போல் இவ்வருடமும் ஆடி அமாவாசை தினத்தில் அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களுக்கு தீர்த்தக் கடற்கரையிலேயே சிறப்பான சுத்தமான சைவ விரதச் சாப்பாடு தலை வாழை இலையில் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:-** மார்க்கம் பீச் கடற்கரையில் வழக்கமாக வருடா வருடம் வழமையாக நடைபெறுவது போன்று இம்முறையும் ஆடி அமாவாசை விரதத்திற்காக அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து விரதகார அன்பர்களும் கலந்து கொண்டு வாழ்வில் வளம் பெறுக.

**தீர்த்தக்கரையில் சங்கர்ப்பம் செய்து அனைவரும் தீர்த்தமாடி தர்ப்பணம் செய்யும் வசதியும் தலை வாழை இலை அறுசுவை விரதச் சாப்பாடும் மார்க்கம் பீச் கடற்கரையில் மட்டுமே உண்டு.**





**மேலதிக தொடர்புகளுக்கு**
**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**
**905-501-0011 | 905-405-001 | 416-271-2181**
**ஸ்காபரோ-திரு.சின்னத்தம்பி கனகலிங்கம் 416-844-0565**
**திரு-சோமசச்சிதானந்தம் 647-202-3234**

# அன்பின் தொனி - 619

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy
நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று - **1 பேதுரு 1: 16**

பரிசுத்தம் என்ற சொல்லிற்கு கர்த்தராகிய தேவாதி தேவனைத்தவிர வேறு ஒருவரையோ ஒரு படைப்பையோ மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான எதையுமே அவருக்கு நிகராக ஒப்பிட்டுக்காட்ட முடியாது. பரிசுத்தத்திற்கு நிகர், பரிசுத்தராகிய பரம தேவன் மட்டும்தான். பரலோக இராட்சியத்தில் கோடா கோடி தேவ தூதர்கள் எல்லா வேளைகளிலும் அந்த பரிசுத்த தேவனை பரிசுத்தர்! பரிசுத்தர்!! பரிசுத்தர்!!! என்று துதித்துக்கொண்டே இருக்கின்றனர். அவருடைய பரிசுத்தத்திற்கு முன்னதாக எந்த ஒரு படைப்பும் நிற்கமுடியாது.

கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? - **யாத்திராகமம் 15: 11**

பரிசுத்தரான தேவன், பாவம் அறியாதவர், பழுப்படாதவர், பாகுபாடு காட்டாதவர், சகலத்திலும் ஒழுங்குள்ளவர், நீதிபரர், ஒன்றிலும் தவறாதவர், இப்படியாக அவருடைய பரிசுத்த மகத்துவத்தை விபரிக்க வார்த்தைகளே போதாது. அவருடைய பரிசுத்தத்தை வேதாகமம் மேலும் விபரித்துக் கூறுகிறதாவது:

அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர். - **உபாகமம் 32: 4**

**தேவனுடைய பரிசுத்தத்தில் இரண்டு முக்கியமான அம்சங்கள் உண்டு.**

முதலாவது, ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் விபரித்திருக்கும் அவருடைய மகத்துவமும் மேன்மையும், தேவ தூதர்களால் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று துதிக்கும் துதி.

ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன், அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன, அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத் தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடு கிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது. - **ஏசாயா 6: 1-4**

இரண்டாவதாக காணப்படும் குணாதிசயம், அவருடைய தூய்மையான நற்குணம். உலகத்தின் தீமைகளால் கறைபடாததும் தொடுபடாததுமான பரிசுத்த நிலை. இவைதான் எமது வாழ்க்கைக்கும் வேண்டியதான எடுத்துக்காட்டும், தேவையுமாய் இருக்கிறது. தேவனுடைய சகல குணாதிசயங்களையும் பெயரிட்டுப் பாாப்போமாயின், அவருடைய பரிசுத்தம் எல்லாவற்றிற்கும் மேலாகவும் முன்னதாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக அன்பு தேவனுடைய குணாதிசயங்களில் ஒன்றாக இருந்தாலும், அந்த அன்பு ஒரு பரிசுத்த அன்பு. அவருடைய பிரசன்னம் - பரிசுத்த பிரசன்னம், அவருடைய சிங்காசனம் - பரிசுத்த சிங்காசனம், அவருடைய வார்த்தை - பரிசுத்த வார்த்தை. இப்படியாக அவருடைய சகல குணாதிசயங்கள், செயற்பாடுகள் யாவும் பரிசுத்தமானவை.

தேவரீர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி, பரிசுத்தமும் மகிமையுமுள்ள உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து பாரும், - **ஏசாயா 63: 15**

கர்த்தர் நிமித்தமும், அவருடைய பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும் நான் வெறித்திருக்கிற மனுஷனைப்போலவும் மதுபானம் மேற்கொண்டவனைப்போலவும் இருக்கிறேன். - **எரேமியா 23: 9**

தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார், தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். - **சங்கீதம் 47: 8**

அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக, உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். - **யாத்திராகமம் 3: 5**

"பரிசுத்தம்" என்று சொல்லும்போது அது சாதாரணமான, தெய்வீகமற்ற, வேண்டாத, உலகத்திற்குரிய நிலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அல்லது துண்டிக்கப்பட்ட தன்மையைக் கருதுகிற ஒரு நிலை.

"பரிசுத்த நாள்" என்று சொல்லும்போது அது ஏனைய நாட்களைவிட ஒரு பிரத்தயேகமான நாள். அதேபோல "பரிசுத்த பூமி" என்று கூறும்போது அவ்விடம் மற்ற இடங்களைவிட பிரித்தெடுக்கப்பட்ட விசேட பூமி. இப்படியாக "பரிசுத்தம்" என்னும் தூய வார்த்தை தேவனுடைய பரிசுத்தத்தோடு இணைந்த ஒரு சொல்லாக அமைகிறது.

**1. தேவனுடைய பரிசுத்தம் அவருடைய வார்த்தைக்கூடாக விளங்குகிறது.** God's holiness is known through His Word.

வேதாகமத்தில் காணப்படும் படிப்பினைகள், பரிசுத்த தேவனிடத்திலிருந்து உண்டாகி, பரிசுத்த ஆவியானவர் மூலம் உந்தப்பட்டு, தேவ மனுஷர்களால் எழுதப்பட்ட ஜீவ வார்த்தைகள். எனவேதான் அதை பரிசுத்த வேதாகமம் என்று கனப்படுத்திக் கூறுகிறோம்.

தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன், - **சங்கீதம் 60: 6**

தொடரும்...




30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
Sumeet
Aachi
LEMON RICE POWDER
GARAM MASALA
Vidiem
Your All Day Companion
ABC
Mini Library
Fair Lovely
NESCAFE Sunrise
BRU
KILLI
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25ஆது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM - 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3

உதயம் 1321 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 30, 2021

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் இவ்வருட தேர்திருவிழா கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது



ஸ்காபுறோ நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் இவ்வருட மஹோற்வசத்தின் தேர்திருவிழா கடந்த சனிக்கிழமை (25ம் திகதி) காலை தொடக்கம் சிறப்பாக நடைபெற்றது.
ஆலயத்தின் பிரதம குருவும் ஸ்தாபகருமான சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது சக சிவாச்சாரியார்கள் சகிதம் தேருக்கு அருகில் அர்ச்சனை மற்றும் பூசைகளை ஆற்றி வர, தேர்த்திருவிழா உபயகாரரான வர்த்தகப் பிரமுகர் திரு கணேசன் சுகுமார், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன், உட்பட பலர் அங்கு தேரின் முன்பாக நேர்த்தியாக நடந்து வர ஆலயத்தின் வெளிவீதி வழியாக அழகுடன் நகர்ந்தது.

# BisRing நிறுவனமானது தனது சந்தாகாரர்கள் அதிக பலன் பெறவேண்டும் என்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது

## பல்லின ஊடகவியலாளர்கள் சந்திப்பில் BisRing அதிபர் அகிலன் தேவா தெரிவிப்பு



- (ரிச்மண்ட் ஹில் நகரிலிருந்து சத்தியன்)

**BisRing** நிறுவனமானது தனது சந்தாகாரர்கள் அதிக பலன் பெறவேண்டும் என்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எமது **BisRing** நிறுவனத்தின் ஸ்தாபக வரலாறு, மற்றும் எங்கள் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள விரும்பியே ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள பல்லின ஊடகவியலாளர்களை நான் இங்கு அழைத்துள்ளேன்.
எமது நிறுவனத்தின் முக்கிய நோக்கம், ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள வீடு விற்பனைத் துறை முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோருக்கும் வீடு மற்றும் சொத்துக்களிலும் வர்த்தக முதலீடுகளிலும் தேவைப்படும் சேவைகளை வழங்கக் கூடிய நிறுவனங்களை இணைத்து அவர்கள் பலனடையும் வண்ணம் வழிகாட்டுவதே எமது **BisRing** நிறுவனத்தின் பிரதான பணியாக இருக்கும்.” இவ்வாறு தெரிவித்தார் நிறுவனத்தின் தலைவர் அகிலன் தேவா அவர்கள். *(உள்ளே 5ம் பக்கத்தில் தொடர்ச்சி)*

# கனடா - தென்மராட்சி நிறுவனம் நடத்திய ஒன்றுகூடலும் ஊடகவியலாளர்கள் சந்திப்பும்

## தென்மராட்சி நிறுவன கிளைகளோடு இணைந்து பல கல்வி சார் நற்பணிகளை முன்னெடுத்து வரும் முற்போக்கான செயற்பாடுகள்...

கனடா- தென்மராட்சி நிறுவனம் நடத்திய ஒன்றுகூடலும் ஊடகவியலாளர்கள் சந்திப்பும் கடந்த சனிக்கிழமையன்று மேற்படி நிறுவனத்தின் தற்போதைய தலைவரும் **TIMES IRON WORKS INC**. என்னும் பொறியியல் நிறுவனத்தின் தலைவருமான திரு தேவதாஸ் அவர்களின் இல்ல வளாகத்தில் இடம்பெற்றது. மதிய உணவோடு கூடிய ஒரு சந்திப்பாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.
மேற்படி நிகழ்விற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ’ஆசிரியர் தனது பாரியாருடன் கலந்து கொண்டார். பல்வேறு ஊடக நண்பர்கள் அங்கு கலந்து கொண்டார்கள். *(உள்ளே 12ம் பக்கத்தில் தொடர்ச்சி)*




# திருகோணமலை அங்குவெளி கிராமத்தில் வாழும் பெண்மணிக்கு சக்கர நாற்காலியை வழங்கிய கனடா வர்த்தகப் பிரமுகர் பாஸ்கரன் சின்னத்துரை

திருகோணமலை மாவட்டத்தின் அங்குவெளி கிராமத்தில் வாழும் கைலாயமணி என்னும் பெண்மணிக்கு கால்களால் நடக்க முடியாத அளவிற்கு உபாதைகள் இருந்தமையால் அவருக்கு ஒரு சக்கர நாற்காலி தேவைப்படுகின்றது என்பதை அங்கிருந்த சமூக சேவகி திருமதி தர்சி கனடாவின் ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பினருக்கு அறியத்தந்தார்.
.தொடர்ந்து ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பினர் கனடா வர்த்தகப் பிரமுகர் திரு பாஸ்கரன் சின்னத்துரையை இது தொடர்பாக அணுகியபோது அவர் சக்கர நாற்காலி ஒன்றை கொள்வனவு செய்வதற்குரிய பணத்தை வழங்கினார்.
.
சில நாட்களுக்கு முன்னர் மேற்படி கைலாயமணி என்னும் பெண்மணிக்கு சக்கர நாற்காலி வழங்கப்பெற்றது.
(படம்: அரவிந்தன் - செய்தி:- சத்தியன்)




இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய வாரத்திற்கு $50 மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள் 416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய வாரத்திற்கு $50 மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள் 416-752-1524